20 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733



Dr. Iru Vijayanathan
DENTAL SURGEON
DENTAL OFFICE
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022



நதி 20 | பாலம் 20 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 15, 2010


# தேர்தல் களம் - ஒக்ரோபர் 25, 2010

கனடாவில் மூன்று மட்டத்தில் அரசுகள் நடைமுறையில் இருப்பது தெரிந்ததே. இவை மத்திய அரசு, மாகாண அரசு மற்றும் நகரசபைகள் (Municipalities) ஆகும். இந்நகரசபைகள் அங்கு வாழும் மக்கள் தொகை, நிலப்பரப்பிற்கேற்ப பிரதேசசபை, மாநகரசபை அல்லது நகர-





சபை என்று அழைக்கப்படும். இவற்றில் மூன்றாவது அரசனா நகரசபைக்கான தேர்தல் ஒன்றாறியோவில் இம்மாதம் ஒக்ரோபர் 25, 2010 இல் நடைபெற உள்ளது. முன்னைய காலங்களில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையே இந்த தேர்தல் நடைபெற்று வந்தது. 2006 ஆம் ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை இந்த தேர்தல் நடைபெற வேண்டுமென ஒன்ராரியோ மாகாண அரசு சட்டமாற்றம் செய்தது. தேர்தல் நடந்து நாலாவது ஆண்டில் வரும் ஒக்ரோபர் மாதத்தின் நான்காவது திங்கட்கிழமையில் இந்த தேர்தல் நடைபெறுதல் வேண்டும். இந்த திகதி இப்பொழுது நிரந்தரமாக சட்டமாக்கப்பட்டுள்ளது.

ஒன்றாறியோ மாகாணத்தின் ரொறொன்ரோ மாநகரம் ஒரு தனிப்பட்ட மாநகர அரசாகக் கொண்டு தேர்தல் நடைபெறுகின்றது. இதில் 44 வட்டாரங்கள் உண்டு. இவற்றிற்கான 44 நகரசபை அங்கத்தவர்களுக்கும் (City Councillor), 39 பொது பாடசாலைசபை உறுப்பினர்களுக்கும் (Public District School Board Trustee), கத்தோலிக்க பாட-சாலை சபை உறுப்பினர்களுக்கும் (Catholic District School Board Trustee), பிரெஞ்ச் பாடசாலைசபை உறுப்பினர்களுக்கும், ஒரு நகர முதல்வருக்கும் (Mayor) தேர்தல் நடைபெறுகின்றது. ரொறொன்ரோவை சுற்றியுள்ள பகுதிகள் எட்டு பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டு தேர்தல் நடைபெறுகின்றது. ஒன்ராரியோவில் மொத்தமாக 444 நகரசபைகள் உள்ளன. ஒன்ராரியோவில் ரொறொன்ரோ மாநகரமே மிகப் பெரிய நகரமாக உள்ளது. கனடாவின் நகரங்களிலும் ரொறொன்ரோ நகரமே பெரியது.

ரொறொன்ரோ நகரத்தின் தேர்தலே தமிழ் மக்களிற்கு முக்கியமானதாக கருதப்படு கின்றது. 1600 இற்கு மேற்பட்ட வாக்கு சாவடியில் 10,000 இற்கு மேற்பட்ட மக்கள், தேர்தல் நாளாகிய ஒக்ரோபர் 25, 2010 திங்கட் கிழமை தொண்டர்களாக பணிபுரிய உள்ளார்கள். தேர்தல் நாளிற்கு முன்பாக (Advanced Polling) ஆறு இடங்களில் (City Hall உம் ஐந்து Civic Centres உம்) ஆறு நாட்கள் ஒக்ரோபர் 5,6,7,8,12,13 ஆம் திகதிகளில் வாக்குப்பதிவு செய்யக்கூடிய வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால் இந்த திகதிகளில் காலை 10 மணிமுதல் மாலை ஆறு மணிவரை மட்டுமே தேர்தல் வாக்களிப்பு நிலையங்கள் திறந்திருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளவும். ரொறொன்ரோவிற்கு வெளி யில் உள்ள சில நகரசபைகள் இணையத் தளம் மூலம் வாக்களிக்கும் முறையை இம்முறை அமல்படுத்தியுள்ளது என்பது ஒரு சிறப்பம்சமாகும். இந்த தேர்தலில் கீழேயுள்ள தகைமைகளை கொண்டிருப்பவர்கள் வாக்களிக்க உரிமையுள்ளவர்களாவர்.

1. 18 வயதிற்கு மேல்
2. கனடியன் பிரஜா உரிமை
3. குறிப்பிட்ட நகரில் வாழ்பவர்.

ரொறொன்ரோ தேர்தலில் 476 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் உள்ளார்கள். இவர்களில் 40 பேர் நகரமுதல்வர் பதவிக்காக போட்டியிடு கின்றார்கள். 44 நகரசபை அங்கத்தவர்கள் பதவிக்கு 279 பேர் போட்டியிடுகின்றார்கள். 88 பேர் பொதுப்பாடசாலை சபை உறுப்பினர் பதவிக்கும் 59 பேர் கத்தோலிக்க பாடசாலைசபை உறுப்பினர் பதவிக்கும் 10 பேர் பிரெஞ்ச் பாடசாலை சபை உறுப்பினர் பதவிக்கும் போட்டியிடுகின்றார்கள். பிரெஞ்ச் பாட-சாலை சபை உறுப்பினர்கள் இருவர் ஏற்கனவே போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ரொறொன்ரோ மாநகர முதல்வர் தேர்தலில் 40 பேர் போட்டி யிட்டாலும் முன்னணியில் இருப்பவர்கள் முறையே றொப் போர்ட் (Rob Ford) மற்றும் ஜோர்ஜ் சிமித்தமன் (George Smitherman) ஆவர். இவர்களில் ஒருவரே நகரமுதல் வருக்காக தெரிவு செய்யப்படலாம் என தேர்தல் பற்றிய அறிக்கைகள் தெரியப்படுத்துகின்றன. எனினும் எமது புதிய நகரமுதல்வர் யார் என்பது October 25, 2010 மாலையே தெரியவந்து விடும்.


தொடர்ச்சி 02ஆம் பக்கம்



RBC Royal Bank
Switch your Mortgage to RBC
And Consolidate Your Debts for FREE!
• No Lawyers Fee • No Appraisal Fee • No Discharge Fee
•1st Time Home Buyers •Pre-Approvals
•Debt Consolidation
•Home Equity Line of Credit
•New Immigrant & Self-Employed Programs
•Over 20 years of experience with RBC
•Fast and Efficient Service
Always with a Smile!!!
Nala Brodie
Mortgage Specialist
(416) 409-4900
Nala.Brodie@Rbc.com
Markham&14th Ave
Greater Toronto Region
Let Me Optimize Your Mortgage Payments and other Debt Payments



GSF Golden Store Fixtures
Friend for your Business
905-565-6555
1 877-565-6554
Store Planning, Design & Installation
» Acrylics
» Counter Top Displays
» Gift Bags & Ribbons
» Glass Displays
» Grid Panels & Accessories
» Mannequins
» Pegboard & Accessory
» Racks
» Shopping Cart & Baskets
» Showcases
» Sign & Sign Holders
» Slatwall & Accessories
» Steel Shelving
» Wood Displays
And Much More.........
355 Admiral Blvd, Unit #5
Mississauga, Ont, L5T2N1
www.goldenstorefixtures.com
sales@goldenstorefixtures.com



RBC Royal Bank®
உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்
Gteat Options for all your Mortgage needs
• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers.
• Pre-approvals.
சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்
Paskaran K. (Paski) Mortgage Specialist
416.569.3099 /416.288.9855
E-mail: paskaran.kanagasabapathy@rbc.com



Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585



Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated



துரித பணமாற்றுச் சேவை
• 52 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 19 வருடங்கள் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221



வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated



VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

# தேர்தல்...



நீதன் சண்



நமு பொன்னம்பலம்



லோகன் கணபதி



செந்தில் வரதராஜா



பார்த்தி கந்தவேள்



அஸ்வின் பாலமோகன்



றோய் விக்கினராஜா



ஜோசவ் றெமிசியார்



தீபன் விக்கினராஜா



யுனிற்ரா நாதன்



நீதன் சபா

கடந்த எட்டு வருடங்களாக பதவியிலிருந்த நகரமுதல்வர் டேவிட் மில்லர் நடைமுறைக்கு கொண்டுவந்த இரண்டாவது நிலமாற்றுவரி (Land Transfer Tax) ஆதன வியாபாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியது. அத்துடன் இந்த வரி மக்களுக்கு மிகவும் நெருக்கடியைக் கொடுத்தது. முன்னணியில் இருக்கும் றொப் போர்ட் தான் பதவிக்கு வந்தால் இரண்டாவது நிலமாற்றுவரியை நீக்க இருப்பதாகவும் மற்றும் நகரசபை அங்கத்தவர்களாக இப்பொழுது இருந்துவரும் 44 வட்டாரங்களை 22 ஆக குறைக்க இருப்பதாகவும் கூறியுள்ளார். இவர் நீண்ட கால ரொறொன்ரோ வாசி. றொப் முன்னைய ஒன்ராரியோ அரசின் நாடாளுமன்ற உறுப்பினர் டக் போர்ட் (Doug Ford) இன் மகனாவார். இவர் 2001 ஆம் ஆண்டிலிருந்து ரொறொன்ரோ மாநகரத்தின் 2ஆம் வட்டாரத்தின் (Etobicoke North) மாநகரசபை அங்கத்தவராக இருந்து வருகின்றார். அரசியலிற்கு வருவதற்கு முன்பாக தனது சொந்த தொழிலில் ஈடுபட்டு அதை மிகவும் சிறப்பாக நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரிற்கு மனைவியும் மகனும் மகளுமாக இரண்டு பிள்ளைகளும் உள்ளார்கள்.

றொப்பிற்குப் போட்டியாக இருப்பவர் ஜோர்ஜ் சிமித்தமன் ஆவர். இவரும் நீண்டகாலம் ரொறொன்ரோவிலே வாழ்ந்து வருகின்றார். நகரசபை முதல்வர் பதவிக்கு போட்டியிடுவதற்கு முன்பாக இவர், ஒன்ராரியோ மாகாண அரசின் உறுப்பினராக 10 வருடத்திற்கு மேலாக பதவி வகித்துள்ளார். இவரிற்கு “NOW” சஞ்சிகை சிறந்த மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் (MPP) என்ற பெயரை சஞ்சிகையின் வாசகர்களின் தெரிவுமூலம் பெற்றுக் கொடுத்தது. தனது மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு ரொறொன்ரோ நகரமுதல்வர் பதவிக்காக போட்டியிடுகின்றார். இவர் அரசியலிற்கு வரமுன்பு மளிகைப் பொருட்களை சில்லறை வியாபாரமாக (Retail Business) செய்து வந்தார். ஜோர்ஜ் Christopher Peloso என்ற ஆணை திருமணம் செய்துள்ளார்.

ஒவ்வொரு தடவையும் நடைபெறும் தேர்தல்களில் போட்டியிடும் தமிழ்மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனை அவதானிக்கலாம். 2006 இல் நடைபெற்ற நகரசபை தேர்தலில் முதல்தடவையாக மார்க்கம் நகரசபையின் அங்கத்தவராக இலங்கைத் தமிழரான லோகன் கணபதி தெரிவு செய்யப்பட்டிருந்தார். இம்முறையும்

தொடர்ச்சி 03ஆம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை ‘விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்’ ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA**

***TEL: 416-282-8059*** ***FAX: 416-282-4978***

***e-mail: vlambaram@sympatico.ca*** ***Web: www.vlambaram.com***



## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிட இருக்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம், அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications, 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059*
*3. Fax 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca*
*5. web: vlambaram.com*

# தேர்தல்...

இவர் அதே வட்டாரத்தில் (வட்டாரம் 8) போட்டியிடுகின்றார். இதே தொகுதியில் செந்தில் வரதராஜா என்ற தமிழரும் இவருடன் போட்டியிடுகின்றார். கடந்த தேர்தலில் மார்க்கம் பொதுப்பாடசாலை சபை உறுப்பினராக நீதன் சண் வெற்றி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. இம்முறை நீதன் சண் ரொறொன்ரோ வட்டாரம் 42இல் மாநகரசபை அங்கத்தவர் பதவிக்காக போட்டியிடுகின்றார். இதே வட்டாரத்தில் நமு பொன்னம்பலம் மற்றும் வேந்தன் ராம-நாதவவுனியர் என்பவர்களும் இவருடன் போட்டியிடுகின்றனர்.

பொதுவாக இரண்டு வட்டாரங்கள் சேர்ந்த பகுதிக்கு ஒரு கல்விச்சபை உறுப்பினர் தெரிவுசெய்யப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக 41 மற்றும் 42 வட்டாரங்கள் கல்விச்சபை வட்டாரம் 21 என அழைக்கப்படும்.

ரொறொன்ரோ கல்விச்சபை வட்டாரம் 21இல் தீபன் விக்கினேஸ்வரன் மற்றும் நாதன் கதிர்காமராஜா போட்டியிடு கின்றார்கள்.

மேலும் அஸ்வின் பாலமோகன் கல்விச்சபை வட்டாரம் 22 இற்கும், றோய் விக்கினராஜா கல்விச்சபை வட்டாரம் 20 இற்கும், பார்த்தி கந்தவேள் கல்விச்சபை வட்டாரம் 18 இற்கும் போட்டியிடுகிறார்கள்.

மிசிசாகாவில் சாம் செல்வராஜா, மிசிசாக நகரமுதல்வர் பதவிக்கும் வரதன் அருள்சுந்தரம் பொதுப்பாடசாலை சபை உறுப்பினர் பதவிக்கும் (வட்டாரம் 9 /10 இல்) போட்டியிடுகின்றார்கள்.

மார்க்கத்தில் கல்விச்சபை வட்டாரம் 4இல் (வட்டாரம் 7 / 8 இல்) யுனிற்ரா நாதன் மற்றும் நீதன் சபா ஆகியோர் பொதுப்பாட-சாலை சபை உறுப்பினர் பதவிக்கும் வட்டாரம் 8 இல் ஜோசப் மோகன் ரெமிசியர் மார்க்கம் நகரசபை உறுப்பினர் பதவிக்கும் போட்டியிடுகின்றனர்.

2010ஆம் ஆண்டு தேர்தலில் கனடிய பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பல இலங்கைத்தமிழர்கள் போட்டியிடுவது நல்லதொரு எதிர்காலத்தை நோக்கி எமது அரசியல் செல்வது போலத் தோன்றினாலும் ஒரே வட்டாரத்தில் ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுவதால் வெற்றிப் பலத்தை குறைக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளது. தகுதியானவர்களை தேர்வு செய்வதன் மூலம் ஆரோக்கியமான பாதையில் அரசியலை முன்னெடுக்க முடியும். தேர்தலில் போட்டியிடுவதும் அதில் வாக்களிப்பதும் எமது கடமையுடனான உரிமையும் ஆகும்.

# தாய்லாந்தில் 155 தமிழ் குடிவரவாளர்கள் கைது

தாய்லாந்திற்கு சுற்றுலாப்பயணிகள் விசா மூலம் வந்து காலம் முடிவடைந்து நாட்டைவிட்டு வெளியேறாமல் இருந்த 155 தமிழ் குடிவரவாளர்கள் ஒக்ரோபர் 12ஆம் திகதி பாங்கொக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களைக் கைது செய்வதற்கு கனடிய அரசாங்கம் உதவியதா? என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது. இவர்கள் கனடா நோக்கிக் கப்பலில் பிரயாணம் செய்வதற்காகவே தாய்லாந்தில் தங்கியிருந்ததாக சந்தேகிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட 155 தமிழர்களின் நிலை தொடர்பாக கனடியத் தமிழர் பேரவை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இவர்கள் அனைவரும் அதிகளுக்கான சட்டத்தின் பிரகாரம் பாதுகாப்புத் தேவைப்படும் அகதிகள் என்றே நம்பப்படுகின்றது. மீண்டும் தங்களின் சொந்த நாட்டுக்கு அனுப்பப்படின் அவர்கள் அங்கு துன்புறுத்தல்களுக்கு ஆளாகக் கூடும் என்பதோடு அங்கு துன்புறுத்தப்படலாம் என்னும் நியாயமான அச்சம் இவர்களுக்கு உள்ளது. அவர்கள் சிறிலங்காவுக்குத் திருப்பி அனுப்பப்படின் அங்கு நிச்சயமாக சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். இது ஐக்கிய நாடுகள் சபையின் வதைகளுக்கு எதிரான சட்டத்தின் பிரகாரம் கனடாவுக்கு உள்ள கடப்பாட்டை மீறுவதாக உள்ளது. சிறிலங்காவில் போர் முடிவடைந்ததில் இருந்து பாதுகாப்புத் தேடி தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் பல்வேறு நாடுகளுக்குச் சென்றுகொண்டுள்ளனர். கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் புகலிடம் கோரிய ஒரு நாடாக தாய்லாந்து இருந்து வந்தது. இவர்களில் கூடுதலான தமிழர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையாளருடன் பதிவு செய்துள்ளனர்.

இந்தக் கைதுகளில் கனடிய அரசாங்கத்தின் பங்கு இருந்தால் இலங்கை திருப்பி அனுப்பப்பட்டு அங்கு சித்திரவதைக்குள்ளானால் கனடிய அரசு இதற்குப் பதிலளிக்க வேண்டிவரும் என வன்கூவரைச்சேர்ந்த குடிவரவு சட்டத்தரணி றிச்சாட் கேர்லன் (Richard Kurland) தெரிவித்துள்ளார். தாய்லாந்து அரசு அகதிகளைப் பேணும் ஐக்கியநாடுகள் சபை ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. ஆனால் கனடா அதில் கையெழுத்திட்டுள்ளது. இதனால் அகதிகள் தொடர்பாக கனடா பொறுப்பாக நடக்கவேண்டும் என்று ரொறொன்ரோவைச் சேர்ந்த குடிவரவுச் சட்டத்தரணி லோன் வால்ட்மன் (Lorne Waldman) தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை உறுப்பினர்கள்



ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு 15 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஐந்து பேர் நிரந்தரமாக சீனா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியத்தை சேர்ந்தவர்கள். ஏனைய 10 உறுப்பினர்களும் 2 வருடத்திற்கு ஒரு தரம் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களில் 5 உறுப்பினர்களின் தெரிவு ஒவ்வொரு வருடமும் நடைபெறும். ஐந்து நிரந்தர உறுப்பினர்களுக்கும் வீட்டோ (Veto) உரிமையுள்ளது. கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட ஐந்து உறுப்பினர்களும் கிழக்கு ஐரோப்பா (Bosnia), பிறேசில், ஆபிரிக்கா (Gabon), அரபு நாடுகள் (Lebanon) மற்றும் நைஜீரியாவை சேர்ந்தவர்கள். இவ்வருட ஒக்ரோபர் நடுப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட புதிய ஐந்து உறுப்பினர்களும் தென்ஆபிரிக்கா, இந்தியா, கொலம்பியா, ஜேர்மனி மற்றும் போர்த்துக்கல்லை சேர்ந்தவர்கள் ஆவர்.

இம்முறை நடைபெற்ற தேர்தலில் தென்னாபிரிக்கா, இந்தியா மற்றும் கொலம்பியா ஆகிய மூன்று நாடுகளும் போட்டியின்றி பாதுகாப்பு சபை உறுப்பினராக தெரிவாகினார்கள். ஆனால் மேற்குலக நாடுகளுக்கான இரண்டு உறுப்பினர்களை தெரிவு செய்ய ஜேர்மனி, போர்த்துக்கல், கனடா ஆகிய மூன்று நாடுகளும் போட்டி போட்டன. பாதுகாப்பு சபை உறுப்பினராக வருவதற்கு மூன்றில் இரண்டு வாக்குகளை பெற வேண்டும். ஜேர்மனி முதலாவது சுற்று வாக்கெடுப்பிலேயே மூன்றில் இரண்டு வாக்குகளை பெற்று தெரிவாகியது. இரண்டாவது சுற்று வாக்கெடுப்பிலும் ஒரு நாடும் மூன்றில் இரண்டு வாக்குகளை பெறாதபடியால் குறைந்த வாக்குகளைப் பெற்ற கனடா போட்டியிலிருந்து விலகியது. இதனால் மூன்றாவது சுற்று வாக்களிப்பில் போத்துக்கல் தெரிவாகியது. கனடா இதுவரை காலமும் பாதுகாப்பு சபைக்கு போட்டியிட்ட போதெல்லாம் உறுப்பினராக தெரிவாகியது. இம்முறைதான் கனடா முதற்தடவையாக பாதுகாப்பு சபை உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டு தோற்றது என்பது குறிப்பிடத்தக்கது. கனாடாவின் தோல்விக்கு பல காரணங்கள் தெரிவிக்கப்பட்டாலும் கனடாவின் தற்போதைய அரசின் வெளிநாட்டுக் கொள்கைகள்தான் முக்கிய காரணம் என ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர். முந்திய கனடிய அரசு கையெழுத்திட்ட சுற்றுப்புறச்சூழல் மற்றும் காலநிலை மாறுதல் சம்பந்தமாக Kyoto இல் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடன் எடுக்கப்பட்ட உடன்பாட்டில் இருந்து தற்போதைய கனேடிய அரசு தன்னிச்சையாக விலகிக்கொண்டது, மற்றைய ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படாததே இத்தோல்விக்கு காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் கனேடிய அரசோ எதிர்கட்சிகள் தங்களுடன் ஒத்துழைக்காததே இத்தோல்விக்கு காரணம் என்று கூறுகின்றது.

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL


# செல்வம் உங்களுக்குத் துன்பத்தை வரவழைப்பதில்லை

பொருள் சேர்க்கத் துவங்கி விட்டால் பிறகு வாழ்க்கையில் துன்பங்களும் சேர்ந்துவிடுமா என்ற சாதகரின் கேள்விக்கு சத்குரு அளித்த பதில்:

பணம் உங்களுக்குத் துன்பத்தை வரவழைப்பதில்லை. முட்டாள்தனம்தான் உங்களுக்குத் துன்பத்தை வரவழைக்கிறது. பணம் உங்கள் வாழ்க்கையில் நுழையும்போது முட்டாள்தனமும் உங்கள் வாழ்க்கையில் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். அந்த நிலையில் துன்பமும் சேர்ந்து வரலாம். அதற்காக பணம் வந்து விட்டாலே துன்பமும் வந்தாக வேண்டும் என்று கிடையாது. பணம் உங்களுக்கு நிச்சயமாக வசதிகளைக் கொண்டுவருகிறது.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.ort / www.ishayoga.org

ஆனால் வசதிகள் ஏன் துன்பமாக மாற வேண்டும்? நாம்தானே வசதியை நாடினோம்? அப்படியிருக்க, நாம் விரும்பியதே நமது துன்பத்திற்கு ஏன் காரணமாக வேண்டும்? மனிதர்களின் பெரிய பிரச்சினை இது. பல நேரங்களில் இரண்டு விடயங்கள் சேரும்போதுதான் சமநிலை கிடைக்கிறது. ஆனால் நாம் ஒன்றை வைத்துக் கொள்கிறோம். அதனுடன் இணைந்த மற்றொன்றை முழுவதுமாய் மறந்து விடுகிறோம். காலையில் சாப்பிட உட்கார்கிறீர்கள். ஊறுகாய் மிகவும் சுவையாக இருக்கிறது. இப்போது மற்றவற்றை மறந்து விடுகிறீர்கள். ஊறுகாய் மட்டுமே வயிறு நிரம்ப சாப்பிடுகிறீர்கள். மாலையே பிரச்சினை ஆரம்பித்து விடுகிறது. அடுத்த நாள் காலை வரை கூட அது காத்திருக்காது.

அதே போலத்தான் செல்வமும் செழுமையும். அவை உங்கள் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வரும்போது மிகவும் அழகாக இருக்கும். உங்களிடம் போதுமான பணம் இருந்தால் அடுத்த நாள் வேலை செய்வதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. நீங்கள் விரும்பினால் கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் உட்கார்ந்து விடலாம். இன்று சம்பாதித்தால்தான் நாளை உணவு என்ற நிலையிலிருப்பவர் விரும்பினாலும் அப்படி தியானத்தில் உட்கார முடியாது. எனவே பணம் உங்களுக்கு துன்பத்தை வரவழைப்பதில்லை. முட்டாள்தனம்தான் எப்போதுமே துன்பமானது. நீங்கள் ஆன்மீக ரீதியாக முட்டாளாக இருக்கிறீர்களா, அல்லது பொருளாதார ரீதியாக முட்டாளாக இருக்கிறீர்களா என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல.

ஏராளமானோர் தினமும் கோவில், மசூதி, மாதா கோவிலுக்குச் செல்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து திரும்பிவரும்போது அவர்கள் முகத்தைக் கவனித்திருக்கிறீர்களா? அவர்கள் முகம் மகிழ்ச்சியாக மாறியிருக்கிறதா? நான் 11 வயதாக இருக்கும்போது இது என்னை மிகவும் குழப்பியிருக்கிறது. அந்த வயதில் நான் ஒரு பெரிய கோவில் வாசலில் நிறைய நேரம் உட்கார்ந்து கொண்டு கோவிலிலிருந்து திரும்பி வருபவர்களைப் பார்த்துக் கொண்டேயிருப்பேன். கடவுளைப் பார்த்து வந்த பின் அவர்கள் முகம் பிரகாசமாக மாறியிருக்கிறதா என்று கவனிப்பேன். கோவிலிலிருந்து திரும்பிவரும் போது ஒருவருக்கொருவர் "கிசுகிசு"வோடு திரும்பி வருவதைத்தான் அதிகம் கவனித்திருக்கிறேன். கடவுளைப் பற்றி பேசுவதை விட கோவிலில் பார்த்த மற்ற மனிதர்களைப் பற்றிக் கிசுகிசுவோடு வெளிவருவதைத்தான் நான் அப்போது கவனித்தேன். அல்லது அவர்கள் விட்டுச் சென்ற செருப்பு வேறு யாரோடாவது நடந்து போய் விட்டால் இந்த உலகத்தையே, ஏன் கடவுளைக் கூட சபிக்க ஆரம்பித்து விடுவதைப் பார்த்திருக்கிறேன்.

கோவிலிலிருந்து வெளிவரும் மனிதர்களின் முகத்தைவிட ஹோட்டலிலிருந்து வெளிவரும் மனிதர்களின் முகம் அதிகப் பிரகாசமாக இருக்கிறது. அதிக மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் வெளி வருகிறார்கள். இது மிகவும் வெட்கக் கேடானது, இல்லையா? தெய்வீகத்தை விட தோசை அவர்களுக்கு அதிக திருப்தியைத் தந்திருக்கிறது. எனவே தெய்வீகமா, செழுமையா, தோசையா என்பதல்ல கேள்வி. மனிதர்கள் விஷயங்களை மோசமாகக் கையாண்டால் எப்படியும் துன்பம் நிச்சயம் வருகிறது.

துன்பம் செழுமையால் வரவில்லை. பணம் அவர்களின் சட்டைப் பைக்குள் போவதற்கு பதிலாக அவர்கள் தலைக்குள் போனதால்தான் துன்பம் வருகிறது. அதை சட்டைப் பைக்குள் மட்டும் வைத்துச் கொண்டால் அது மிகவும் அற்புதம். பணம் இருக்க வேண்டிய இடம் அதுதான், உங்கள் தலை இல்லை. பணத்தை சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு இவ்வுலகில் அற்புதமான பணிகள் பலவற்றை செய்யமுடியும்.

பணம் உங்களுக்கு துன்பத்தை கொண்டு வருகிறது என்றால் அதை என்னிடம் கொடுத்து விடுங்கள். அதை வைத்து இந்த



## சத்குரு வாசுதேவ்

உலகில் பல விஷயங்கள் செய்ய முடியும் (சிரிக்கிறார்). அது என்னை துன்பத்தில் ஆழ்த்தாது. ஏனெனில் பணம் என் தலைக்குள் இறங்குவதில்லை. நீங்கள் வசதியாக இருப்பதற்கும், மற்றவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து தருவதற்கும் பணம் வழி செய்து கொடுக்கிறது. பல வழிகளில் அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது.

உலகில் மனிதர்களுக்கிடையே இதுதான் ஒரு பெரிய போராட்டமாக இருக்கிறது. உலகின் மேற்கு பகுதியையும், கிழக்கு பகுதியையும் பார்த்தீர்கள் என்றால், மேற்கு பகுதியில் உள்ளவர்கள் உள்நிலையை சரியாகக் கையாள்வதில்லை. அமெரிக்க நாட்டில் உள்ளவர்களில் 40 சதவீத மக்கள் அவர்களின் வாழ்க்கையில் ஏதாவது ஒரு முறையாவது மன அழுத்தத்திற்கான மருந்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. சம நிலையில் இருப்பதற்கு 40 சதவீத மக்கள் மருந்து உட்கொள்கிறார்கள். இது மனித நலனுக்கு உகந்த விஷயமாக இல்லை. உலகின் மேற்கு பகுதியில் உள்ளவர்கள் வெளியில் தான் அனைத்தும் இருக்கிறது என நினைத்து உள்சூழ்நிலையைக் கவனிக்க மறந்து விடுகிறார்கள். எனவே அவர்களுக்கு வாழ்க்கை ஒரு குழப்பமாகி விடுகிறது.

இங்கு, இந்தியாவில் வேறு விதமான தவறு நடக்கிறது. எல்லாவற்றையும் சொர்க்கமாக நினைத்து தற்போதைய வாழ்க்கையை மறந்து விடுகிறார்கள். இங்கு பெரிய கோவிலைக் கட்டுவார்கள், ஆனால் சரியான கழிவறை இருக்காது. இது இந்தியர்களின் பிரச்சினை. எல்லாமே சொர்க்கத்தில் இருக்கிறது என்று நினைத்து தற்போது தாங்கள் வாழும் உலகை மறந்து விடுகிறார்கள், எனவே அதற்கான விலை யைக் கொடுக்கிறார்கள். எனவே எப்போதும் இந்த இரண்டிற்கும் இடையிலான ஒரு சமநிலையைக் கொண்டிருக்க வேண்டும்.

# உன்னைப்பிடிக்கும்



உன் கடு கடுப்பான வார்த்தைகள்
பிடிக்கவில்லை
என்மீது அப்பப்ப
கரிசனை காட்டி
உதவிடும் போது
உன்னைப்பிடிக்கிறது
உன் அலையும் மனசு
பிடிக்கவில்லை
நான் மனம் சோரும்
போது
திடமாக இருந்து
உதவிடும் போது
உன்னைப்பிடிக்கிறது
வரவுக்கு மீறிய செலவு
பிடிக்கவில்லை
வறியவர்க்கு செலவிடும் போது
உன்னைப்பிடிக்கிறது
நேரம் இல்லையென்று பரபரக்கும் போது
உன்னைப்பிடிக்கவில்லை
திட்டம் போட்டு செயற்படும்போது
உன்னைப்பிடிக்கிறது
உன் அரட்டை அரங்கம் பிடிக்கவில்லை
உண்மை உறவுகள் சூழும் வேளை
உன்னைப்பிடிக்கிறது
என்னைப்பிடிக்கலையா?
என்று உன் மனதுக்குள் கேட்பது
காதில் விழுகிறது
எத்தனை எத்தனை காலமாக
தொடர்ந்து வந்த சொந்தம் என்று
கடந்த காலங்களை மீட்டுப்பார்க்கையில்
உன்னை மேலும் பிடிக்கிறது
அளவிடமுடியாது தவிக்கிறேன்
அமுதிலும் மேல்
உன்னைப்பிடித்திருக்கிறது.

---ரஞ்சி கதிர்---

# மின்வலையில்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

வைத்தியர் கட்டுரையை வாசித்து விட்டு ஆச்சரியப்பட்டதாகவும், தனது மிசி (Multiple Sclerosis) நோயாளிகள் யாவரையும், அவர்கள் ஏதாவது செயற்கை இனிப்புகள் (Sweetness) எடுக்கிறார்களா எனக் கேட்கப் போவதாகவும் கூறினார்.

சுருங்கக் கூறின் எனது சகோதரி, டயற் சோடாவிலிருந்த அஸ்பட்டமி (Aspartame) என்ற நச்சுப் பொருளால் படிப்படியாக இறந்து கொண்டிருந்தார். புளோரிடாவுக்கு சென்றபோது அவர் அஸ்பட்டமி நஞ்சூட்டலுக்கெதிரான மாத்திரை மட்டுமே எடுத்தார். படிப்படியாக உடல்நிலை முன்னேறுகிறது. கட்டுரை அவரது உயிரைக்காப்பாற்றியது.

அன்பர்களே அஸ்பட்டமி உள்ள பொருட்களை உண்ணாதீர்கள். இதைத் தயாரிக்கும் நிறுவனங்கள் தமது வியாபாரம் பாதிப்படைவதைத் தடுப்பதற்குப் பல இலட்சம் டொலர் செலவு செய்து இத்தகவலை வெளிவராது ஊடகங்களின் உதவியுடன் இருட்டடிப்புச் செய்கிறார்கள். இவ்வாறு சில மருந்துகள் கூடப் பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதாகத் தற்போது அறியப்படுகிறது.

# மின்வலையில் வந்தவை - 3

எமக்குப் பயனுள்ள பல விடயங்கள் மின்னஞ்சலில் வருகின்றன. அவற்றுள் யாவருக்கும் பயன்படுபனவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என இப்பகுதியை ஆரம்பித்துள்ளேன். உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

சென்ற வாரம் சில உடல் நலம் பற்றிய தகவல்கள் தந்திருந்தேன். இவ்வாரம் சில முக்கியமான தகவல்கள் பற்றிப் பார்ப்போம்.

**மூளையைப் பாதிக்கும் எமது பழக்கங்கள் சில...**



**- துறையூரான் -**

**1. காலை உணவு உண்ணாமை.**
காலை உணவு உண்ணாதவர்களின் குருதியில் வெல்லம் குறைவாக இருக்கும். இதனால் மூளைக்குப் போதியளவு போசாக்குகள் போகாமையினால் மூளை சிதைவடையும்.

**2. கூடுதலாக உண்ணல்.**
அதிகமாகச் சாப்பிடுவதால் மூளையின் நாடிகள் (Arteries) தடிப்பாகி, மூளையின் வலுகுறைய நேரிடும்.

**3. புகைத்தல்.**
இதனால் மூளை சுருங்க ஆரம்பித்துப் பின்னால் அல்சைமர் நோய் (அறளை) ஏற்படலாம்.

**4. சீனி அதிகமாக உட்கொள்ளல்.**
கூடியஅளவு சீனி உட்கொண்டால் புரதப் பொருள்களும் போசாக்குப் பொருள்களும் அகத்துறிஞ்சலில் தடையேற்பட்டு போஷாக்கின்மை ஏற்பட்டு மூளை வளர்ச்சி பாதிப்புக்குள்ளாகும்.

**5. காற்று மாசடைதல்.**
எமது உடலில் அதிகளவு ஒட்சிசனை உட்கொள்வது எமது மூளையே. மாசடைந்த காற்றை சுவாசிப்பதால் ஒட்சிசன் குறைவாக மூளைக்குச் சென்று, மூளையின் திறமையைக் குறைத்து விடும்.

**6. உறக்கமின்மை.**
நாம் உறங்கும் போது மூளை ஓய்வெடுக்கிறது. இதனால் உறக்கமின்மை அதிக காலத்திற்கு நீடித்தால் மூளைக் கலங்கள் விரைவில் இறக்கும்.

**7. உறங்கும் போது தலையை மூடுதல்.**
இவ்வாறு செய்யும்போது வெளிவிடப்படும் காபனீர்ஒட்சைட்டின் செறிவு கூடி, ஒட்சிசன் செறிவு குறையும். இதனால் மூளை பாதிப்படையலாம்.

**8. நோயுற்றவேளை மூளையைப் பாவித்தல்.**
நோயுடன் படித்தல் அல்லது கடுமையாக மூளையைப் பாவித்தால் மூளையின் திறன் குறைவதோடு மூளையும் பாதிப்படையலாம்.

**9. சிந்தனையைத் தூண்டும் எண்ணங்களின்மை.**
சிந்திப்பது எமது மூளையைத் தூண்டும் சிறந்த பயிற்சி முறையாகும். சிந்திக்காவிடின் மூளை சுருங்க ஆரம்பிக்கும்.

**10. அதிகம் பேசாதிருத்தல்.**
புத்திகூர்மையான உரையாடல் எமது மூளையின் செயல் திறனைக் கூட்டும்.

**நேரத்துக்கு உறங்குதலும் விழித்தலும் எதற்காக?**

**இரவு 9 -11 மணி:** எமது நோய் எதிர்ப்புத் தொகுதியிலிருந்து (நிறைநீர்த் தொகுதி) நச்சு இராசாயனப் பொருள்கள் வெளியேற்றப்படும் நேரமிது. இவ்வேளை ஓய்வாக இருக்க வேண்டும். அல்லது சங்கீதம் கேட்க வேண்டும். இவ்வேளையில் இல்லத்தரசி பாத்திரங்கள் கழுவிக் கொண்டு அல்லது பிள்ளைகளின் வீட்டு வேலைகளில் உதவி செய்து கொண்டிருந்தால், உடல் நலத்துக்குக் கேடுவிளையும். இரவு வேலை செய்பவர்கள் இதைக் கவனிக்கவும்.

**இரவு 11 - ஒருமணி:** ஈரலிலிருந்து நச்சு இராசாயனப் பொருள்கள் வெளியேற்றப்படும் நேரமிது. இவ்வேளை யாவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க வேண்டும்.

**அதிகாலை 1 - 3மணி:** நச்சுப் பொருட்கள் பித்தப்பையிலிருந்து வெளியேற்றப்படும் நேரமிது. இதுவும் ஆழ் உறக்கத்தில் நிகழ்கிறது.

**காலை - 3 - 5மணி:** நுரையீரல் (சுவாசப்பை) இவ் நச்சுப் பொருட்கள் வெளியேற்றம் நடைபெறும். இவ்வேளை இருமல் இருப்பவர்களுக்கு இருமல் கூடுதலாக இருக்கும். சுவாசக்குழாய்க்கு நச்சுப் பொருள் வெளியேற்றம் வந்து விடுமாதலின் இருமல் மருந்து எதுவும் தேவையில்லை.

**காலை 5 - 7மணி:** பெருங்குடலில் நச்சுப் பொருட்கள் வெளியேற்றப்படுவதால், மலங்கழிக்க வேண்டும்.

**காலை 7 - 9மணி:** சிறுகுடலில் போசாக்குச் சத்துகள் அகத்துறிஞ்சப்படும். எனவே இவ்வேளை காலை உணவு சாப்பிடவேண்டும். நோயாளர் காலை 6.30 மணிக்குமுன் காலை உணவு உட்கொள்ள வேண்டும்.

நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருக்க விரும்புவோர் காலை உணவை 7.30 மணிக்கு முன்பே சாப்பிடவேண்டும். காலை உணவு சாப்பிடாதவர்கள் இப்பழக்கத்தை மாற்றிக் கொள்ளவும். 9 - 10 மணிக்கு கூடச் சாப்பிடலாம். இது சாப்பிடாமல் விடுவதைக் காட்டிலுஞ் சிறந்தது. எனவே மிகவும் நேரஞ் செல்ல உறங்கி நேரஞ்செல்ல விழிப்பதால் தேவையற்ற நச்சு இராசாயனப் பொருட்களின் வெளியேற்றத்தில் தடைகள் ஏற்படும். எனவே வேளைக்குப்படுத்து வேளைக்கு எழுந்திருப்பது மிகவும் சிறந்தது.

ஈரல் பாதிப்படைவதற்கான முக்கிய காரணங்கள்

1. நேரம் தாழ்த்தி உறங்குவதும் விழிப்பதும்.
2. காலையில் மலங் கழியாமை.
3. அதிக உணவு உட்கொள்ளல்.
4. காலை சாப்பிடாமல் இருத்தல்.
5. கூடுதலான மருந்துகளை உட்கொள்ளல்.
6. கூடுதலான செயற்கைச் சீனி, உணவு நிறமேற்குறிகள், உணவைப் பாதுகாக்கும் பொருட்கள் ஆகியவற்றை உண்ணல். தகரத்திலடைத்த, குளிர் பெட்டிகளில் வைத்த உணவுகளைக் குறைப்பது நல்லது.
7. எண்ணெயில் உணவைப் பொரித்தல், கூடுமானவரை பொரிப்பதைத் தவிர்க்கவும். பொதுவாகக் களைப்பான வேளைகளில் பொரித்த உணவுகளை உண்ண வேண்டாம்.
8. பச்சை (அல்லது கூடுதலாகச் சமைத்த) உணவுகளை உண்பதால் ஈரலுக்கு வேலை அதிகமாக இருக்கும். மரக்கறிகளைப் பச்சையாக அல்லது அரைவேக்காடாக உண்ணவும். பொரித்த மரக்கறிகளை உடனே உண்ணவேண்டும். குளிர் பெட்டியில் சேமிக்கக் கூடாது. வீணாகப் பணத்தைச் செலவு செய்து கூடிய மரக்கறிகளை ஒரேயடியாக வாங்காமல், வாரம் இரண்டு மூன்று முறை வாங்குவது நல்லது.

நல்ல ஒழுங்கான உணவு உட்கொள்ளும் உடலின் பல்வேறு செயற்பாடுகளுக்கு முக்கியமாக நச்சுப் பொருட்கள் வெளியேற்றத்திற்குத் தடையில்லாமல் வாழ்ந்தால் நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழலாம்.

## பணமா உடலா முக்கியம் என்பதைத் தீர்மானிப்பது நீங்கள் தான்.

**இனிப்பு நஞ்சு** - வைத்திய கலாநிதி சபாபதி சிவயோகம் (இலண்டன் - பிரித்தானியா)

ஒக்ரோபர் 2001 ஆம் ஆண்டு எனது சகோதரி மிகவும் நோய்வாய்பட ஆரம்பித்தார். வயிற்றுவலியாலும், எழும்பி நடக்க முடியாமலும் மிகவும் கஷ்டப்பட்டார். படுக்கையிலிருந்து எழும்புவதே மிகவும் கடினமாயிருந்தது. வலியினால் வேதனைப்பட்டார். மார்ச் 2002 இல் அவரது தசை, கலங்கள் ஆகியவற்றின் உயிர்ப்பகுப்புகள் செய்யப்பட்டு 24 பலவிதமான மருந்துகளை எடுத்துக் கொண்டிருந்தார். அவரது நோய்க்கான காரணத்தை வைத்தியர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. அவரது வலியும் நோயும் வரவர மோசமாகியதால் தான் இறக்கப் போவதாக எண்ணி தனது வீடு, வங்கிக் கணக்கு, காப்புறுதி யாவற்றையும் தனது மூத்த மகளின் பேரில் எழுதி வைத்தார். மற்றைய குழந்தைகளையும் மூத்த மகளைப் பராமரிக்கும்படி கூறினார். தான் இறப்பதற்கு முன் புளோறிடா போய்வர எண்ணி மார்ச் 22 திகதி புறப்பட ஆயத்தமானார். 19 ஆம் திகதி நான் அவரை தொலைபேசியில் அழைத்து நலம் விசாரித்தேன். முன்னேற்றமேதும் இல்லையென்றும், இது Multiple Sclerosis என்ற நரம்புத்தளர்ச்சி நோயாய் இருக்கலாமென வைத்தியர்கள் கூறுவதாகச் சொன்னார். எனக்கு, எனது நண்பர் ஒருவர் அனுப்பிய ஒரு கட்டுரை ஞாபகத்துக்கு வரவே, 'நீங்கள்' 'டயற் சோடா' குடிக்கிறீர்களா' எனக் கேட்டேன். அவ்வேளை தான் அதைக் குடிப்பதற்கு மூடியைத் திறப்பதற்காகக் கூறினார். நான் உடனே அதைக் குடிப்பதை நிறுத்தும்படி கூறினேன். பின்னர் எனது நண்பர் அனுப்பிய கட்டுரையை அவருக்கு மின்னஞ்சலில் அனுப்பினேன். எமது உரையாடலின் பின் 32 மணித்தியாலங்கள் சென்ற பின், சகோதரி என்னை தொலைபேசியில் அழைத்து தான் 'டயற் சோடா' குடிப்பதை நிறுத்தி விட்டதாகவும் தற்போது எழுந்து நடப்பதாகவும் கூறினார். தசைகளிலிருந்த வலிப்பு மறைந்து விட்டதாகவும், முன்னையதைவிட நலமாக இருப்பதாகவும் கூறினார். மேலும் நான் அனுப்பிய கட்டுரையோடு வைத்தியரைக் காணப் போவதாகவும் வீட்டுக்கு வந்தபின் தொலைபேசி எடுப்பதாகவும் கூறினார்.

வீட்டுக்கு வந்ததும் என்னை அழைத்து,

தொடர்ச்சி 04ம் பக்கம்



# கொமன்வெல்த் - 2010 விளையாட்டுத் தகவல்கள் 292

## தங்கம் வென்ற தங்கத் தமிழன்



கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்றுள்ள ஈழத் தமிழர் பிரஷாந்த் செல்லதுரை (24) ஒரு தங்கம் உள்பட 2 பதக்கங்களை வென்றுள்ளார். ஆர்வம், உழைப்பு, திறமை காரணமாக நீண்ட போராட்டத்துக்குப் பிறகு ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்றார் பிரசாந்த். டெல்லி கொமன்வெல்த் போட்டி களில் பங்கேற்ற இவர், ஜிம்னாஸ்டிக்கில் பொம்மல் ஹார்ஸ் பிரிவில் தங்கமும், பாரலல் பார்ஸ் பிரிவில் வெண்கலமும் வென்றுள்ளார். இரண்டு போட்டிகளிலும் பதக்கம் வென்று ஆஸ்திரேலிய அணிக்கு மட்டுமல்லாமல் தமிழருக்கும் பெருமை சேர்த்துள்ளார். கடந்த மெல்போர்ன் கொமன்வெல்த் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்காக இவர் வெண்கலப் பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அரங்கில் தமிழர்கள் முத்திரை தற்போது அதிகரித்து வருகிறது. இந்த வரிசையில் இப்போது டெல்லி கொமன் வெல்த் போட்டியில் பதக்க வேட்டையில் முதலிடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியா வுக்காக ஒரு தமிழர் கலக்கிக் கொண்டிருக்கிறார். இவரது குடும்பத்தினர் இலங்கையில் இனக் கலவரம் பெரிதாக வெடித்த 1983ம் ஆண்டு அங்கிருந்து இடம் பெயர்ந்து ஆஸ்திரேலியாவுக்குச் சென்றனர். தற்போது சிட்னியில் வசித்து வருகிறது செல்லத்துரையின் குடும்பம்.

பிரசாந்த் செல்லத்துரை அவுஸ்திரேலிய ஜிம்னாஸ்டிக்ஸ் அணியில் இடம் பெற்றுள்ள முக்கிய வீரர் ஆவார். டெல்லி கொமன்வெல்த் போட்டியில் இரு போட்டிப் பிரிவுகளில் கிட்டத்தட்ட 15,000 புள்ளிகள் வரை பெற்றுள்ளார் பிரசாந்த் செல்லத்துரை. ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டிகளில் இந்த அளவுக்கு அதிக பட்ச புள்ளிகள் கிடைப்பது மிகவும் அரிதான விஷயம். அந்த அளவில் பிரசாந்த செல்லத்துரை ஒரு சாதனையே படைத்துள்ளார். 24 வயதேயாகும் பிரசாந்த் செல்லத்துரை ரேடியோலஜி மாணவர் ஆவார். அவுஸ்திரேலிய அணியில் இடம் கிடைத்தது பிரசாந்துக்கு எளிதாக இருக்கவில்லையாம். கடும் போராட்டங்கள், கடின பயிற்சி, கடுமையான முயற்சிக்குப் பின்புதான் அணியில் இடம் கிடைத்ததாம்.

நடந்த குழுப் போட்டியில் செல்லத்துரை, ஜோசுவா ஜெபரிஸ், சாமுவேல் ஆப்போர்ட், லூக் விவடோவஸ்கி, தாமஸ் பிச்லர் ஆகியோர் அடங்கிய குழு தங்கம் வென்றது. ஜிம்னாஸ்டிக்ஸில் அவுஸ்திரேலியாவுக்குக் கிடைத்த முதல் கொமன்வெல்த் தங்கம் இது. இதேபோல இன்னொரு தங்கத்தையும் வென்று இரட்டை தங்க நாயகனாக உயர்ந்துள்ளார் பிரசாந்த் செல்லத்துரை. கடந்த மெல்போர்ன் கொமன்வெல்த் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றவர் பிரசாந்த். இந்த முறை தங்கத்துடன் திரும்புவேன் என சபதமே போட்டிருந்தாராம். சொன்னபடி வாங்கியும் விட்டார். டெல்லி கொமன்வெல்த் போட்டியில் தமிழர் தங்கவேட்டையாடி வருவது பெருமைக்குரிய விஷயம்தான்.




## போட்டி வரலாறு...

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த நாடுகளின் கூட்டமைப்பே கொமன்வெல்த் நாடுகள் எனப்படுகின்றன. இந்த நாடுகள் அங்கம் வகிக்கும் அமைப்பே கொமன்வெல்த் அமைப்பாகும். கொமன்வெல்த் கூட்டமைப்பின் தலைமையகம் லண்டனில் உள்ளது. கொமன்வெல்த் கூட்டமைப்பில் இப்போது 54 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. எனினும் உள்நாட்டு கலவரம் மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மை காரணமாக ஃபிஜி மட்டும் கூட்டமைப்பில் இருந்து தாற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகள் பங்குபெறும் விளையாட்டுப் போட்டிகளே கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளாகும். கொமன்வெல்த் போட்டிகள் 4 ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றன. கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி களுக்கான முதல் விதையை விதைத்தவர் ஆஸ்ட்லே கூப்பர் எனும் கிறிஸ்தவ பாதிரியாரே எனலாம். 1891-ம் ஆண்டு பத்திரிகை ஒன்றில் அவர் எழுதிய கட்டுரையில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் உள்ள நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் புரிந்துணர்வை அதிகரிக்கவும் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை விளையாட்டுப் போட்டிகளை நடத்தலாம் என்று ஆலோசனை கூறியிருந்தார். அதன் பின்னர் 1911-ம் ஆண்டு மன்னர் ஜோர்ஜ் பதவியேற்ற போது அதைக் கொண்டாடும் விதமாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலனிகளான ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா, கனடா ஆகிய நாடுகள் பங்கேற்றன. அதன் பின்னர் இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் சிந்தனை யாருக்கும் வரவில்லை.

1928-ம் ஆண்டு ஆம்ஸ்டர்டாமில் ஒலிம்பிக் போட்டிகள் நடந்தன. கனடா உள்ளிட்ட பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்துக்கு உள்பட்ட நாடுகள் அதில் பங்கேற்றன. அப்போது கனடா அணியின் மேலாளராக பணியாற்றிய மெல்வில்லே மார்க்ஸ் ராபின்சன் என்பவர், பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்துக்கு உள்பட்ட நாடுகளின் வீரர்களுக்கு இடையே ஒருங்கிணைப்பும் நட்புணர்வும் இல்லாததை உணர்ந்தார்.

முதல் போட்டி: வீரர்களுக்கு இடையே நட்புணர்வை ஏற்படுத்த காலனி ஆதிக்க நாடுகளுக்கு இடையே நட்பு ரீதியிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட வேண்டியது அவசியம் என உணர்ந்த ரொபி ன்சன், அதற்காக தீவிர முயற்சி மேற் கொண்டார். அவரது முயற்சியின் காரணமாக முதலாவது கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி 1930-ம் ஆண்டு நடைபெற்றது.

முதலாவது போட்டி 'பிரிட்டிஷ் எம்பையர் கேம்ஸ்' (பிரிட்டிஷ் சாம்ராஜ்ய விளையாட்டுப் போட்டிகள்) என்ற பெயரில் கனடாவின் ஹாமில்டன் நகரில் நடைபெற்றது. அந்தப் போட்டியில் 11 நாடுகளைச் சேர்ந்த 400 வீரர்கள் கலந்து கொண்டனர். அதில் 6 விளையாட்டுகள் மட்டுமே இடம்பெற்று இருந்தன. அதன் பிறகு பல விளையாட்டுகள் சேர்க்கப்பட்டன. அதன் பின்னர் ஒவ்வொரு 4 ஆண்டுக்கு ஒரு முறையும் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்துக்கு உள்பட்ட நாடுகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறத் தொடங்கின.

1942-ம் ஆண்டு கனடாவின் மொன்றியால் நகரில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி 2-வது உலகப் போரின் காரணமாக கைவிடப் பட்டது. உலகப் போர் 1945-ம் ஆண்டு முடிந்த நிலையில் நிர்வாகக் காரணங்களால் 1946-ம் ஆண்டு நடத்தப்பட வேண்டிய போட்டியும் நடத்தப்படவில்லை. அதன்பிறகு 1950-ம் ஆண்டுமுதல் போட்டி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. பல நாடுகள் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றன. இதன்பின் காமன்வெல்த் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. 1954-ம் ஆண்டு இப்போட்டி 'பிரிட்டிஷ் எம்பையர் கொமன்வெல்த் விளையாட்டுகள்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் 1970-ம் ஆண்டு 'பிரிட்டிஷ் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1978-ம் ஆண்டு முதல் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் என்ற பெயரால் இது வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை 7 நாடுகளில் 18 நகரங்களில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட் டுள்ளன. இப்போட்டிகளை நிர்வகிக்க, லண்டனை தலைமையிடமாகக் கொண்டு கொமன்வெல்த் விளையாட்டு சம்மேளனம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. போட்டிக்கான விதிமுறைகள், போட்டியில் இடம்பெறும் விளையாட்டுகள், போட்டி நடைபெறும் இடங்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகப் பொறுப்புகளையும் இந்த சம்மேளனம் கவனித்து வருகிறது.

நாடுகள்: கொமன்வெல்த்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

ELECTRICAL WORKS



*FRIDGE, WASHER, DRYER* போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - *416-286-2880*

# எதிர்காலத்தில் ஆதன விலை மாற்றம்!

மாதாந்தம் ஒன்ராறியோவில் வீடு, மனை விற்பனை முகவர்களிற்காகவும், ஒன்ராறியோ மக்களிற்காகவும் வெளிவரும் "EDGE" தகவல் சஞ்சிகையின் அறிக்கையில் இரண்டு விதமான, ஒன்றிற்கு ஒன்று முரண்பாடான கட்டுரைகள் வெளி வந்துள்ளன. இந்த அறிக்கையின் சாராம்சம் கனடாவில் எதிர்கால வீடு, மனை வியாபாரத்தை பற்றியதாகும்.



இவ் அறிக்கையை வெளியிட்ட இரு நிறுவனங்களுமே மிகவும் பிரபல்யமானதுடன் நம்பிக்கையானதுமாகும். எதிர்காலத்தில், அதாவது எதிர்வரும் ஒன்று தொடக்கம் இரண்டு வருடங்கள் வரை ஆதன வியாபார நிலை பற்றியது. இரு நிறுவனங்களும் பக்க சார்பற்றதாக கருதப்படுபவை. ஒரு நிறுவனம் C.D. Howe Institute மற்றது CCPA (Canadian Centre for Policy Alternatives) ஆகும்.

C.D. Howe இன் அறிக்கையின்படி கனடாவில் அமெரிக்கா போன்றதொரு ஆதனவிலை இறக்கம் ஏற்படாது. இதற்கு கனடிய அடமானக்கடனின் இறுக்கமான சட்டதிட்டங்கள் காரணமாகக் கொள்ளலாம் என்பது ஆகும்.

அத்துடன் அண்மையில் கனடிய நிதி அமைச்சர் ஜிம் பிளகெற்றி (Jim Flaherty) தனது அறிக்கையில் அடமானக்கடனின், கடன் கொடுப்பனவிற்குரிய அடிப்படை தகைமைகளை மேலும் இறுக்கமாக்க இருப்பதாக வெளிப்படுத்தியுள்ளார்.

கனடிய மக்கள் தமது கடன்பெறக்கூடிய எல்லையை தாண்டி கடன் பெறுவதாக கனடிய மத்திய வங்கி ஆளுனர் திரு. மார்க் கார்னி (Mark Carny) அபாயக்குரல் எழுப்பியுள்ளார். அதாவது கடனின் எல்லைக்கோடு சராசரி மக்களின் வருமானத்தில் 146% ஆக உள்ளதாகவும் தெரியவருகின்றது. இது ஒரு நல்ல சகுனம் கிடையாது. வீட்டின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த 2007இல் புதிதாக கொண்டுவரப்பட்ட அறிக்கையின்படி 40 வருடமாக இருந்த அடமானக்கடனின் திருப்பிக் கொடுக்கும் காலம் (Amortization Period) 35வருடமாகக் குறைக்கப்பட்டது. அத்துடன் ஆகக்குறைந்தது 5% முதலீட்டுடன் தான் வீடு வாங்கலாம் எனக் கொண்டு வரப்பட்டது. ஆனால் விற்பனையில் இறக்கம் ஏற்பட்டுள்ளதனை பொருளாதார ஆய்வாளர்கள் தமது அறிக்கையில் ஒத்துக்கொண்டுள்ளார்கள். இருந்தும், இன்றைய காலகட்டத்தில் நடைமுறையில் இருக்கும் அடமானக்கடனில் இறுக்கமான சட்டதிட்டங்கள் விலையை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது. இருந்தும் இன்றைய சராசரி வீட்டின் விலை சாதாரண மக்களால் தாங்க முடியுமா? என்பது நியாயமான வினா.

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 329**


HomeLife GTA Realty Inc., Brokerage

HOMELIFE HIGHER STANDARDS

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"



1711 Mccowan Rd. #206, Toronto - Tel: 416.321.6969
145 Trades Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

Raja M. Mahendran, P. Eng (Broker/Owner)

HOUSE FOR SALE AURORA 628,000



BAYVIEW & SPRINGFARM
4 Bedrooms,Walkout bsmt
5 Washrooms, double garage
Ceramic floor, Hardwood floor
Stove, dishwasher,exhaust fan,
All included. Over 3000 sq.feet.

HOUSE FOR SALE MARKHAM $419,000



MARKHAM & STEELES
Newly Painted 4 Bedroom House.
Steps To Ttc Shopping & School,
Double Door Entry,
Direct Door To Garage,
Fully Fenced, Door Opener
With Remote, All Elfs,.

$1200 FOR LEASE



MARKHAM & SHEPPARD
Luxury Condo, Unit 698 Sq Ft + 57 Sq
Open Balcony, 24 Hrs Concierge,
Rec Room, Walk To 24 Hrs Ttc And Mall,
Close To Hwy 401 & Scarborough Town Centre.

HOUSE FOR SALE MARKHAM$649,000



MCCOWAN & 16TH AVE
Demand Location
Beautifully Kept, 4 Br Detached On
Corner Unit, 9'. 17' High Front Entrance,
6 Parking Space (Possible). Finished bsmt
with kitchen. Large L-Shaped Cooler Room,
Large Deck, Laundry Room .
2 Fridges, 2 Stoves, Washer, Dryer.

CONO FOR SALE $219,900



MARKHAM & SHEPPARD
Luxury Condo, Unit 698 Sq Ft + 57 Sq
Open Balcony, 24 Hrs Concierge,
Rec Room, Walk To 24 Hrs Ttc And Mall,
Close To Hwy 401 & Scarborough Town Centre.

*Independently Owned & Operated



Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

COLDWELL BANKER

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# எதிர்காலத்தில் ஆதன...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

இவற்றினால் அமெரிக்காவில் ஏற்பட்டது பாதகமான விலை இறக்கம். கனடாவில் ஏற்படச் சந்தர்ப்பம் இல்லை என்று C.D. Howe Institute கூறுகின்றது.

இதனை மறுதலிப்பதுபோல CCPA இன் அறிக்கை வெளிவந்துள்ளது. அதாவது கனடாவின் முக்கிய நிறுவனம் வீட்டின் விலையில் குறிப்பிடத்தக்க இறக்கம் ஏற்படும் என உறுதியாகக் கூறுகின்றது. கனடாவின் முக்கிய ஆறு (6) நகரங்களில் விலை இறக்கம் ஏற்படும் என CCPA தெரிவிக்கின்றது. ரொறொன்ரோ, வன்கூவர், கல்கறி, எட்மென்ரன், மொன்றியல் மற்றும் ஒட்டாவாவில் விலை இறக்கம் ஏற்படும் எனக் கூறுகின்றது.

1980 இலிருந்து 2010வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட விலை ஏற்றம் சாதாரணமாக நிகழக்கூடியதனை விட அதிகமாகக் காணப்படுவதாக அந்த அறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. முக்கியமாக ஆண்டு 2002 தொடக்கம் 2007 வரை ஏற்பட்ட விலை அதிகரிப்பு யதார்த்தமற்றதாக கருத இடமுண்டு. 2000ஆம் ஆண்டிற்கு முன்பாக விலை அதிகரிப்பு மக்களின் Median Income (ஆகக் கூடிய வருமானத்தினதும் ஆகக் குறைந்த வருமானத்தினதும், நடுப்புள்ளியே Median Income ஆகும்.) 3 அல்லது 4 மடங்காகக் காணப்பட்டது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் இந்த எண்ணிக்கை Median Income இன் 4.1 இலிருந்து 11.3 வரை காணப்படுகின்றது. அத்துடன் அடமானக் கடனின் பெறுமதியும் அதிகரிக்க தொடங்கியுள்ளது. எனவே விலை இறக்கம் தவிர்க்க முடியாது என CCPA தனது தர்க்க ரீதியான வாதத்தை முன்வைத்துள்ளது.

இவ் இரு வேறுவிதமான அறிக்கைகளை ஒக்ரோபர் 2010 ஆம் ஆண்டு இதழ் வெளிக் கொண்டு வந்துள்ளது. நடைமுறையில், 2010 செப்ரெம்பரில் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது டன், விற்கப்பட்டு /வாங்கிய ஆதனங்களின் எண்ணிக்கை 2009 செம்ரெம்பருடன் ஒப்பிடும்போது குறிப்பிடக் கூடிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் மிசிசாக Square One பகுதியில் புதிதாக கொண்டுவரப்பட்ட அடுக்குமாடிக் கட்டிடத்தில் அலகுகளின் விற்பனை மிகவும் அமோகமாக நடைபெற்றது. சந்தைக்கு கொண்டுவரப்பட்ட அலகுகளில் 80% ஆனவை ஒரு கிழமைக்குள் விற்பனை ஆகிவிட்டது. இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறுவதனை யும் கண்கூடாகக் காணக்கூடியதாக உள்ளது.

இவ்வாறான நிலைமையில் மக்களால் நன்கு அறியப்பட்ட அடுக்குமாடிக் கட்டிடத்தின் நன்கு அனுபவமிக்க Tridel தனது அடுத்த அடுக்குமாடிக்கட்டிடத்தை One Old Mill (Bloor West) எதிர்வரும் கிழமை சந்தைப்படுத்த உள்ளது. இந்த அடுக்குமாடிக் கட்டிடத்தொகுதி ரொறொன்ரோ மேற்குபகுதியில் Jane & Bloor பகுதியில் வரவுள்ளது. இதன் முக்கியம் என்ன என்றால் ஒரு சதுர அடியின் விலை $494 இலிருந்து $616 வரை விற்க உள்ளது. வாகனத் தரிப்பிற்கு (Car Parking) தனியாக மேலதிகமாக $30,000 செலுத்த வேண்டும்.

அனுபவமிக்க கட்டட நிர்மாண நிறுவனங்களே இவ்வாறு விற்பதனால் விலை அதிகரிக்கும் என இந்நிறுவனங்கள் எதிர்பார்ப்பதாக கொள்ளலாம். இன்றைய காலகட்டத்தில், உலக பொருளாதாரம் சகல நாடுகளுடனும் பின்னிப் பிணைந்துள்ளது. G20 நாடுகளின் பொருளாதாரம் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தே இயங்குவதாக கூறலாம். அமெரிக்க பொருளாதாரத்தின் மிகப்பெரிய பாதிப்பு மற்றைய நாடுகளிலும் காணலாம். சீனா, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுடன் சேர்ந்து உள்ளது.

இதற்கு உதாரணமாக, 2000ஆம் ஆண்டில் பிரித்தானியாவின் (U.K) சராசரி வீட்டுவிலையில் 78,000 (Sterling Pounds) ஆகக் காணப்பட்டது. விலை அதிகரிப்பால் 2007 இல் இவ் அதிகரிப்பு 184,000 ஆகக் காணப்பட்டது. ஆனால் இப்பொழுது 167,000 ஆகக் குறைந்துள்ளது. இது அமெரிக்க பொருளாதாரத்துடன் ஒரு நேர்கோட்டில் இயங்குவது போல காணப்படுகின்றது. மேலும் பிரித்தானியாவில் அடுத்த ஆண்டில் (2011) மேலும் 5% இறக்கம் ஏற்படலாம் எதிர்பார்க்கப்படுகின்றது.

கனடிய பொருளாதாரத்தில் பொருளாதார ஏற்ற இறக்கத்திற்கு Housing Industry Sector முக்கியமாக கருதப்படுகின்றது. கனடா பொருளாதார இறக்கத்தில் /தே தக்கத்தில் (Recession) இருந்தபோது, வீடு, மனை வியாபாரமே பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது. வீடு, மனையின் விற்பனை, வாடகைக்கு கொடுத்தல் போன்றவற்றின் வருமானம் கனடிய பொருளாதாரத்தில் GDP (Gross Domestic Product) 20% ஐக் கொண்டுள்ளதாக CMHC தெரிவிக்கின்றது. 2009 இல் இப்பெறுமானம் $307 பில்லியனாக அதிகரித்துள்ளது.

வீட்டுவிலையின் 5% இறக்கம் $10 பில்லியனிற்கு பெறுமதியான அளவு பணத்தை கனடிய பொருளாதாரத்தில் இருந்து அகற்றக்கூடிய சாத்தியம் உண்டு.

CREA (Canadian Real Estate Association) மற்றும் TD Bank இன் அறிக்கைகளின்படி அடுத்தவருடம் ஆதன விலை இறக்கம் ஏற்படலாம் என ஒத்துப் போனாலும், இறக்கத்தின் பெறுமானத்தில் முரண்பாடு காணப்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. எனவே CCPA மற்றும் ED HOWE Institute இன் எந்த அறிக்கை ஓரளவு சரியாக இருக்கலாம் என்பது எதிர்காலத்தில் தான் தெரியவரும். எது எப்படியாயினும் நாம் எடுக்கும் முடிவு சிறப்பாக இருப்பதால் எந்த சந்தர்ப்பத்திலும் ஓரளவு தப்பித்துக்கொள்ளலாம்.




ஓம் முத்துமாரி அம்மன் ஜோதிடம்

பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்







இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
பிரபல ஜோதிட வல்லுனர்
பண்டித் ஹரிதாஸ் சாஸ்திரிகள்

மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சுவிஸ், நியுசிலாந்து, இலங்கை, அமெரிக்கா, லண்டன் ஆகிய இடங்களுக்குச் சென்று தற்போது முதல் முறையாக கனடா வந்துள்ளார்.

இவர் கைரேகை, சாதகம் ஆகியவை கொண்டு மிகத் துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள்கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வதிவிடப் பிரச்சனைகள் வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்திருஸ்டி கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் ஒன்றுகூடுதல் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Tel: 647-707-8671 / 416-829-4004

5215 Finch Ave., East, Unit # 152 Scarborough, Ontario M1S 0C2 (GTA Square Mall )

Open 7 Days Time: 10:00 Am To 8:00 Pm He can tell you Tamil, Hindi,English, Telugu & Other indian languages

# RE-ELECT

# LOGAN KANAPATHI

## • MARKHAM COUNCILLOR WARD 7 •

உறுதியான தலைமைத்துவம் நிறைவேற்று ஆளுமை அனுபவப் பெறுமதி

**என் அன்பான இனிய மார்க்கம் 7ம் வட்டார வாக்காளப் பெருமக்களே!**



நான் உங்கள் நண்பன். நான் உங்கள் மைந்தன்.

- ☑ நகரசபையில் ஓர் உன்னதமான சமூகக்கட்டமைப்பை உண்டாக்கியமை
- ☑ வரிச்சுமையைக் குறைக்க ஆதனம் - சொத்துடையவர்கள் வருடாவருடம் செலுத்த வேண்டிய கூடுதல் தொகையை நிறுத்தியுள்ளேன்.
- ☑ 70 மில்லியன் செலவில் நூல் நிலையத்தோடு கூடிய சனசமூக நிலையத்தை உருவாக்கியமை.
- ☑ ஒரு திறந்தவெளி அரங்கு, சிறுவர்களுக்கான கொண்டாட்ட மைதானம்
- ☑ மார்க்கம் நகரத்துக்குரிய கோட்பாட்டு மாற்றங்கள்
- ☑ மார்க்கம் 7ம் வட்டாரத்தில் 4 பூங்காக்களை நிறுவியமை.
- ☑ கனடா மாநாகரசபை வரலாற்றில் மார்க்கம் நகரசபை மட்டுமே இலங்கை அரசின் இனவன்முறைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்ற அழுத்தம் கொடுத்தமை.

**இத்தனையும் நீண்ட பட்டியலாய் உள்ளது.**

எனது கவுன்சிலர் பணி பகுதிநேரப் பணியாய் வரையறுக்கப்பட்டது. ஆனால் நான் முழு நாள் பணிகள் செய்ததின் பலாபலன்கள் உங்களுக்காய் ஆனது. உங்கள் ஒவ்வொரு வாக்கும் புனிதமானவை. கனதியானவை.

**Oct 25th 2010**
**On Monday**

**சென்ற முறை போல் இந்த முறையும் என்னை மீண்டும் தெரிவுசெய்து உங்கள் தொண்டனாக்குங்கள்.**

"தொண்டலாது உயிர்க்கு ஊதியம் இல்லை"

**கவுன்சிலர்**
**லோகன் கணபதி**




**Re-Elect LOGAN KANAPATHI**
as your **Ward 7 Councillor**
**Monday, October 25th**

**Tel: (905) 201-1107**
Email: info@loganKANAPATHI.com
www.loganKANAPATHI.com

# மலைநாட்டின் வடக்கு வாயில்

நாள்: 07.12.2009, திங்கட்கிழமை
இடம்: வாடி வீடு (Rest House), மாத்தளை
நிகழ்வு: விருந்துபசாரம்
ஏற்பாடு: மாத்தளை புனித தோமையார் கல்லூரிப் பழைய மாணவர்
தலைமை: திரு. சண்முகம் சந்திரசேகரம், சிவசக்தி கூட்டுத்தாபன உரிமையாளர்

அன்புக்குரிய தலைவர் அவர்களே!
எனதரிய மாணவ மணிகளே!


புனரமைக்கப்பட்ட மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயம்.


புனித தோமையார் கல்லூரியின் ஒரு பகுதி.


மாத்தளை வாடிவீட்டில் பழைய மாணவர் அளித்த விருந்துபசாரம்.

மாத்தளைக்கு வரவேண்டும் என்று திரு. அருணாசலம்பிள்ளை ஒருநாள் முன்மொழிந்தார். பின்னர் அதனை திரு. தியாராசா, திரு. இரட்னாகரன் ஆகியோர் வழிமொழிந்தபோது, மாத்தளையில் பன்றிக் காய்ச்சல் பரவிப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்ற செய்தியைப் பத்திரிகைகளிற் படித்தேன் என்றும் அதனால் அங்கு நான் வரமாட்டேன் என்றும் முதலிலே மறுத்துவிட்டேன். அவர்கள் விடவில்லை. மடக்கிப்போட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு வந்துவிட்டார்கள். வந்து கொண்டிருக்கையில் என் அன்புக்குரிய மாணவர்களோடு இப்படி ஒரு இன்பகரமான பயணத்தை நான் இனி எந்தப் பிறப்பில் செய்யப் போகின்றேன் என்று நினைத்தவாறு வந்தேன். அதற்காக உங்கள் எல்லோருக்கும் மனைவியும் நானுமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். உண்மையிலேயே நல்ல பயணம்.

பல இடங்களைக் காட்டினீர்கள். பழைய நினைவுகளை ஊட்டினீர்கள். மாத்தளை இருந்த இடத்திலேயே இருந்தாலும் முத்துமாரி அம்மன் ஆலயமும் புனித தோமையார் கல்லூரியும் பெரும் மாற்றங்களுக்குள்ளாகி இருப்பதைப் பார்த்து மகிழ்ந்தேன்.

புனித தோமையார் கல்லூரி அதிபர் உங்களைக் கண்டு அடைந்த உற்சாகம், செய்த உபசரிப்பு கல்லூரியின் பண்பாடு காப்பாற்றப்பட்டுவருவதை எடுத்துக் காட்டியது. எழுந்து சென்று கோப்புக்களைத் தேடிப் பழைய புகைப்படங்களைக் காட்டினார் பாருங்கள், அது தனக்கு முன் கல்லூரி வளர்ச்சிக்கு உழைத்த ஆசிரியர்களுக்கு அவர் கொடுக்கும் மதிப்பின் வெளிப்பாடாக இருந்தது. பன்றிக் காய்ச்சலுக்குக் கல்லூரி மூடப்பெற்று இன்றுதான் திறக்கப்பட்ட நிலையிலும் பலர் அதிபரைக் காண வரிசையில் காத்துக் கொண்டிருந்த போதும் எங்களைக் கல்லூரியின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று அதன் வளர்ச்சியை நாம் காணும்வகை செய்ததற்கு அவருக்கு நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

முத்துமாரி அம்மன் கோயிலும் பெரிய வளர்ச்சி அடைந்திருக்கின்றது. புனரமைப்புக்குப் பின்னர் புத்தம்புதிய கோயிலாகவே பொலிவுற விளங்குகின்றது. அது ஆலய அறங் காவலர் சபையின் நிருவாகத் திறனை எடுத்துக் காட்டுகின்றது. ஆலயத்தின் வளர்ச்சிக்கு உழைத்து இந்த நகரத்தின் ஆன்மிக வாழ்வுக்கு வழிகாட்டி வருகின்ற நிருவாக சபைத் தலைவர் திரு. சந்திரசேகரன் அவர்களை எத்தனைமுறை பாராட்டினாலும் தகும். எனது மாணவர் ஒருவர் ஆலயத்தின் நிருவாகசபைத் தலைவராக இருப்பதையிட்டு நான் மிகவே மகிழ்ச்சியடைகின்றேன்.

அவர் தனது தலைமை உரையில் என்னிடம் படித்தும் பல்கலைக் கழகத்துக்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டாமைக்கு வருந்துவதாகச் சொன்னார். அதனை அப்பொழுதே அம்பாள் தீர்மானித்துவிட்டாள் என்றே சொல்லத் தோன்றுகின்றது. அவள் தனது பல்கலைக் கழகத்துக்கு உங்களைத் தெரிவுசெய்து கொண்டாள். ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொரு திறமை இருக்கிறது. உங்களிடத்தில் தலைமைத்துவத் திறமை இருக்கிறது. அதற்குரிய பதவியும் வாழ்க்கையும் உங்களுக்குக் கிடைத்திருக்கின்றன.

மாத்தளை அழகான நகரம். சிறிய நகரமாக இருந்தாலும் வேறுபடும் காட்சிகளால் கண்ணுக்கு விருந்தளிக்கும் கலைநகரம். மலைநாட்டின் வடக்கு வாயில் என்று புகழப்படும் இந்த நகரம் அந்த வாயிலால் வந்தாரை எல்லாம் வரவழைத்து வாழ்வளித்த வரலாறுகளைக் கொண்டது. இந்த வாயில்தான் அன்றும்சரி இன்றும்சரி வடக்கு கிழக்குத் தமிழரையும் மலைநாட்டுத் தமிழரையும் தொடர்புபடுத்திவருகின்ற பாதையாகவுள்ளது.

மாத்தளைத் தமிழர் பெண்களுக்குப் பாக்கிய வித்தியாசாலையையும் ஆண்களுக்குக் கந்தசாமி வித்தியாசாலையையும் கட்டியதிலிருந்து கல்வியில் அவர்கள் எவ்வளவுதூரம் கவனஞ் செலுத்தினார்கள் என்பது தெரிகிறது. இப்பொழுது கந்தசாமி வித்தியாசாலை பெண் பாடசாலையுடன் ஒன்றாக்கப்பட்டுச் சிங்கள மாணவிகளும் அங்கு படிக்கிறார்கள் என்று அறிகிறேன்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என்று பல்லினத்தாரும் ஒற்றுமையாக வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற இந்த நகரம் இனப்பிரச்சனையால் அல்லற்படும் இலங்கைக்கு முன்மாதிரியான ஒரு நகரமாக இருந்து வருகின்றது.

நான் கற்பித்த கல்லூரியைப் பார்க்கவும் அடிக்கடி சென்று வணங்கிய முத்துவிநாயகர் ஆலயத்தையும் முத்துமாரி அம்மன் ஆலயத்தையும் வழிபடவும் என்னை இங்கு அழைத்துவந்த உங்கள் அன்பு அளவற்றது. மாத்தளைக்கு நான் படிப்பிக்க வந்திராது போனால் உங்களைப்போன்ற நன்றியுள்ள மாணவரைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் இழந்திருப்பேன்.

இங்கு பேசிய என் அன்புக்குரிய மாணவர்கள் பழைய சம்பவங்கள் பலவற்றை சிறு சிறு கதைகள்போலச் சொன்னார்கள். நான் உண்மையிலேயே பலவற்றை மறந்து விட்டேன். 50 ஆண்டுகள் கடந்தோடிவிட்டன வல்லவா? அவற்றையெல்லாம் எழுதித் தருவீர்களானால் ஒரு நூலாகக்கூடப் போடலாம். சிலர் கண்கலங்கியதைக் கண்டு நானும் கண்கலங்கினேன். அன்புக்கும் உண்டோ அடைக்குந்தாழ்.

நான் 29 ஆண்டகளுக்குப்பிறகு இலங்கைக்கு வந்திருக்கிறேன். அதுவும் எனது துணைவியாரின் சகோதரி கடும் நோய்வாய்ப்பட்டுள்ளார் என்ற செய்தியைக் கேட்டுத் திடீரெனப் புறப்பட்டு வந்தோம். மீண்டும் இப்போதைக்கு வரும் எண்ணம் எனக்கு இருக்கவில்லை. தேவை ஏற்பட்டால் மனைவி வரக்கூடும். எனக்கும் அங்கு சங்கங்கள் சபைகள் அதிகம். இந்த நிலையில் தலைவர் அவர்கள் முத்துமாரியம்மன் கொடியேற்றத் திருவிழாக்காலத்தில் பேச அழைத்திருக்கிறார். அம்மன் அருளால் உடல்நலத்துடன் இருந்தால் வருவேன் எனக்கூறி உங்கள் எல்லோரையும் எல்லாம் வல்ல அம்பாள் எவ்வித குறையுமின்றி என்றும்போல் இனியும் காத்தருளவேண்டும் என்று அவளது பாதார விந்தங்களை வணங்கி நிறைவுசெய்கின்றேன்.

வணக்கம்.


**கவிஞர் வி. கந்தவனம்**


# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**


**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

**WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:**

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
**HOMEOPATHIC PRACTITIONER**

**TEL: 416-298-7537/416-291-3022**
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# வாகன காப்புறுதி & விபத்துகள் நட்டஈடு கோரல் வரலாறுகளை பதிவு செய்து வழங்கும் சி.ஜி.ஐ நிறுவனம்

*(C.G.I. Gruop Inc)*

## கனடிய தகவல் தொடர் 134

## AUTO PLUS REPORT

**சி.ஜி.ஐ தகவல் மையம்** - *(C.G.I. Gruop Inc)* - 1976ஆம் ஆண்டு! ஜூன் மாதம் கனடாவில் இரு பங்குதாரர்களினால் ஆரம்பிக்கப்பட்டு, இன்று கனடா, அமெரிக்கா உட்பட உலகின் ஏனைய சில நாடுகளிலும் வெவ்வேறு மொழிகளிலும் தகவல் தொடர்புகளை வழங்கும் ஒரு பல்தேசிய 'தகவல் தொழில்நுட்ப நிறுவனம்' ஆகும்.

பல ஆயிரக்கணக்கான ஊழியர்களை கொண்டு, பல மில்லியன் இலாபம் சம்பாதிக்கும் கம்பனிகளிலும் இதுவும் ஒன்றாகும். இந்நிறுவனம் அரசாங்கம், வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், கூட்டுஸ்தாபனங்கள் மற்றும் பாரிய கம்பனிகள் யாவற்றுக்கும் தேவையான தகவல்களை வழங்கி வருகின்றது.

இங்கு கனடாவில் வாகன காப்புறுதி செய்து கொள்ள விரும்பும் ஒருவர் காப்புறுதி கம்பனியினையோ அல்லது முகவர் நிலையம் ஒன்றினையோ அணுகும் போது, காப்புறுதி செய்து கொள்ள விரும்புபவரின் ஏற்கனவேயிருந்த வாகன காப்புறுதிகள், ஏற்கனவே வாகன விபத்துகளில் நட்டஈடுகள் கோரிய வரலாறுகள் யாவற்றினையும், ஒவ்வொருவரின் சாரதி அனுமதி இலக்க பத்திரத்தினை அடையாள குறியாக பதிந்து வைத்திருந்து காப்புறுதி தொடர்பான விலையினை தீர்மானிப்பதற்கு காப்புறுதி கம்பனிகளுக்கு இந்நிறுவனம் இலகுவாக வழங்கி விடுகின்றது.

விரும்பினால் அவரவர் தமது வாகன காப்புறுதி தொடர்பான வரலாற்று பதிவுகளை இந்நிறுவனத்திலிருந்து பெற்று பரிசீலனை செய்து பார்க்கலாம்.

**'ஒட்டோ பிளஸ் ரிப்போர்ட்'** *(AUTO PLUS REPORT)* என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் இந்நிறுவனத்தின் அறிக்கையில் பின்வரும் விடயங்கள் ஒவ்வொருவரினதும் பதிவு செய்யப்பட்ட வரலாறாக காட்டும்.

1. தங்களின் பெயர், வாகனம் வைத்து ஓட்டிய விலாசம், நகரம், பிறந்த திகதி ஆண்டு, சாரதி அனுமதி பத்திர இலக்கம்.
2. எந்த வாகன காப்புறுதியில், எந்த வாகனத்திற்கு (அதன் அடிப்படை உற்பத்தி இலக்கமும் குறிப்பிட்டு) எந்த ஒப்பந்த இலக்கத்தில் வாகனகாப்புறுதி ஒப்பந்தம் செய்து வைக்கப்பட்டிருந்தது.?
3. எந்தக் காலம் தொடக்கம், எந்த காலம்வரை வாகன காப்புறுதி ஒப்பந்தம் வலிமையாக இருந்தது? என்ன தேவைக்கு வாகனம் உபயோகிக்கப்படுகின்றது.
4. மேலதிகமாக வீட்டில் உள்ளவர்களின் பெயர்கள் வாகன காப்புறுயில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அவர்களின் பெயர், பிறந்த ஆண்டு, திகதி, சாரதி அனுமதி பத்திர இலக்கங்கள் தொடர்பான விபரங்கள்.
5. ஒவ்வொரு வாகன சாரதியும் சாரதி அனுமதி பத்திரம் பெற்று எவ்வளவு காலம்? முழுமையான வாகன பயிற்சிக்கு தோற்றிய விடயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதா?
6. வாகன காப்புறுதியில் எந்த வகையான நட்டஈடு பிரிவு ஒப்பந்தங்கள் செய்து வைத்துள்ளீர்கள்?
7. விபத்து ஒன்றினை எதிர் கொண்டிருந்தால் எப்போது? எவரோடு (விபத்தில் மோதிய ஏனையோரின் மேலோட்டமான விபரங்களும் பதிவு செய்யப்பட்டு இருக்கும்) விபத்து நடந்தது? இதில் சரி? பிழை? எந்த பக்கம்? எந்த விகிதத்தில்? எவ்வளவு தொகைகள்? எந்த பிரிவின் கீழ் நட்டஈடாக காப்புறுதி கம்பனிகளினால் பரிமாறப்பட்டு இருந்தன?

இங்கு விபத்து தொடர்பான தகவலின் கீழ் விபத்து நட்டஈடு வழங்கலின் தீர்ப்பு என்பது ஒரு சிறு குறியீடாக இருக்கும். அதாவது
Fault - 0% (தப்பு என்பது 0% வீதம்)
Fault - 100% (தப்பு என்பது 100% வீதம்)
Fault - 50% (தப்பு என்பது 50% வீதம்)

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வாகன காப்புறுதி கம்பனிகளுக்கு நட்டஈடு கோரும் நோக்கத்துடனேயோ அல்லது வேறு வழிகள் மூலமோ நடைபெற்ற விபத்துகள் தொடர்பாக அறிவிக்கும்போது, இப் திவுகள் யாவும் காப்புறுதி கம்பனிகளினூடாக இத்தகவல் மைய நிறுவனத்திற்கு போய் சேரும் போது அங்கு இவைகள் யாவும் ஒரு அழிக்க முடியாத வரலாறாக பதியப்படுகின்றது.

இவ்வரலாற்று பதிவுகளை விரும்பினால் ஒவ்வொருவரும் நேரடியாக இந்நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு, தொலைநகல் மூலம் அல்லது மின் அஞ்சல் மூலம் கைச்சாத்திடப்பட்ட விண்ணப்பம் அனுப்பி பெற்று கொள்ளலாம். நிறுவனத்தின் முகவரி

*CGI TECHNICAL ASSISTANCE CENTER*
*1350, RENE - LEVESQUE WEST, 7TH FLOUR*
*MONTREAL, Quebec H3G 1T4*
தொலை நகல் - 514.415.3989
மின் அஞ்சல் - *insurance-helpdesk@cgi.com*

மனு கிடைத்து பத்து நாட்களுக்குள் வரலாற்று அறிக்கையினை தபாலில் அனுப்பி வைப்பார்கள். விரும்பினால் காப்புறுதி முகவர் அலுவலகங்களின் ஊடாக உடனடியாகவும், பெற்று கொள்ளலாம்.

இந்த காப்புறுதி, விபத்துகள் தொடர்பாக பதியப்பட்டிருக்கும் வரலாற்று பதிவுகளில் கடந்த காலங்களில் எங்கள் வாகன விபத்து ஒன்றில் நடந்த தீர்ப்பு என்பது தப்பாக பதியப்பட்டிருந்தால் அது தப்பு என குறிப்பிடப்பட்டு இருந்தால் அதனை எந்த வகையிலும் நாம் மாற்றியமைக்க முடியாது. அவ்வாறு மாற்றியமைக்கப்பட வேண்டுமானால் அது தொடர்பாக ஏற்கனவே நடந்து குறிப்பிட்ட பதிவுக்கு போயிருந்த விபத்து என்பது தங்களில் தப்பு இல்லை என்பதனை தங்களின் வாகன காப்புறுதி கம்பனியின் முறைப்பாட்டு பிரிவுக்கோ அல்லது பொதுவாக சகல கம்பனிகளுக்கும் உள்ள முறைப்பாட்டு பிரிவுக்கு மனு செய்து அவர்களினால் இது நியாயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டால் மட்டும் தொடர்ந்து தகவல்களை வழங்கிய வாகன காப்புறுதி கம்பனிகளினால் மட்டும் வரலாற்றுப் பதிவுகளில் திருத்தம் செய்யலாம்.

ஒவ்வொருவருக்கும் வாகன காப்புறுதியின் விலையினை நிர்ணயிக்கும் போதும், ஏற்கனவே இருந்த காப்புறுதியினை வருடம் தோறும் புதுப்பிக்கும் போதும் இவ்வரலாற்று பதிவுகளின் அடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்படுகின்றது.

வாகன காப்புறுதியின் விலையினை தீர்மானிக்கும் போதும், புதுப்பித்தலின் போதும் விலையினை தீர்மானிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும் இன்னொரு வரலாற்று பதிவு மாகாண போக்குவரத்து அமைச்சினால் வழங்கப்படும் - வாகனமோட்டும் குற்றசாட்டு பதிவுகள் (Driving Record) ஆகும். வாகனமோட்டும் ஒவ்வொருவரும் வீதி ஒழுங்கு சட்டங்களை மீறி தண்டனைக்குட்பட்ட போதும், இதற்காக புள்ளி மதிப்பீட்டு இழப்புகளை எதிர் கொள்ளும் போதும் இவைகள் யாவும் மாகாண போக்குவரத்து அமைச்சின் பதிவுகளில் ஒவ்வொருவரின் சாரதி அனுமதி பத்திர இலக்கத்திலும் மூன்று வருடங்களுக்கு பதியப்பட்டு இருக்கும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


TORONTO BUSINESS COLLEGE



COMPUTERIZED ACCOUNTING
EARN YOUR DIPLOMA IN 6 MONTHS
- CURRENTLY RECEIVING EI ✓
- RECEIVED EI WITHIN LAST FIVE YEARS ✓
- RECEIVED MATERNITY BENEFITS WITHIN LAST 5 YEARS ✓

You May Be Eligible For Financial Assistance
Our Experienced Counselor Will Help You To Apply For Funding

- 100% INSTRUCTOR LED
- HIGH EMPLOYMENT RATE
- SMALL CLASS SIZE
- INDIVIDUAL ATTENTION
- TTC ACCESSIBLE/FREE PARKING

CERTIFICATE COURSES
QUICKBOOKS,SIMPLY ACCOUNTING,ACCPAC
WORD,EXCEL,POWER POINT,ACCESS
WINDOWS,KEYBOARDING,DATA ENTRY

416-291-5155
4465 SHEPPARD AVE. EAST #208
( SHEPPARD & BRIMLEY ) SCARBOROUGH
www.t-businesscollege.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# கொமன்வெல்த்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

நாடுகள் மொத்தம் 54. ஆனால் வழக்கமாக கொமன்வெல்த் போட்டிகளில் இடம்பெறும் அணிகள் மொத்தம் 71. பிரிட்டிஷ் ஆட்சிக்கு உள்பட்ட ஸ்காட்லாந்து, வேல்ஸ், வடக்கு அயர்லாந்து உள்ளிட்ட பகுதிகள் தனி அணியை அனுப்புகின்றன. இதேபோல் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு உள்பட்ட பல சிறிய பிரதேசங்களும் தனி அணியை அனுப்புவதால் 71 அணிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

விளையாட்டுகள்: கொமன்வெல்த் விளையாட்டுப்போட்டிகளில் இடம்பெறும் விளையாட்டுகளாக இப்போது 35 விளையாட்டுகள் அங்கீகரிக்கப்பட்டடுள்ளன. எனினும் இவை அனைத்தும் போட்டிகளில் இடம்பெறுவதில்லை. டில்லியில் நடைபெறும் போட்டிகளில் 17 விளையாட்டுகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி வரலாற்றில் முதல் முறையாக இந்த முறை டென்னிஸ் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பொதுநலவாய போட்டி இந்தியாவில் நடத்தப்படுவது இதுவே முதல்முறை. 1951, மற்றும் 1982-ம் ஆண்டுகளில் ஆசிய விளையாட்டுப் போட்டி இந்தியாவில் நடத்தப்பட்டது. அதன் பிறகு இந்தியாவில் நடத்தப்படும் மிகப்பெரிய விளையாட்டுப் போட்டி இதுவே.

கடந்த முறை மெல்போர்னில் நடைபெற்ற போட்டியில் இந்தியா 22 தங்கம் உள்பட 49 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் 4-வது இடத்தைப் பிடித்தது. இந்தியா அதிகபட்ச பதக்கங்களை வென்றது 2002-ம் ஆண்டு மான்செஸ்டரில் நடந்த போட்டிகளில்தான். இப்போட்டிகளில் 30 தங்கம், 22 வெள்ளி, 17 வெண்கலம் என மொத்தம் 69 பதக்கங்களை வென்றது. பதக்கங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இந்தியாவுக்கு நம்பிக்கை தரும் போட்டியாக உள்ளவை துப்பாக்கி சுடுதல், பளு தூக்குதல் மற்றும் மல்யுத்தம் ஆகிய போட்டிகள்.

இதுவரை நடந்த 18 பொதுநலவாய போட்டிகளில் இந்தியா பெற்ற மொத்த பதக்கங்களின் எண்ணிக்கை 271. ஒலிம்பிக் தங்க வீரர் அபினவ் பிந்த்ரா, மானவ்ஜித் சிங் சாந்து, தேஜஸ்வினி சாவந்த் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் துப்பாக்கி சுடுதலில் பங்கேற்கின்றனர். குத்துச் சண்டையில் 10 தங்கப் பதக்கங்களும், மல்யுத்தத்தில் 21 தங்கப் பதக்கங்களும், பளு தூக்குதலில் 15 தங்கப் பதக்ககங்களும் இப்போட்டியில் உள்ளன. இம்முறையும் பொதுநலவாய போட்டியில் பதக்க வேட்டையில் இந்தியாவுக்கு கைகொடுக்கப் போவது இந்த 3 போட்டிகளும்தான் என்றால் அது மிகையாகாது.

மேலும் ஹொக்கியிலும் இந்திய அணி பதக்கம் வெல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதல் முதலாக இம்முறை டென்னிஸ் விளையாட்டும் சேர்க்கப்பட்டுள்ளது. சானியா மிர்சா, சோம் தேவ் தேவ்வர்மன் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இதில் பங்கேற்கின்றனர். எனவே டென்னிஸிலும் பதக்கம் வெல்ல இந்தியாவுக்கு வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. அடுத்து இந்தியா இம்முறை வலுவாக உள்ள மற்றொரு போட்டி வில்வித்தை. பொதுநலவாய போட்டியை பொறுத்தவரை வில்வித்தையில் இந்திய வீரர்கள் இதுவரை எந்த பதக்கமும் வெல்லவில்லை. என்றாலும்கூட சமீபகாலமாக சாதனை நிகழ்த்தி வரும் முன்னணி வீரர்களான ஜெயந்த் தலுக்தார், ராகுல் பானர்ஜி, பம்பாயாலா தேவி, டோலா பானர்ஜி, தீபிகா குமாரி உள்ளிட்ட வீரர் வீராங்கனைகள் இப்போட்டியில் பங்கேற்பதால் இதிலும் பதக்கம் வெல்ல இந்தியாவுக்கு ஓரளவு வாய்ப்புகள் உள்ளன.

பாட்மிண்டனில் சாய்னா நெவால், சேத்தன் ஆனந்த் ஆகியோர் சாதிக்கக் காத்திருக்கின்றனர். தடகளம், நீச்சல் உள்ளிட்ட போட்டிகளிலும் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர். இம்முறை சொந்த மண்ணில் நடைபெறும் போட்டி என்பதால், ரசிகர்களின் ஆதரவு வீரர்களை மேலும் ஊக்குவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

குறைந்தபட்சம் 100 பதக்கங்களையாவது வென்று பட்டியலில் முதல் அல்லது 2-வது இடத்தை பிடித்துவிட வேண்டும் என்ற முனைப்புடன் இந்திய வீரர்கள் களமிறங்கி உள்ளனர்.

## உலகக் கிண்ணப் போட்டித் தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக முரளீதரன் அறிவிப்பு

எதிர்வரும் வருடம் இந்திய துணை கண்டத்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கட் போட்டித் தொடருடன் சர்வதேச கிரிக்கட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் அறிவித்துள்ளார். அண்மையில் இந்தியாவிற்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கட் போட்டித் தொடரின் போது முத்தையா முரளீதரன் டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளில் 800 விக்கட்டுகளை கைப்பற்றியமையை பாராட்டும் வகையில் முரளீதரனுக்கு சென்னையில் பாராட்டு விழாவொன்று நடைபெற்றுள்ளது. உலகக் கிண்ண போட்டித் தொடரில் பங்குப் பற்றியதன் பின்னர் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதற்கு தாம் உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவுஸ்திரேலிய போட்டித் தொடரிலும், உலகக் கிண்ண போட்டித் தொடரிலும் தாம் பங்குபற்றத் தீர்மானித்துள்ளதாக முரளீதரன் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சார்பில் தொடர்ச்சியாக போட்டிகளில் பங்கேற்பதற்கு தாம் உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



# குறை நிரப்பிகள்

## ஓடும் நீர் உறைவதில்லை 10
## இரண்டாம் பாகம்

நமது வாழ்வின் மிகவும் இரகசியமானதும் உண்மையானதுமான விடயம் என்னவெனில் நமது உயிர் வாழ்தலில் எமது சுய பங்களிப்பு என்பது மிக மிகச் சிறியதாக இருப்பதுதான். எமது உயிர்வாழ்தலில் எம்மைவிட ஏனையவைகளின் பங்களிப்பு என்பது எமது அறிவுக்கும் அனுபவத்திற்கும் அப்பாற்பட்டதாக அமைந்துள்ளமை ஒரு அற்புதமான விடயமாகும். அது மட்டுமன்றி நாமும் ஏனையவற்றின் உயிர்வாழ்தலுக்கு எம்மை அறியாமலேயே பங்களிப்புச் செய்துகொண்டிருக்கின்றோம். அதாவது உயிர் வாழும் ஒவ்வொன்றும் தனக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் தனது பங்களிப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. ஏனெனில் உயிர் வாழும் ஒவ்வொன்றினதும் சுய பங்களிப்பான சிறிய அளவைத் தவிர்ந்த மிகுதி முழுவதும் பிறவற்றால் நிரப்பப்பட வேண்டியதாக ஒவ்வொரு உயிரினத்தையும் இயற்கை உருவாக்கியுள்ளது. இதனால் உயிர் வாழும் ஒவ்வொன்றும் குறைநிரப்பிகளே. இந்த அரிய அற்புதத்தை அறிந்துகொள்வதுடன் இதன் மூலம் நாம் வாழ்க்கையில் எதைக் கற்றுக்கொள்ள முடியும் என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலில் இயற்கையின் சில பங்களிப்புக்களை அறிந்துகொள்வது நமது பங்களிப்பின் தன்மையை அறிந்து கொள் வதற்கு உதவியாகவிருக்கும். உயிர்வாழும் ஒவ்வொன்றுக்கும் அதன் உள்ளீடுகள் சிறியதாகவும் அவற்றின் வெளியீடுகள் அதிகமாகவும் அமைவது கவனத்தில் கொள்ளப்படவேண்டும். இயற்கையின் இந்தக் கொடையினால் தான் ஒவ்வொரு உயிரும் தன்னிடமுள்ள மேலதிகமானவற்றை மற்றைய உயிர்களுக்கு வழங்கக்கூடியதாக அமைகின்றது. ஆனால் இந்தப் பரிமாற்றம் என்பது எம்மை அறியாமலேயே நடந்து கொண்டிருப்பது தான் மிகவும் ஆச்சரியமானதும் நாம் அறிந்துகொள்ள வேண்டியதுமாகும்.

உலகில் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் அத்தனையும் அதிசயமானதே. ஆனால் நமது நாளாந்த வாழ்வானது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே எம்மை அடைத்து வைத்திருப்பதால் அந்த எல்லைக்கப்பால் எம்மால் செல்லமுடிவதில்லை. அதுமட்டு மன்றி மிகவும் அதிசயமான விடயங்கள் கூட சாதாரண விடயங்களாகி விடுகின்றன. உதாரணமாக, பசுப்பால். பசுப்பாலா? என நீங்கள் ஆச்சரியப்படுவது எனக்குப் புரிகிறது. பசுப்பால் ஒரு அதிசயம் மட்டுமல்ல அற்புதமும் கூட. ஒரு பசு, பச்சை நிறப் புல்லை உணவாக உண்டு விட்டு வெள்ளை நிறப் பாலை எமக்குத் தருவது அதிசயம். உணவு புல்லாக இருந்தாலும் புல்லிலே இல்லாத எத்தனையோ ஊட்டச் சத்துக்கள் பாலில் சேர்ந்திருப்பது அற்புதம். நாம் புல்லை உண்பதில்லை. ஆனால் பாலை அருந்துகிறோம். புல்லைப் பாலாக்கும் பசுவின் செயற்பாட்டை அறிவில் மிகுந்த நாம் ஒருபோதும் செய்யமுடியாது. இவ்வாறாக நாம் சேர்ந்து வாழ்கின்ற

விஞ்ஞானத்தால் இதுவரை அறியப்பட்டுள்ள கிரகங்களில் பூமியைத் தவிர வேறு எந்தக் கிரகத்திலும் பூமியில் உள்ளது போன்ற உயிரினங்கள் இருப்பதாக உறுதிப்படுத்தப் படவில்லை. இதற்கு அடிப்படையாக அமைவது அந்தக் கிரகங்களில் குறை நிரப்பிகள் இல்லாமையே.

இவை ஒவ்வொன்றும் தனித்தனியே முழுமையான தாக இருக்குமாயின் உயிர் வாழ்தலுக்கான சாத்தியம் இருக்கவே இருக்காது. உதாரணமாக, சூரியக் கிரகம் முழுமையானது. அங்கே நெருப்பு மட்டுமே முழுமை பெற்றிருக்கின்றது. அதனால் ஏனையவை இருப்பதற்குச் சாத்தியம் இல்லை. அதனால் குறைநிரப்பிகள் இல்லை.



விஞ்ஞானத்தால் இதுவரை அறியப்பட்டுள்ள கிரகங்களில் பூமியைத் தவிர வேறு எந்தக் கிரகத்திலும் பூமியில் உள்ளது போன்ற உயிரினங்கள் இருப்பதாக உறுதிப்படுத்தப் படவில்லை. இதற்கு அடிப்படையாக அமைவது அந்தக் கிரகங்களில் குறை நிரப்பிகள் இல்லாமையே.

ஒவ்வொன்றும் அதிசயமும் அற்புதமும் நிறைந்தது மட்டுமல்ல இயற்கையின் பங்களிப்பை ஒவ்வொரு உயிரும் உள்வாங்கி அதனை உருமாற்றி ஏனைய உயிரினங்களுக்கு உதவுவதன் மூலம் குறை நிரப்பிகளாகிவிடுகின்றன.

உயிர்கள் இல்லை. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதங்களும் ஒன்றுக்கொன்று குறைநிரப்பிகளாக இருப்பது இந்தப் பூமியில் தான். அதாவது இவை ஒவ்வொன்றும் முழுமையானவையல்ல. ஒன்றின் இயக்கத்திற்கு மற்றையதன் பங்களிப்பு தேவையாகின்றது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அவை தேவைப்படும் மாற்றத்துக்கும் தயாராகவுள்ளன. கடல் நீர் ஆவியாகி, மீண்டும் மழையாகி உயிரினங்களின் அடிப்படை வாழ்தலுக்குப் பங்களிப்பைச் செய்கின்றது. உப்பு நீரில் வாழும் உயிரினங்களுக்கு உப்பு நீரையும், உப்பு நீரில் வாழ முடியாத உயிரினங்களுக்கு அதே உப்புநீரை மழை நீராக்கி - நன்நீராக்கி தன் பங்களிப்பைச் செய்கின்றது இந்தக் கடல். இங்கே இந்தக் கடலின் செயற்பாடு எங்கெல்லாம் நீரின் தேவை இருக்கின்றதோ அங்கெல்லாம் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதுதான். அதாவது ஒன்று நிறைவு பெறுவதற்கு எவையெவை குறையாக இருக்கின்றதோ அவையெல்லாம் நிரப்பப்படுவதன் மூலம் அந்தக் குறை நிறைவாகின்றது. இயற்கையின் படைப்புக்களில் உள்ள அதிசயங்களும் அற்புதங்களும் எல்லையற்றவை. படைப்புக்கள் ஒவ்வொன்றும் குறை நிரப்பலுக்கான தகுதியுடன் படைக்கப்பட்டுள்ளன. புல், பூண்டு, மரம், செடி, கொடி, ஊர்வன, நடப்பன, பறப்பன, சிரிப்பன, அழுவன, கதைப்பன என எல்லாமே குறைநிரப்பிகள் தான். ஒவ்வொன்றும் குறை நிரப்புவதாலும் குறை நிரப்பிகளாலும் வாழ்ந்து கொண்டிருக் கின்றன. ஆனால், நாம் மட்டுமே இந்தக் குறை நிரப்பலின் சிறப்பை புரிந்துணர்வுடன் பயன்படுத்தி வாழ்க்கையை மேன்மேலும் சிறப்பாக்கும் தகுதியைப் பெற்றிருக்கின்றோம்.

KG Master-kgmaster@rogers.com

ஆம் வாசகர்களே!

இயற்கையின் படைப்புக்கள் அனைத்தும், மானுடம் உள்ளடங்கலாகக் குறை நிரப்பிகளாகப் படைக்கப்பட்டிருப்பினும் கூட, ஏனோ நாம் குறைபரப்பிகளாக மாறிவிட்டோம். பிறப்பிலிருந்து இற்றைவரை குறைநிரப்பிகளால் தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்பதை ஒவ்வொரு கணமும் நினைவில் கொள்வதன் மூலமே குறை பரப்பலுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும். நமது ஆரோக்கியமான உடலுக்கு உயிரினங்கள் அனைத்தும் குறைநிரப்பிகளாக இருந்தாலும் ஆரோக்கியமான மனத்திற்கு மனிதர்கள் தான் மிகப்பெரும் பங்களிப்பைத் தருகிறார்கள். இதனால் தான் மனிதனுக்கு மனிதன் சிறப்பான குறைநிரப்பிகளாக அமையவேண்டும் என்பது இயற்கையின் எதிர்பார்ப்பு. பெற்றோருக்குக் குழந்தைகள் குறை நிரப்பிகள். குழந்தைகள் பெற்றோர்களின் குறைநிரப்பிகள். ஆசிரியர்கள் மாணவர்களின் குறைநிரப்பிகள். மாணவர்கள் ஆசிரியர்களின் குறைநிரப்பிகள். இவ்வாறே கணவனும்-மனைவியும், மனைவியும்-கணவனும் ஒருவருக்கொருவர் குறை நிரப்பிகள். சுருக்கமாகச் சொல்வதாயின் ஒவ்வொரு உறவும் ஒவ்வொரு நட்பும் குறை நிரப்பலுக்கான அரிய வாய்ப்பாகவே அமைகின்றது.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

அமைதியின் குரல் - Words of Peace

- MAHARAJI -

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

மஹராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219



# தமிழ்ச் செம்மொழி மகாநாடு

## கடந்த இதழ் தொடர்ச்சி




தமிழர் என்பது பெருமை சேர்ப்பது: அமெரிக்காவின் பேர்க்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் மொழியியல் அறிஞர் ஜோர்ஜ் ஹார்ட் தமது தொடக்க உரையினில் 'மகாகவி பாரதியாரின் கூற்றினைப் போலவே தமிழர் எனச் சொல்வதில் பெருமை கொள்ள வேண்டும் ' என்றார்.

தனிச் சிறப்பு மிக்க தமிழ்மொழி இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே செம்மையானது. தமிழகம், கேரளா இலங்கை போன்ற பரந்த வெளிகளில் செவ்விலக்கியமாகப் பேசப்பட்டு வந்துள்ளது. என்றார். கடலில் மாய்ந்த இளம் பெரும் வழுதி எழுதிய 'உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் கொள்ளலர்' என்ற பாடலை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எவ்வளவு உயரிய கருத்துக்களை தமிழ்ப் பாடல்கள் கொண்டிருக்கின்றன என்பதற்கு இதுவே சான்று. வேட்கைப் பத்து என்ற சங்கப் பாடலில், 'வாழியாதன் வாழியவனி' என்று தொடங்கும் அடிகளில் இருந்து மழை பல பொழிக, வருக இரவலர் என உலகு உய்ய தேவையான கருத்துக்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன என்றார்.

பார்வையாளர்களைக் கவர்ந்தது இனியவை நாற்பது: 23ந்தேதி மாலை தமிழர்களின் கலாசார சிறப்பினை விளக்கும் வரையில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடை-பெற்றது. அது மாலை 5:45 மணிக்குத் தொடங்கி 7:00 மணிவரை நடப்பதற்கான ஒழுங்கு செய்யப் பட்டது. இதில் தமிழர்களின் கலை, இலக்கியம், கலாசாரம் பண்பாடு ஆகியவற்றை விளக்கும் சிற்ப மாதிரிகள், வடிவமைக்கப்பட்டிருந்தன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலைப் பகுதி மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வகையிலான ஊர்திகள் இடம் பெற்றன. ஊர்திகளைப் பின் தொடர்ந்து அந்த அந்தப் பகுதி மக்களின் கலாசாரத்தோடு ஒன்றிய நிகழ்ச்சிகளான கரகாட்டம் ஒயிலாட்டம், சிலம்பம் பொயக்கால் குதிரையாட்டம், கும்மி, கோலாட்டம் போன்றவையும் இடம் பெற்றன.

முல்லைக்குத் தேர்கொடுத்த பாரி, ஔவைக்கு நெல்லிக்காய் கொடுத்த அதியமான, மயிலுக்குப் பட்டாடை கொடுத்த பேகன், நட்பின் இலக்கணமாகக் கோப்பெரும் சோழன் மற்றும் பிசிராந்தையார், மனுநீதிச் சோழன், கண்ணகியின் சீற்றம் போன்ற போன்ற காட்சிகளும் வடிவமைக்கப் பட்டு



ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன. தமிழர்கள் ரோமானியர்களுடன் கடல் கடந்து வாணிபம் செய்வதை விளக்கும் வகையில் இடம்பெற்றிருந்த பண்டைய வாணிபக் கலம் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டிருந்தது மனதைக் கவர்வதாக இருந்தது. புறநானூற்றுத் தாய் போர்க்களத்தில் இறந்த தனது மகனை மடியிலிட்டு அழுவது போன்ற காட்சி மனதை உருக்குவதாக அமைந்திருந்தது. ஒரு வாகனத்தில் கரிகாலன் கட்டிய கல்லணை, ராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில், இராஜேந்திர சோழன் நிறுவிய கங்கை கொண்ட சோழபுரம் ஆகியவற்றினது மாதிரி உருக்களுடன் கலைஞர் கருணாநிதியால் கன்னியாகுமரியில் ஆக்கப் பட்ட வள்ளுவர் சிலையினது மாதிரியும் இடம் பெற்றிருந்தது.

எமக்கெல்லாம் முன்கூட்டியே அணி வகுப்பினை சிரமம் இல்லாது நின்று பார்ப்பதற்கான ஒழுங்குகளைச் செய்திருந் தார்கள் அமைப்பாளர்கள். எம் குழுவினைச் சார்ந்த பேராளர்களுக்கு ஊர்வலப் பார்வை மேடை திருப்பூர் நூற்பாலைக்கு அருகில்-5 வதினை அமைத்துக் கொடுத்திருந்தார்கள். எமது பேருந்தில் ஏறி அங்கு சென்று பிரச்சினை இல்லாமல் ஊர்வலத்தினை பார்த்திருக்கலாம்.

'என்ன பார்த்திருக்கலாம் என இழுக்கிறீர்கள். அப்போ பார்க்கவில்லையா?' என நீங்கள் கேட்கிற சத்தம் என் காதுகளிலே விழுகிறதுதான். அதற்கான பதில், 'பார்த்தோம் - பார்க்கவில்லை' என்பதே. காரணம் இரண்டு. முக்கியமான காரணம் எமது குழுவினில் அங்கம் வகித்த சிலர். மற்றையது பேருந்து ஓட்டுனர். நம் குழுவினில் அங்கம் வகித்த பலர் நேரத்திற்கு பேருந்து நிறுத்திய இடத்திற்கு வந்து சேரவில்லை. பெரும்பாலோர் வராமையால் பேருந்தினால் நேரத்திற்குப் புறப்பட முடியவில்லை. எல்லோரையும் ஏற்றிக் கொண்டே போக வேண்டும் என்பது ஓட்டுனருக்கு மேலிடத்து உத்தரவு. ஆகவே சாவகாசமாக வந்த சில நல்ல மனிதர்கள் புறப்பட வேண்டிய நேரத்தினை கணிசமான அளவு பின் தள்ள வைத்து விட்டனர். ஆகவே எமது பார்வை மேடையினுக்கு நேரத்திற்குப் போய்ச் சேர்வோமோ என்ற சந்தேகம் எழவே செய்தது. 'முடக்கழுதைக்குச் சறுக்கினது சாட்டு' என்றபடிக்கு சில நல்லாத்மாக்கள் ஊர்வல மேடை வேண்டாம் வண்டியை விடு தங்கு விடுதிக்கு அங்கு போய் ஈவு சோர்வாய் இருப்போம் என புரட்சிக் குரல் எழுப்பத் தொடங்கி விட்டார்கள். அவர்களுக்கு நாம் கோயம்புத்தூர் வந்ததின் பாவபுண்ணியம் இந்த அணிவகுப்பினைப் பார்த்தால் தான் போக்கிக் கொள்ளலாம் என இறைஞ்ச வேண்டி வந்தது.

ஒருபடியாக அவர்கள் மனம் மாறி சரி போ என்றார்கள். இப்போ பிரச்சினை ஓட்டுனர். சரி நான் உங்களைக் குறுக்கு வழியால் கொண்டு போய் பார்வை மேடை ஏற்றுகிறேன் என ஓட்டுனர் சத்தியம் பண்ணாத குறையாகச் சொன்னார். அவர் மறந்தது ஒன்று. அதாவது, தமிழ்ச் செம்மொழி மகாநாட்டிற்காக நம்மை எல்லாம் ஏற்றி இறக்குவதற்கு வந்த குளிரூட்டிய பேருந்துகள் பல, வேறு மாவட்டங்களிரிருந்து கொண்டு வரப் பட்டவை. ஆகவே ஓட்டுனர்களுக்கு கோயம்புத்தூரின் குறுக்கு வழிகள் அவ்வளவாகப் பரிச்சயமில்லை. அந்த வகையறா தான் நமது ஓட்டுனர். எண்ணித் துணிந்துவிட்டார் இந்த நல்லவர். குறுக்கு வழிகள் அவருக்குப் பல இடங்களில் வழிகாட்ட வில்லை. எனவே என்ன நடந்திருக்கும் என எண்ணுகிறீர்கள். ஒரு குறுக்கு வழயால் சென்று அணிவகுப்புச் செல்கின்ற பிரதான வீதிக்கு ஒரு நூறுயார் தூரத்தில் வருகிறோம், ஊர்வலம் பிரதான வீதியால் மெல்ல நகர்கிறது. ஊர்வலம் நகர்கிறது தெரிகிறது. ஆனால் நமது பேருந்து நகர்வதா? இன்னும் குறைந்தது 45 நிமிடமாவது செல்லும், பேருந்து அந்த இடத்தினை விட்டு நகர்வதற்கு. ஆம். அந்தக் குறுக்கு வீதியை நிறைத்து விட்டது மக்கள் கூட்டம். நம்மில் சிலர் பேருந்திலிருந்து குதித்து மக்கள் ஊடாகத் துளைத்துச் சென்று அண்மையில் நின்று பாதையால் செல்கின்ற ஊர்வலத்தினைப் பார்த்தனர். பரவசப்பட்டனர் இன்னும் சிலர் பேருந்தினில் நின்றபடியே எட்டி எட்டிப் பார்த்தனர். ஏக்கப் பெருமூச்சு விட்டனர். அவ்வளவுதான் பராப்தம். ஆனால் பின்னெரு நாள் அலங்கார ஊர்திகளைக் கண்குளிரப் பார்க்க முடிந்தது. அவற்றினைப் பார்வைக்கு வைத்திருந்தனர். ஆனால் ஆட்டங்கள் பாட்டுக்களுக்கு எங்கே போவது?



பொ. கனகசபாபதி
Email: vlambaram@sympatico.ca

NUTECHWORLD
Your Neighbourhood Computer Store
■ Computer (Desktop, Laptop)Repairs
Upgrades
Virus,Adware,Spyware,etc Removal
Data backup, Recovery.
FREE Diagnostic**
■ HP,DELL,ACER,IBM,NONAME
■ Printer Repairs - Laser,Inkjet
■ Networking - wired or wireless
■ We do in-home diagnostic & repairs with discounted rates
■ Other Services: Wallmount TV / Home theatre installation
Video Surveillance system
installation & maintenance
Batteries, Cables* 2 For $1.50
We Sell Computer / Electronic Accessories
CD/DVD Media, Cooling Fans, Cables,Laptop bags,
iPOT Accessories,Thermal Intake PSU's ,Usb hubs,
Tel :416 335 5222
Info@nutechworld.com
5214 Finch Ave.East. Unit #160. Scarborough- ONT
( GTA Square Mall - Middlefield & Finch)
*Selected items. ** Offer ends August 15, 2010. Applies to computers / Printer in store service only.

17.10.2010
SaiSwaralaya
School of Carnatic Music
விஜயதசமியை முன்னிட்டு புதிய கர்நாடக வாய்ப்பாட்டு,வீணை,பண்ணிசை வகுப்புகள் ஆரம்பம்.
Tel: 416 299 1514

# மாயத்துகள்கள் 25

சாதாரண சடங்கள் எல்லாம் மெய்த்துகள்களினால் ஆனவை. இந்த மாயத் துகள்களும் மெய்த்துகள்தான். என்ன வித்தியாசமெனில், அவற்றின் சக்தி, நேரம் என்பவற்றின் உறுதியின்மைக் கணியங்களின் பெருக்கம் $h/2\pi$ ஐவிடச் சிறியதாக இருந்தால் அத்துணிக்கையை அல்லது துகளை மாயத் துணிக்கை என்போம். அதாவது இவையும் சாதாரண இலத்திரன்கள், புரோத்தோன்கள், நியூத்திரன்கள் மற்றும் குவாக்சுகள்தான். உறுதியின்மைகளின் பெருக்கம்தான் அவற்றினை மெய் துகள்களா அல்லது மாயத் துகள்களா எனக் கூறுகின்றது.

## பேரண்டம் - 76

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சரி, இனி இந்த மாயத் துகள்கள் எவ்விதம் தோன்றுகின்றன என்பதனைப் பார்ப்போம். இதற்கும் அழகான விளக்கம் தருகின்றார்கள். வெற்றிடம் எனக் கூறுகின்றோமே, அவை உண்மையில் வெற்றிடமானவை அல்ல. ஏனெனில் வெற்றிடங்களின் ஊடாக மின்காந்த அலைகள், ஈர்ப்பலைகள் அதாவது சக்தியின் வடிவங்கள் செல்வதால் வெற்றிடங்கள் என நாம் கருதுபவை கூடச் சிறப்பான இயல்பைக் கொண்டுள்ளன என்பது வெளிப்படை. அதாவது வெற்றிடங்களில் மின்புலங்கள், ஈர்ப்புப்புலங்கள் என்பன செயற்படக் கூடியதாக இருக்கின்றன. எனவே வெற்றிடத்தின் உறுதியின்மைக் கோட்பாட்டின்படி, இந்த வெற்றிடத்தில்தான் மாயத் துகள்கள் தோன்றுகின்றன. ஏனெனில் நாம் கருதுகின்ற வெற்றிடம் ஒன்றுமேயில்லாத பூச்சியமெனில், அது உறுதியான நிலையாக அமைந்துவிடும்.



அப்படியாயின், எந்த ஒரு புலத்திற்கான வல்லமையும் வெற்றிடங்களில் காணப்பட முடியாது. எனவே, வெற்றிடங்களின் ஊடாக மின்காந்த அலைகள், ஈர்ப்பலைகள் செல்ல முடியுமெனில், அங்கே மாயத் துகள்கள் தோன்றி உடனேயே மறைகின்றன என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும், அல்லவா!

சரி, மாயத் துகள்கள் தோன்றுகின்றன, எப்படி? மாயத் துகள்கள் என நாம் அவற்றினை உறுதியின்மைக் கோட்பாட்டின்படி அழைக்கின்றோமே தவிர அவைகளும் சாதாரண துகள் போன்றவைதான். எனவே அவை தோன்றுவதற்கு, அயன்ஸ்ரைனின் பிரபலமான சமன்பாடான $E = mC^2$ இன்படி சக்தி தேவையல்லவா! இந்தத் தேவையான சக்தியை வெற்றிடத்தில் இருந்தே (கடனாகப்) பெறுகின்றன. அதாவது ஒன்றுமேயில்லாத வெற்றிடத்தில் இருந்து சக்தியை எடுத்து மாயத் துகள்கள் தோன்றுகின்றன. சாதாரண சக்தியில் இருந்து நேர், முரண் சோடித்துகள்கள் தோன்றுவது போலவே, இந்த மாயத் துகள்களும் வெற்றிடத்தின் சக்தியை எடுத்து அல்லது வெற்றிடத்தில் இருந்து நேர், முரண் துகள்களாகத் தோன்றுகின்றன. இங்கு ஒரு சிக்கல் இருக்கின்றது. உண்மையில் வெற்றிடத்தில் சக்தி இல்லை. செம்மை பொறிமுறையின்படி, சக்தியை ஆக்கவோ அல்லது அழிக்கவோ முடியாது. ஆனால் குவாண்டம் உலகானது செம்மை விதிகளைப் பல இடங்களில் மீறியிருக்கின்றது. இதனைத்தான் குவாண்டம் நெகிழ்ச்சி என்கின்றார்கள்.

மிகவும் குறுகிய நேரத்துக்குள்ளேயே இந்த இரண்டு மாயத் துகள்களும் ஒன்றிணைந்து மறைந்து போகின்றன. இவ்விதம் மறைந்து போகையில் வெற்றிடத்தில் இருந்து பெற்றுக் கொண்ட சக்தியைத் திருப்பிக் கொடுத்து விடுகின்றன. இவ்விதம் வெற்றிடச்சக்தி நேர், முரண் மாயத்துகள்களாவதும் உடனேயே இந்த மாயத்துகள்கள் மீண்டும் வெற்றிடச் சக்தியாகி வெற்றிடத்துள் செல்வதும் தொடர்ந்து நடத்து கொண்டே இருக்கும். இந்த மாயத்துகள்களை இனம் காண முடியாது. ஏனெனில் அவ்வளவு குறுகிய நேரத்துள் அவை ஒன்றிணைந்து இல்லாமற் போய்விடுகின்றன. அது மாத்திரமல்லாது வெற்றிட சக்தியையும் இனம் காணமுடியாது. இந்த மாயத் துகள்களையோ அல்லது வெற்றிட சக்தியையோ இனம் காண முடியாதாகையால், அவ்விடத்தில் ஒன்றுமே இல்லாதது போலவே இருக்க, அவ்விடம் வெற்றிடமாகவே எப்பொழுதும் தோற்றும்.
வெற்றிடத்தில் தோன்றிய மாயத் துகள்கள் தோன்றிய உடனேயே ஒன்றிணைந்து இல்லாது போகின்றன எனக் கூறினேனல்லவா! அது எவ்விதம் நிகழ்கின்றது என அடுத்த தடவையில் பார்ப்போம்.


- கனி -
416.261.1348
kani1vimal@hotmail.com





MATH LESSON

15 Years Experience in Teaching Math

E.C Learning

Extra challenge

The Very First Time Introducing

A NEW PROGRAM FOR G9, G10, G11 & G12 Than Ever

SHARMA: 416.666.5515

416.878.3215

Special Considration For Enrich Programme Format

# முழங்கால் வலியை முறியடிக்கும் யோகா

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

**அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு வணக்கம்**

இப்போது நாம் குளிர்காலத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். வெளியில் உலாவித் திரிவதே பெரும் கஷ்டமாக இருக்கப் போகின்றது. நம்மவர்கள் எந்த வயதினராலும் தமது வயதிற்கு ஏற்றற்போல் உணவுப் பழக்கத்தை மாற்றுவது இல்லை, குறைத்துக் கொள்வதுமில்லை. எப்போதும் சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறோம். ஆனால் அதற்கு தகுந்தவாறு எந்த உடற்பயிற்சியும் செய்வதும் இல்லை. இதனால் உடல் எடை அதிகரிப்பதுடன் மூட்டுவலிகளும் பிறஉடல்வலிகளும் ஏற்படுகிறது.

உடல் எடையைக் குறைத்து ஆற்றலை அதிகரிக்கக்கூடிய பயிற்சி யோகாசனங்களுக்கு மட்டும்தான் உண்டு. பெரும்பாலான எல்லா நோய்களையும் இதன் மூலம் குணமாக்கலாம். அதற்குத் தேவையான விடாமுயற்சி, தன்னம்பிக்கை மற்றும் உணவு முறைகளைப் பின்பற்ற வேண்டும். நமது உடல் எல்லா வயதிலும் ஒரே மாதிரி இருப்பதும் இல்லை. அந்தந்த வயதிற்குத் தகுந்தபடி பயிற்சிகள் செய்ய வேண்டும்.

**முழங்கால் வலி எவ்வாறு உருவாகின்றது.**

இந்த வலி உடம்பில் ஏற்படக்கூடிய ஒரு சிறிய வலிதான். இதற்கு யோகாசனங்கள் மூலம் இலகுவான தீர்வுகள் உண்டு. இதற்கு டாக்டரிடம் சென்றால் மூட்டு தேய்மானம் ஆகிவிட்டது. அதனால்தான் மூட்டுவலி ஏற்படுகிறது என்பார்கள். ஆனால் அதன் பொருள் கால் நரம்புகளை இணைக்கக்கூடிய இணைப்புகளில் இருக்கும் ஒருவகையான குழம்பு இறுகிப்போனால், நரம்புகளில் கல்சியம் சத்து குறைந்து போனால் இம்மாதிரியான வலிகள் வர வாய்ப்புண்டு. எனவே இவ்வகையான இணைப்புகளுக்கு பொருத்தமான பயிற்சி கொடுக்க வேண்டும்.

உடல் எடை அதிகரிப்பதாலும் முழங்கால் வலி உண்டாகும். நிற்கும் போதும் நடக்கும் போதும் உடல் எடை கால்களுக்கு இறங்குவதால் அங்கே வலிகள் உருவாகின்றன. எனவே உடல் எடையைக் குறைக்க வேண்டும். மற்றும் செய்கின்ற வேலையைப் பொறுத்தும் வலி ஏற்படலாம். நீண்ட நேரம் ஒரே இடத்தில் நின்று கொண்டு வேலை செய்பவர்களுக்கும் இவ்வலி ஏற்படுகிறது.

உணவுமுறையில் அதிகமான பழவகைகள் காய்கறிகள் சேர்ப்பது நல்லது. சரியான நேரத்தில் உணவு உட்கொள்ள வேண்டும். தினமும் காலையில் சில குறிப்பிட்ட யோகாசனங்களை பழகி வந்தாலே இவ்வலிகளிலிருந்து விடுபடலாம்.





முழங்கால் வலி வந்தவர்கள் நீண்ட தூரம் நடப்பதை நிறுத்தவேண்டும். வெந்நீரில் அதிக நேரம் குளிக்கக்கூடாது. வாயுக்கோளாறு, மலச்சிக்கல் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும். குளிரானது



மூட்டுகளைத் தாக்காது தகுந்த ஆடைகளை அணிய வேண்டும். அத்துடன் பாதணிகளிலுள்ள, குறைபாடுகள் காரணமாகவும் முழங்கால் வலிகள் ஏற்படலாம்.

### முழங்கால் வலிகளுக்கு யோகாசனங்கள்

முழங்கால்களுக்குப் பொருத்தமான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. 'Use it or lose it' 'பயன்படுத்து அல்லது இழந்து விடுவாய்' என்பதாகும். எனவே இந்த முழங்கால்களுக்கு இளக்கத்தைக் கொடுத்து அதை சரிவர இயங்கச் செய்யும் வல்லமை யோகாசனத்திற்கு மட்டும் உண்டு.

1. பத்மாசனம் - Lotus Pose
2. வஜ்ராசனம் - Adventure pose
3. பாதஹஸ்தாசனம் - Head Knee Pose
4. தநூராசனம் - Bow pose
5. பஸ்ஸிமொத்தாசனம் - Forward Bend
6. ஹலாசனம் - Plough Pose
7. நின்ற பாத ஆசனம் - Tower Pose



போன்றவற்றை தினமும் 15 நிமிடங்களாவது பயிற்சி செய்து வந்தால் நாளடைவில் வலிகள் குறையும். அத்துடன் கால்களில் உறுதியும் தென்பும் உருவாகும். இதை விடுத்து வேறு சத்திர சிகிச்சைகளுக்கோ மருந்து மாத்திரைகளில் உபயோகித்தால் கொடிய பக்க விளைவுகளுக்கு ஆளாகி வருந்த வேண்டி ஏற்படும்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm

**HERBALL WELLNESS CENTRE**

3005 Islington Ave., NorthYork, ON

***(Wellness Centre To Nurture Spirit Mind & Body)***

(1) மருந்தை அருந்தாமல் மனதையும் உடலையும் தூய்மைப்படுத்தி அமைதி காணும் வழிமுறை

(2) எந்த வயதில் உள்ளவராயினும் மன அமையின்றி தவிகிகிறீர்களா? உடல் பருமன், உள உளைச்சல், மனவிரக்தி இவற்றினால் கவலைப்படுகிறீர்களா?

(3) கவலையை விடுங்கள். உங்களுக்கு வாழ்க்கை முறைப்படி இயற்கை வழியில் உங்கள் மனதையும் உடலையும் தூய்மைப்படுத்தும் மூலிகைகள், தியானம், யோகப் பயிற்சிகள், ஓய்வு எடுக்கும் முறை என்பன கற்றுத்தரப்படும்.

(4) பலவிதமான சித்த வைத்திய ஆலோசனைகள் உடலுக்கேற்ப அருந்தும் உணவு என்பன விசேட சேவைகளாகும்.

(5) 3 நாள் பயிற்சிப் பட்டறை, 5 நாள் பயிற்சிப் பட்டறை, 7 நாள் பயிற்சிப் பட்டறை என்பன நடைபெறும்.

(6) இங்கே 3 நாள் பயிற்சி பட்டறையில் நீங்கள் பெற்றுக்கொள்ளும் பயன் நீங்கள் 30 நாட்கள் விடுமுறை செல்வதால் ஏற்படும் பயனுக்கு சமனாகும்.

*செப்ரெம்பர் 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு Clinic ஆரம்பித்தது வைக்கப்படும். குறிக்கப்பட்ட இருப்பிடங்களே உண்டு. உங்கள் தேவைக்கு முந்துங்கள்.*

**அமைதியை நாடி அழையுங்கள் 416.997.4357**

**குறள்நெறி - லலிதா ஜசிக்கா**

**YOGA - MEDITATION CLASSLESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham -*** செல்வ சோதி - ***416.289.2033***

# திருநாகேஸ்வரம் - ராகுவின் பிறப்பிம் வரலாறும்

## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 86

கும்பகோணத்தில் இருந்து தென்கிழக்கில் காரைக்கால் செல்லும் நெடுஞ்சாலையில் இருக்கிறது, திருநாகேஸ்வரம். எல்லா ஊர்களிலும் பிரசித்திபெற்ற ஒரு கோயில் இருக்கும். இந்த ஊரில் இரண்டு கோயில்கள் உள்ளன. ஒன்று, உப்பிலியப்பன் திருக்கோயில். பெருமாளின் 108 திருப்பதிகளுள் ஒன்று. தாயார் அவதரித்த தலம். இன்னொரு கோயில், நாகநாதர் கோயில். நவக்கிரகத் தலங்களில் ராகு பகவானுக்குரிய விசேட தலம் என்ற பெருமையைக் கொண்டது.

முதலில் நாகநாதர் கோயிலுக்குப் போவோம்... ஐந்து அடுக்குகளைக் கொண்ட நான்கு கோபுரங்களோடு பிரம்மாண்டமாகக் காணப்படுகிறது, நாகநாதர் கோயில். பாதாள லோகத்திலிருந்து நாகராஜன் வந்து இங்குள்ள சிவபெருமானை வழிபட்டதால் இக்கோயிலின் மூலவர் நாகநாதசுவாமி என்றழைக்கப்படுகின்றார். நாகேஸ்வரர், நாகநாதர், சண்பகாரண்யேஸ்வரர் என்ற வேறு பெயர்களும் இவருக்கு உண்டு. ஒரு காலத்தில் இத்தலம் செண்பக வனமாக காட்சி அளித்தது. செண்பக மரத்து நிழலில் சிவபெருமான் லிங்க வடிவில் எழுந்தருளியிருந்தார். இதனால் இறைவனுக்கு சண்பகாரண்யேஸ்வரர் என்ற பெயர் ஏற்பட்டது என்கிறார்கள். இங்குள்ள இறைவியார் திருப்பெயர்: கிரிகுஜாம்பிகை, குன்றமாமுலையம்மை என்ற பெயரிலும் அம்மனைக் குறிப்பிடுகிறார்கள். தல விநாயகர்: சண்பக விநாயகர், தல மரம்: சண்பகம். ஆதிசேஷன், தக்ஷன், கார்க்கோடகன் (மூவரும் நாகராஜாக்கள்), கௌதமர், நந்தி, நளன், பராசரர், பகீரதன் முதலியோர் வழிபட்டு பேறு பெற்ற தலம் இது. நாகராஜாக்கள் வழிபட்ட தலமாதலின் 'திருநாகேச்சுரம்' எனப் பெயர்பெற்றது என்கிறார்கள். இப்போது மக்கள் வழக்கில் திருநாகேஸ்வரம் என்று வழங்கப்படுகிறது. சண்பகவனம், கிரிகின்னிகைவனம் என்ற வேறு பெயர்களும் இத்தலத்துக்கு உள்ளன.



நாகநாதசுவாமி கோயிலைக் கட்டியது, கண்டராதித்த சோழன் எனச் சொல்லப்படுகிறது. இக்கோயிலில் 16 கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவை கண்டராதித்த, இராஜராஜன், இராஜேந்திர சோழர் காலத்தியவையாகும். ஐந்து நிலைகளுடன் கூடிய ராஜகோபும் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மற்ற 3 திசைகளிலும் கோபுரங்களையும் மூன்று பிரகாரங்களையும் கொண்டு இவ்வாலயம் விளங்குகிறது. கிழக்கு கோபுர வாயில் வழியாக உள்ளே வந்ததும் நிருத்த கணபதி, நந்திதேவர், விநாயகர் காட்சி தருகின்றனர். இடது பக்கம் சூரியபுஷ்கரணியும், வலது பக்கம் நூற்றுக்கால் மண்டபமும் அமைந்துள்ளன. புஷ்கரணி சமீபம் எழுந்தருளியுள்ள மழுவாயுதம் தரித்த விந-ாயகரைப் போற்றித் துதித்து உள்ளே செல்ல வேண்டும். கருவறையில் மூலவர் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார். கருவறை சுற்றுப் பிரகாரத்தில் 63 நாயன்மார்கள், நடராஜர் சந்நிதி, நால்வர் சந்நிதி ஆகியவை அமைந்துள்ளன.

அம்பாளுக்கு இத்தலத்தில் இரண்டு சந்நிதிகள் உள்ளன. சுவாமி சந்நிதிக்கு அருகில் பிறை யணிவாள் நுதல் அம்மை தரிசனம் தருகிறாள். பிறை என்றால் சந்திரன். அம்பாளின் பெயருக்கு ஏற்ப ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாத பௌர்ணமி அன்று மாலை வேளையில் சந்திரனின் ஒளி அம்பாள் மேல் விழுவது இங்கு சிறப்பு. அதனால், கார்த்திகை மாதத்து பௌர்ணமி நாளில் அன்னையை தரிசிக்கவும் இந்த அதிசயக் காட்சியைக் காணவும் பெரும் திரளாக பக்தர்கள் கூடுவார்கள்.

இத்தலத்தில் ஒரு காலத்தில் பன்னிரண்டு தீர்த்தங்கள் இருந்ததாகக் குறிப்புக்கள் உள்ளன. இன்று கோயிலின் உள்ளேயே சூரிய புஷ்கரிணி என்ற ஒரு தீர்த்தம் காணப்படுகின்றது. இத்தீர்த்தத்தின் வலப் பக்கத்தில் நூற்றுக்கால் மண்டபம் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் காணப்படுவதோடு, ஒரு தேரின் மீது இம்மண்டபம் அமைந்திருப்பதுபோல மண்டபத்தின் கீழே கற்களாலான சக்கரங்களுடன் சுற்றிலும் நாட்டியமாடுவது போன்ற பாவங்களில் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இது தவிரத் தனிக்கோயிலில் மற்றொரு இறைவியாக 'கிரிகுசாம்பிகை' சந்நிதியும் உள்ளது. இங்கு அன்னை தவக்கோலத்தில் காட்சி அளிக்கின்றாள். இவள் உருவம் சுதையால் ஆனதால் அபிஷேகம் செய்வதில்லை. புனுகுச் சட்டம் மட்டுமே சார்த்துகிறார்கள். கிரிகுசாம்பிகைக்கு இருபுறமும் லட்சுமியும் சரஸ்வதியும் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றனர். வலதுபுறம் வீணையைக் கையில் தாங்கி சரஸ்வதியும் இடதுபுறம் கரங்களில் தாமரை மலரைத் தாங்கி லட்சுமிதேவியும் இருக்கின்றனர்.

## - வழிகாட்டி -

கிரிகுசாம்பிகை இங்கு கோவில் கொண்டதற்கு காரணமானவர் பிருங்கி முனிவர். இந்த முனிவர் சிவனை மட்டுமே வணங்குபவர். அருகிலுள்ள தன்னையும் சேர்த்து வணங்காமல் சிவபெருமானை மட்டுமே வணங்கி வந்த பிருங்கி முனிவரைக் கண்டு வெகுண்ட பார்வதி தேவி, இறைவனைக் குறித்து அர்த்தநாரீசுர வடிவம் வேண்டி இத்தலத்தில் சண்பக மரத்தடியில் கடுந்தவம் புரிந்தார். தவம் பலித்தது. அர்த்தநாரீஸ்வரராக வடிவம் எடுத்த சக்தி, முனிவரின் சதையையும், இரத்தத்தையும் எடுத்துக் கொண்டாள். எலும்புக் கூடாக மாறி மெள்ள மெள்ள நடமாடினாலும் சிவனை மட்டும் வணங்கும் தன் செயலை பிருங்கி முனிவர் மாற்றிக்கொள்ளவில்லை. இன்னொரு பக்கம், தன் பக்தனின் வேதனைக்குக் காரணமான அம்பிகை மேல் கோபம் கொண்ட இறைவன் அவளை பூவுலகம் சென்று சிலகாலம் தன்னை விட்டுப் பிரிந்து வழிபட்டு வரும்படியும், பின்பு மதுரையில் அவளை திருமணம் செய்து கொள்வதாகவும் கூறிவிட்டார். சாபம் பெற்ற அன்னைக்கு ஆறுதலாக அலை மகளும், கலை மகளும் துணை இருப்பார்கள் என்றும் இறைவன் கூறினார். இந்தக் கோலத்தையே, அதாவது தேவிக்கு துணையாக லட்சுமியும் சரஸ்வதியும் எழுந்தருளியுள்ள காட்சியை திருநாகேஸவரம் கோவிலில் கிரிகுசாம்பிகை சந்நிதியில் நாம் தரிசிக்கிறோம்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரால் பாடல் பெற்ற தலம் என்பதுடன், பெரிய புராண ஆசிரியர் சேக்கிழார் பெருமான் திருப்பணி செய்தது என்ற பெருமையையும் கொண்டது இக்கோயில். சேக்கிழார், திருநாகேஸ்வரரின் மேல் கொண்ட அபரிமிதமான ஈடுபாட்டின் காரணமாக கி.பி.12ஆம் நூற்றாண்டில் இக்கோவிலுக்கு திருப்பணி செய்து இரண்டாம் பிரகாரத்தில் ஒரு மண்டபத்தையும நிர்மாணித்துள்ளார். தம்முடைய சொந்த ஊரான குன்றத்தூரில் (சென்னைக்கு அருகில் உள்ளது) தாம் கட்டிய கோயிலுக்கும் திருநாகேஸ்வரம் என்றே பெயரிட்டுள்ளார். இவருக்குத் திருவடிஞானம் கிடைத்ததும் திருநாகேஸ்வரத்திலேதான் என்பது இன்னுமொரு சிறப்பாகும். சேக்கிழார், அவரது தம்பி பாலறாவாயர், அவர் தாயார் அழகாம்பிகை மூவருக்கும் இத்திருக்கோவிலில் தனி தனிச் சந்நிதி உள்ளது. அவர் மிகவும் நேசித்த தலம். இதனால் தம் ஊரான குன்றத்தூரில் இப்பெயரில் ஒரு கோயிலைக் கட்டினார். சேக்கிழார், அவர் தாயார், தம்பி

தொடர்ச்சி 18ம் பக்கம்


$100 $250 $100

$100 **Ontario Vegetarian Food Bank** $100

**Thanks giving food drive 2010**

www.vegfoodbank.ca

$250 **தொண்டர் சேவை மூலம் தொடர்ந்து வேலை வாய்ப்பு - Employment** $250

ODSP, Welfare வருவாயில் தாங்கி இருப்பவர்களாயின் எமது நிறுவனத்துடன் பதிவு செய்து தொண்டாற்றும் பொழுது எமது தொழில் வேலைவாய்ப்பு ஆலோசகர்கள் உங்களை உங்கள் தகைமை, திறமைக்கேற்ற தொழில் பயிற்சி அளித்து உங்களை ஆயத்தம் செய்வார்கள்.

$100 $100

எந்தவித ODSP, Welfare சம்பந்தமான உங்கள் பிரச்சினைகளுக்கும் இலவச ஆலோசனை வழங்கப்படும், மொழி பெயர்ப்பு சேவை உட்பட உங்களால் முடிந்தவரை தான தர்மம் செய்யுங்கள். நீங்கள் உண்ணும் பொழுது ஒருகைபிடி அடுத்தவருக்கு கொடுத்து உண்ணுங்கள்.

$250 $250

**தானமும் தர்மமும் தான் எமது தலைமுறையை வாழவைக்கும், வழிப்படுத்தும் வளப்படுத்தும்.**

$250 $250

உணவுத்தானம் செய்ய விரும்புவர்கள் உங்கள் கைகளால் பசித்திருப்பவர்களுக்கு உணவைக் கொடுக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

**தானம், தர்மம், தொண்டு**

$100 $100

**குமரன் - *(416)744 HELP (4357)***

*2370 Midland Ave. #B5 / Sheppard*

*2400 Finch Ave. West / Weston #10*

அலுவலக நேரம் 10am to 6pm Mon. - Sat.

$250

$100 $250 $100

# திருநாகேஸ்வரம்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

உருவங்கள் கோயிலில் உள்ளன. சேக்கிழாருக்கென ஒரு சந்நிதியும் 63 நாயன்மார்களின் உருவச்சிலைகளும் இடம் பெற்றுள்ளன.

இக்கோயிலின் இரண்டாவது பிரகாரம் தென் மேற்கு மூலையில் சிறந்த சிவபக்த கிரகமா கிய இராகு, நாகவல்லி, நாக்கன்னி ஆகிய தன் இரு தேவிமாருடன் மங்கள ராகுவாக அமர்ந்து காட்சி அளிக்கின்றார். இவருக்குகந்த நிறம் நீலம் என்பதால் நீல நிற ஆடை அணிவிக்கப்படுகிறது. பாலாபிஷேகத்தின் போது ராகு தலை மீது ஊற்றும் பால் தலையிலிருந்து வழிந்து உடல் மீது வரும் போது நீல நிறமாகி விடுகின்ற அதிசயத்தை இங்கு இன்றும் பார்க்கலாம். 1986ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ஆம் நாள் ஐந்தரை அடி நீளமுள்ள நாகமானது தனது சட்டையை மாலையாக இராகு பகவானுக்கு அணிவித்து இவரது பெருமையை உலகிற்கு உணர்த்தியது மிகச் சமீபகால அதிசயங்களில் ஒன்று. அதை எடுத்து பத்திரப்படுத்தி, இறைவனைத் தரிசிக்க வரும் பக்தர்கள் பார்வைக்குக் காட்சிப் பொருளாக கண்ணாடிப் பேழைக்குள் வைத்திருக்கின்றனர்.

ராகுவின் பிறப்பு வரலாறும் கிரகச்சிறப்பும் சுவை நிரம்பியவை. ராஜவம்சத்து மன்னன் ஒருவனுக்கும் அசுரகுலப் பெண்ணொருத்திக்கும் மகனாகப் பிறந்தவன் ராகு. தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையும்போது அசுரனாகிய ராகு உருமாறி தேவர்கள் வரிசை யில் சேர்ந்து மகாவிஷ்ணுவிடமிருந்து அமிர்தத்தைப் பெற்று உண்டுவிட்டான். உண்மை அறிந்த மகாவிஷ்ணு கையிலிருந்த அகப்பையால் அவனது மண்டையில் அடிக்க, தலை வேறு உடல் வேறாகி விழுந்தான். ஆனாலும் அமிர்தம் உண்ட மகிமையால் அவன் தலைப் பகுதியில் உயிர் இருந்தது. ராகுவும் தவறுக்கு வருந்தி இறைவனை வேண்டி நிற்க, இறைவன் பாம்பின் உடலை அவனுக்குக் கொடுத்து அவனை ஒரு நிழல் கிரகமாகவும் ஆக்கினார்.

இத்தலத்தில் முருகப்பெருமான் ஒரு திருமுகத்துடனும் நான்கு திருக்கரங்களுடனும் நின்ற கோலத்தில் தனது தேவியர் இருவருடன் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இவரை அருணகிரிநாதர் தனது திருப்புகழில் பாடியுள்ளார்.

ஆண்டு தோறும் வைகாசிப் பூச நன்னாளில் நடைபெறும் சேக்கிழார் திருவிழா, கார்த்திகை மாதத்தில் 10 நாட்கள் நடைபெறும் பிரம்மோத்சவம் ஆகியவை இங்கு விமரிசை யாகக் கொண்டாடப்படும். அந்நாட்களில்



லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள். இத்தலத்திலுள்ள சூரிய தீர்த்தத்தில் நீராடி நாகேசுவரரை வழிபட்டு சந்திரவர்மன் நாய் வடிவு நீங்கினான், இந்திரன் சாபம் நீங்கப் பெற்றான் என்பது வரலாறு.

பிரதி ஞாயிறுதோறும் மாலை ராகு கால நேரத்தில் ராகுவுக்குப் பாலாபிஷேகம் நடைபெறுவது மிகச் சிறப்புடையது என்பதால் அன்றும் நல்ல கூட்டம் இருக்கும். ராகுவைப் போலக் கொடுப்பாரும் இல்லை, கேதுவைப் போல் கெடுப்பாரும் இல்லை என்பது பழமொழி. இங்கே வழிபட்டுதான் கௌதமர், அகலிகையோடு மீண்டும் இணைந்தார், நளன், தன் இழந்த செல்வத்தை மீண்டும் பெற்றான், பாண்டவர்கள், தாங்கள் இழந்த நாட்டை மீண்டும் பெற்றனர். அரசாங்கத்தில் பதவி, புகழ் பெறுவதற்கும், அதிகார அற்றலை அடைவதற் கும், உலகியல் விஷயங்களில் அறிவைத் தருவதற்கும், உள்ளத்தில் தெளிவை தருவதற்கும், அனைத்துலகிலும் பயணம் செய்வதற்கும் ராகு பலம் வேண்டும் என்பார்கள்.

தந்தை வழி பாட்டனாருடைய சொத்துகள் எல்லாம் அனுபவிப்பதற்கும் கூட ராகுவின் பலம் வேண்டும். அன்னியமொழி பேசுபவர்கள் மூலம் அதிகம் லாபங்களை கொடுப்பவரும் ராகுதான். கெட்ட வழிகளில்கூட ஒருவனை பொருளாதாரத்தில் உயர்த்துவதில் ராகுவிற்கு நிகர் ராகுவேதான் என்பார்கள். சூதாட்டம் போன்ற வகைகளில் பணம் சம்பாதிப்பது, பொய் சொல்லி ஏமாற்றுதல், அரசாங்கத்திற்கு எதிரான செயல்கள் செய்து பணம் ஈட்டுவது போன்றவற்றுக்கும் ராகு பிர சித்தமானவன். தவிர ராகு, கேது தோஷம் இத்தலத்தில் வழிபட்டால் நீங்கும் என்பது நம்பிக்கை.

திருமணம் தாமதமாதல், இல்லறத்தில் நிம்மதியின்மை, ஜாதகத்தில் பித்திரதோஷம், களத்திர தோஷம், காலசர்ப்ப தோஷம், சர்ப்ப தோஷம், மாங்கல்ய தோஷம் நீங்க, ஆகியவற்றுக்கும் இராகு பகவானுக்கு பாலாபிஷேகம், அர்ச்சனை, ஹோமம் செய்து பேறு பெறலாம்.

காலையில் குடந்தைக் கீழ்க்கோட்டம், நண்பகலில் திருநாகேச்சுரம், மாலையில் திரும்பாம்புரம் என்று ஒரே நாளில் வழிபடுவது விசேஷம் என்றும் சொல்கிறார்கள்.

திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி கோயிலுக்கு இவ்வளவு சிறப்பு என்றால், இத்தலத்தில் இருந்து 2 கி.மி. தொலைவில் உள்ள உப்பி லியப்பன் கோவில் என்கிற திவ்யதேசம் இன்னும் பல சிறப்புகள் கொண்டது. அதற்கு அடுத்த இதழில் போவோம்.

## எப்படி செல்வது?
## எங்கே தங்குவது?

கும்பகோணத்தில் இருந்து 5 கி.மி. தொலை வில் உள்ளது திருநாகேஸ்வரம். கும்பகோணத் தில் இருந்து நகரப் பேருந்துகள் அடிக்கடி செல்கின்றன. கும்பகோணத்திலேயே நல்ல தரமான தங்கும் விடுதிகளும் உணவகங்களும் உள்ளன. நாகநாதசுவாமி கோயில் காலை 6 முதல் 12 மணி வரையிலும், மாலை 4 முதல் 8.45 மணி வரையிலும் திறந்திருக்கும். ஆலய முகவரி: அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோவில், திருநாகேஸ்வரம், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம் - 612204, இந்தியா. தொலைபேசி: 0435 2463354.

YARL
WINDOW
BLINDS & DRAPERY
Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
VENETIAN/VERTICAL/ROLLER
WOOD/FORMWOOD
BLINDS
WOOD & VINYL SHUTTERS
WE ARE SPECIALIZED IN
CUSTOM MADE
Drapery & Blinds
CALL: N. SELVAM





We have experience
to make your home
more beautiful

APARTMENTS FOR RENT




$250 Move In Bonus
Best Building in Scarborough!
Clean, family building, FREE parking.
Close to schools, bus stop, Tamil store in building.
Pl. Call: 416.264.2818


ONE OLD MILL
BLOOR WEST
TRIDEL
BUILT FOR LIFE
மக்களின் முகல்தர தேர்வான
Tridel நிறுவனத்தின் புதிய வரவு
ONE OLD MILL
BLOOR WEST
VIP Discount Up to $5000
Call For More Information
HOMELIFE GTA REALTY INC.
416.321.6969
BUY THROUGH OUR BROKERAGE, YOU HAVE A CHANCE
TO WIN....
2011 3 Series BMW
CUBA VISIT FOR TWO FOR 1 WEEK
42" LCD TV
10 OTHER PRIZES
DRAW DATE:
SUNDAY | 28TH November, 2010
@ 4pm. in GTA SQUARE
HOMELIFE
HOMELIFE GTA REALTY INC.
BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED
1711 McCowan Rd., #206 Toronto, ON M1S 2Y3. Bus: 419.321.6969 | Fax: 416.321.6963
145 Traders Blvd., #29 Mississauga, ON L4Z 3L3. Bus: 905.712.2666 | Fax: 905.712.0037
www.homelifegtarealty.com




# சிலோன்

# ஒளியின் மொழி

இப்படம் இலங்கையைப் பற்றியது. இது கடந்த மே 18க்கு முன்னர் இந்தியாவில் படமாக்கப்பட்டது. இயக்குனர் சகாதேவனுக்கு இதுவே முதல் படம். இலங்கைப் பிரச்சினையில் தமிழர் படும் அவலங்களைக் கண்டு மனம் நொந்தே இப்படத்தை எடுத்துள்ளார். மிக மிக குறைந்த செலவில் எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் ஒரு கிராமம். ஒரு பகல் பொழுது. விடுமுறை நாளாக இருக்கவேண்டும் சூரியன் தனது கதிர்களை திறந்த மனதுடன் ஒளிக் கதிர்களை பரப்பிக் கொண்டிருந்தான். அங்கு சிறுவர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கின்றார் கள்.. சிறுவர்கள் விளையாட்டின் உச்சத்தில் தங்களது திறமைகளை காட்டிக் கொண்டிருந்தார்கள்.

தீடிரென ஒரு விமானம். எங்கிருந்தோ பறந்து வந்தது. சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்த மைதானத்தின் மேலாக பறந்தது. சிறுவர்கள் விளையாடுவதை விட்டு விட்டு விமானத்தை நோக்கி கைகளை



அசைத்து பரவசமானார்கள். விமானங்கள் கிராமத்திற்கு மேலாக பறத்தலே வெகு அருமை. விமானத்தை பார்த்த சந்தோசத்தில் ஆர்ப்பரிக்கின்றார்கள். சிறு வயதில் நாங்களும் ஜெட் விமானத்தின் புகை போன போக்கில் நடந்து போனதுண்டு.

காட்சி மாறுகின்றது. சூழலும் மாறுகின்றது. நாடும் மாறுகின்றது. இப்பொழுது கிளி-நொச்சி, அல்லது முள்ளிவாய்க்கால் ஒரு கிராமம். பகல் பொழுது. அதே சூரியன் திறந்த மனதுடன் ஒளிக் கதிர்களை பரப்பி விட்டு ஓய்வுக்காக காத்துக் கொண்டிருக்கின்றார். சிறுவர்கள் உதைபந்தாட்டம் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். இச் சிறுவர்களால் கிரிக்கெட் விளையாட முடியாது. அதற்கான வசதிகளும் இல்லை. உதைபந்துக்கு ஒரு பந்தும் சில கால்களுமே காணும். தீடிரென விமானம் எங்கிருந்தோ பறந்து வருகின்றது. தூரத்தே விமானச் சத்தம் கேட்டவுடனே இவர்கள் உசாராகி விடுகின்றார்கள். பங்கருக்குள் ஓடி ஒளிந்து கொள்கின்றார்கள். விமானம் வெகு வேகமாக இவர்கள் விளையாடும் மைதானம் நோக்கி பறக்கின்றது. ஒரு சிறுவன் பதுங்கு குழிக்குள் மரண பயத்துடன் ஒளிந்துள்ளான். இவனது முகத்தில் ஒரு ஈ. அவனது மரண பயம் அந்த ஈயை பற்றிக் கவலைப் படவைக்கவில்லை. அவனது முகத்தில் ஈ இருப்பதே அவனுக்கு தெரியாது. குண்டு போடும் விமானம் குண்டுகளை போடாமல் சென்று விடுகின்றது. சிறுவனின் முகத்தில் நிம்மதிப் பெரு மூச்சு. எமக்குமே.

**- ரதன் -**

ஒரு சாதாரண கதையை சிறந்த காட்சிப் படிமங்களினூடு படமாக்கியுள்ளனர்.





IT'S LIKE GETTING
200 SQ. FT. FREE
EQUIVALENT TO A MASTER BEDROOM, DOUBLE CLOSETS AND AN ENSUITE BATH!
2 Bedroom Suites from $331,700
1 Bedroom Suites from $186,300
MOVE IN EARLY 2011
DARE TO COMPARE
Up to 200 sq. ft. of extra space
more living space and a better price!
One & Two Bedroom + Den still available
pick the space to suit your lifestyle!
Outstanding amenities close by
every convenience at your door!
Ask us about our free upgrades!
CENTRO
THE HEART OF LIVING
HENDERSON DEVELOPMENT (CANADA) LTD.
Bell
401
PROGRESS AVE
SCARBOROUGH TOWN CENTRE
TOWN CENTRE CT
SALES OFFICE
BOROUGH DR
ELLESMERE RD
MCCOWAN RD
SALES OFFICE
1 Town Centre Ct
OFFICE HOURS
Mon to Thurs:
Noon - 7pm
Sat, Sun & Holidays:
11am - 5pm
LIVING SPACE WITH BREATHING SPACE
LIVINGCENTRO.COM
416.296.1898
PRICES AND SPECIFICATIONS SUBJECT TO CHANGE WITHOUT NOTICE. E. & O.E.


ELECT
NEETHAN SABA
"Change starts within our roots"
EMPOWERMENT . VISION . LEADERSHIP
Advance vote Oct. 16 to 21 / 2010
Elect NEETHAN SABA
School Trustee Ward 7 & 8
MIDDLEFIELD COLLEGIATE INSTITUTE
YORK REGION DISTRICT SCHOOL BOARD TRUSTEE
CANDIDATE WARD 7/8
ELECTION DAY OCT 25th 2010

# ஒலிம்பிக் போட்டியின் உன்னத தத்துவம்

புதுமாத்தளனில் புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள் என்று பல ஊடகங்கள் எழுதிவந்தன. இந்த உலகத்தில் எதுவுமே முற்றாகத் தோற்கடிக்கப்படு வதுமில்லை முற்றாக வெற்றி கொள்ளப் படுவதுமில்லை. இதை அறிய ஒலிம்பிக் போட்டிக்குள் ஒரு விளக்கம் இருக்கிறது.

எத்தனையோ வருடங்களாக கடும் பயிற்சி எடுத்து, ஒலிம்பிக் போட்டிக்கு வீரர்கள் வருகிறார்கள். அதில் ஒருவன் மட்டும் தங்கப்பதக்கம் பெறுகிறான், மற்றவர்களால் அது முடிவதில்லை. தோல்வியடைந்த ஒருவன் நான் தோற்கடிக்கப்பட்டுவிட்டேன், இனி எனக்கு எதிர்காலமே இல்லை என்று கண்ணீர் விட்டால் ஒலிம்பிக் போட்டியின் முடிவுதான் என்ன?

"உன்னை என்றும் மறவாமை வேண்டும். நான் மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க" என்ற காரைக்கால் அம்மையாரின் வேண்டுதல் நிறைவேறியே இருக்கும். காலம் என்னிடம் அவர்களை அழைத்துவர எண்ணினாலும் அவர்கள் விருப்பமில்லாமல் அவர்களை நான் வைத்திருக்கமாட்டேன்' என்று மரண தேவன் சொல்லியதாக ஒரு ஆங்கிலக்கவிஞன் பாடியதும் ஞாபகம் வருகிறது' உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்று அவர்தம் சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான் என்று சேக்கிழார் பெருமான் கூறியபடி சிவன் என்தலை மேல் தன்பாதம்பதித்து அஞ்சேல் என்று அருளி இன்னும் பதினைந்து ஆண்டுகளைத் தந்து இயங்க வைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். எனக்காக அல்ல. இந்த மனிதகுலத்துக்காக!

'வேண்டத்தக்கது அறிவோ நீ;
வேண்ட முழுதும் தருவோய் நீ' - திருவாசகம்.

வேறு என்ன,
பிறபின்பு,



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

# தன்னேரில்லாத் தமிழ்



காலத்தால் மூத்தவளே - என்றும்
கன்னியாய் இருப்பவளே
கோலத்தில் மணப்பெண்ணாய் - என்றும்
கோலோச்சி நிற்பவளே
ஞாலத்தின் திக்கெட்டும் - என்றும்
ஞாயிறாய் ஒளிர்பவளே
ஆலத்தின் விழுதினைப் போல் - பரந்து
ஆண்டாண்டாய் வாழ்கின்றாய்

காலில் சிலம்பொலிக்க - என்றும்
கலகலப்பாய் நடக்கின்றாய்
கையில் வளையலுடன் - என்றும்
கலங்கரையாய்த் திகழ்கின்றாய்
இடையில் மேகலையும் காதில்
இங்கிதமாய்க் குண்டலமும்
இவற்றோடு சிந்தாமணியாய் - என்றும்
சிறப்போடு வாழ்கின்றாய்.

பாரதியும் கம்பனும் பாட்டாலே
பாடி நின்றார் உன் புகழை
சேர சோழ பாண்டியரும் உடன்
சேர்ந்தே உன் புகழ் சேர்த்தார்
வீரத்தை வெளிக் கொணர்ந்தார்
செயங்கொண்டார் பரணியிலே
ஆரத் தழுவி நின்றார் உனை
அகநானூற்றுப் பாடல்களில்

அகத்தியர் தொல்காப்பியர் அன்று
இலக்கணத்தால் அணி சேர்த்தார்
செகமெங்கும் உன் புகழை
செழிக்க வைத்தார் கண்ணதாசன்
வகையாய் வளஞ்சேர்த்தார்
வள்ளுவரும் வாலியுமே
தொகையாய்ப் பாடல்களைத்
தொகுத்தளித்தார் வைரமுத்து

ஆறுமுக நாவலரும் ஆழ்புலமை
அறிஞரும் ஆக்கங்கள் தந்தாரே
அப்பர் சுந்தரர் அருமை மாணிக்கர்
சம்பந்தரோடு சைவம் வளர்த்தாரே
செப்பரிய சேவைகளைப் புரிந்தாரே
சீ வை தாமோதரம் உனக்கு
எப்போதும் துலங்கும் ஒளியாய்
தப்பாதி ருப்பாய் தன்னேரில்லாத்
தமிழே என் உயிரே!

----துறையூரான்-----

# Wall Street...

28ஆம் பக்கத்தொடர்ச்சி சக்தி தோன்றின் தங்களது வியாபாரம் பாதிக்கும்.

தொடர்ச்சியாக பல காட்சிப் படிமங்களில் பங்குச் சந்தையும் நியு யோர்க் நகரமும் காட்டப்படுகின்றது. இவை ஒரு நிரந்தர படிமங்களினூடே காட்டப்படுகின்றன. எது எப்படி இருப்பினும் இவர்கள் மட்டும் மாற மாட்டார்கள் என்ற விமர்சனம் இப் படிமங்களினூடு வெளிப்படுகின்றன. இங்குள்ள முகவர்கள் பேராசை பிடித்தவர்கள். அதுவே இவ் வீழ்ச்சிக்கு காரணம் என்ற மாயை இப் படத்தை பார்க்கும் பொழுது ஏற்படுகின்றது. இதன் பின்னணியில் உள்ள அரசு இந்த முகவர்களின் கையாட்கள். இருக்கும் சட்டங்களும், உருவாக்கப்படும் சட்டங்களும் இவர்களுக்கு சாதகமாகவே அமைந்துள்ளன. இதனை ஆழமாக ஆராயவில்லை. அரசின் மேல் கோபம் ஏற்படுவதற்கு பதிலாக இந்த முகவர்கள் மீதே கோபம் ஏற்படுகின்றது. மைக்கல் மூரின் Capitalisam Love Story ஏற்படுத்திய பாதிப்பை இப்படம் ஏற்படுத்தவில்லை.



ஒலிவர் ஒரு சிறந்த இயக்குனர் என்பதற்கு இப் படத்தில் பல காட்சிகள் உதாரணம். மைக்கல் டக்ளஸ் வழமைபோல சிறப்பாக நடித்துள்ளார். திரைக்கதை சொல்ல வந்த விடயத்துக்கும், வெளிப்படுத்தப்பட்ட விடயத்துக்குமான நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தவில்லை.
இவரது 1987ன் வோல் வீதியை 2010 கடக்க முடியவில்லை. இப் படத்தை பார்க்க முன்னர் முதலாவது வோல் வீதியை பார்த்தல் நல்லது.

மீண்டும் அடுத்த இதழில் TIFF 2010 படங்களுடன் சந்திப்போம்.

# தமிழர் மத்தியில் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப்பொருட்களை வழங்குவது




Niru Niru
நிரு
பிராண்ட்

# நிரு பிராண்ட் தயாரிப்புக்களே

# மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும்!

உலகில் மானுடம் பிறந்து, மடிந்து கொண்டிருக்கிறது. சிலர் தம் தடங்களை விட்டுச் செல்கிறார்கள். தமிழ் சினிமாப் பாடல்களும் காலம் காலமாக வந்து போகின்றன. ஆனால் சில மனதின் ஆழத்தில் மறைந்து விடுகின்றன. தமிழில் வந்த முதல் படம் காளிதாஸ்(?) முதல், எந்திரன் வரை (இந்தச் சொல்லை இந்நாட்களில் உச்சரிக்கா விட்டால் 'Out of Fashion'!) எல்லாப் பாடல்களையும் சேர்த்து வைக்க வேண்டும் என்று எனக்கொரு பேராசை!

பாடலின் வெற்றிக்குப் பல காரணங்கள். வரிகள், இசை, பாடியவர்கள், காட்சியமைப்பு இவைகள் தான் மேல்வாரிக் காரணிகள். இதில் ஒன்று பிழைத்துப்போய் தோல்வி கண்ட பாடல்கள் பல. அண்மையில் நம்மை விட்டுப் பிரிந்த ஸ்வர்ணலதா “அலை பாயுதே” படத்திற்காக பாடிய ஒரு அபூர்வமான பாடல் கீழே வருகிறது. இப்படிக் கூட பாடலுக்கு வரிகள் (வைரமுத்து) அமையுமா என்று அதிசயித்து இதைக் கேட்டுக் கலங்கினேன். அந்தக் குரலில் இருக்கும் தனிமை, ஏக்கம், சோகம் தாங்க முடியாத அளவுக்கு நெஞ்சை அடைக்கிறது.



- கிறிஸ்ரி-

எவனோ ஒருவன் வாசிக்கிறான்...
இருட்டிலிருந்து நான் யாசிக்கிறேன்!
தவம் போல் இருந்து யோசிக்கிறேன்..
அதைத் தவணை முறையில் நேசிக்கிறேன்!

கேட்டு கேட்டு நான் கிறங்குகிறேன்
கேட்பதை அவனோ அறியவில்லை
காட்டு மூங்கிலின் காதுக்குள்ளே
அவன் ஊதும் ரகசியம் புரியவில்லை... !

புல்லாங்குழலே பூங்குழலே
நீயும் நானும் ஒரு ஜாதி
உள்ளே உறங்கும் ஏக்கத்திலே
உனக்கும் எனக்கும் சரி பாதி

கண்களை வருடும் தேனிசையில்
என் காலம் கவலை மறந்திருப்பேன்
இன்னிசை மட்டும் இல்லையென்றால்
நான் என்றோ...என்றோ..இறந்திருப்பேன்!!

உறக்கம் இல்லா முன்னிரவில்
என் உள்மனதில் ஒரு மாறுதலா
இரக்கம் இல்லா இரவுகளில்
இது எவனோ அனுப்பும் ஆறுதலா...

எந்தன் சோகம் தீர்வதற்கு
இது போல் மருந்து பிறிதில்லையே
அந்தக் குழலைப் போல் அழுவதற்கு
அத்தனை கண்கள் எனக்கில்லையே!

mp3, mp4 அமைப்பில் இசை கேட்பது இன்றைய காலம். ஒலி நாடாக் காலங்களை நினைத்துப் பார்க்கிறேன்....

“உல்லாசப் பறவைகள்” இலங்கையில் வெளிவந்த நேரம், படம் பார்த்து விட்டு வந்தால்... “தெய்வீக ராகம், தெவிட்டாத பாடல் கேட்டாலும் போதும் இளநெஞ்சங்கள் வாடும்..” பாடல் கனவிலும் வந்து வாட்டியது. அப்படி ஒரு “காந்தம்” அப்பாட்டில்! ரேடியோவில் எப்போது இனி வரும் என்று யாருக்குத் தெரியும். K.S. ராஜா திரை விருந்து நிகழ்ச்சியில் சில வினாடிகளுக்குப் பாடலை ஒலிபரப்பி விட்டு ஸ்டைலாக “முற்றுமுழுதாக பாடல் கேட்க நீங்கள் பார்க்க வேண்டியது உல்லாசப் பறவைகள்” என்று சொல்லிவிட்டுப் போய்க்கொண்டிருந்தார்.

எங்கள் வீட்டுக்கு அருகே இருந்த ஒலி நாடா விற்கும் கடையில், கண்ணாடிப் பெட்டியில் “அதைக்” கண்டேன் நான்! காளி, குரு, உல்லாசப் பறவைகள் - மூன்று படங்களும் ஒரே ஒலி நாடாவில்! “பாடியாடாவிட்டால் என் மோகம் தீராது” என்ற நிலையில்”, அங்கே இங்கே சேர்த்து வைத்திருந்த பணத்தைக் (வீட்டில் ஆங்காங்கே இருந்த அவசர சில்லறைப் பேணிகளில், சில்லறை குறைந்தால் நானா பொறுப்பு?) கூட்டிக் கழித்து பார்த்து கடைக்கு ஓடினேன்.

நிதி உதவி செய்யாத வீட்டுச் சனமெல்லாம் பாட்டுக் கேட்கக் கூடியது. (இவனுக்கு எங்கால காசு எல்லாம் கொஞ்சம் லேட்டாக வரும் சிந்தனைகள்!) பாடல் வரும் போது “இந்தப் பாட்டுக்காகத் தான் காசெட்டே வாங்கினேன் என்று என் ரசிப்புத் திறனைப் பறை சாற்றலாம் என்று காத்திருந்தேன். பாடல்களும் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன. சில வீட்டுச் சனம், குருவின் “பறந்தாலும் விடமாட்டேன்” பாட்டை எல்லாம் சிலாகித்துப் பேச நானும் அவர்களை நோக்கி ஒரு அருவருப்புப் பார்வை(!) வீச, இவ்வாறாக ஒலி நாடாவே முடிந்து விட்டது!

எனக்குப் பகீர் என்றது, எங்கே எனது “தெய்வீக ராகம்”, அந்த தெவிட்டாத பாடல் இல்லையா? - ஓடினேன் கடைக்கு, “அண்ண, காசெட் வாங்கினான் ஆனா நான் விரும்பின பாட்டு இல்ல”, அவரும் காசெட்டை எடுத்து ஒரு பார்வை பார்த்து விட்டு, “நிறையப் பாட்டு இருக்கே தம்பி”, என்று சொல்ல நானும் விடாமல், “அண்ண, நான் வாங்கினது அந்த ஒரு பாட்டுக்காக, அந்தப் பாட்டு இல்ல எனக்கு இந்தக் காசெட் வேணாம்” என்று சொல்ல, அவர் முறைத்து, “அந்த ஒரு பாட்டுக்காக இந்தக் காசெட் வாங்கினதா என்ன நம்பச் சொல்லுறீரோ? நீர் வருங்காலத்தில நல்லாக் கதை எழுதலாம்(!), இப்ப போயிட்டு வாரும்”, என்று சொல்ல நானும் வீடு வரும் போது “பறந்தாலும் விட மாட்டேன்” வீட்டு நபருக்கு எப்படி இதை விற்கலாம் என்று யோசிக்க ஆரம்பித்தேன்.

சில வேளைகளில் சிங்கப்பூர் வானொலி ஒலி 96.8 இணையத்தில் கேட்பேன். அவர்களின் ஒரு நிகழ்ச்சிக்குப் பெயர் “மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும்”. அப்படி ஒரு பாடல் தான் இனி வரும் பாடல். இந்தப் பாடலின் மிகப் பெரிய பிளஸ், இதன் எளிமை! எந்தவித அரிதாரங்களும் இல்லாமல் இதுதான் நான் ஏற்றுக்கொள் என்று நம் முன் நிற்கும் பாடல். வரிகள் அடிக்கடி கேட்ட, படித்த வர்ணிப்புகள் தான். ஆனாலும் அதைப் பஞ்சு அருணாசலம் அடுக்கி இருக்கும் விதம் பிரமிப்பு! “உறவு சொல்ல ஒருவன்” படத்தில் இடம் பெற்ற யேசுதாஸ் பாடிய இப் பாடலை கேட்டுக் கொண்டே இருக்கலாம், வாழ்வு முடியும் வரை!

மோகனப் புன்னகை ஊர்வலமே
மன்மதலீலையின் நாடகமே

குளிர் விடும் கண்கள்
அன்பைப் பொழிகின்ற மேகம்
மலர்களின் வண்ணம் கொண்டு
சிரிக்கின்ற தேகம்
தளிர் விடும் இன்பம் யாவும்
தணிக்கின்ற எண்ணம் வேண்டும்



தழுவாத அங்கம் தொட்டு
உறவாட வா

இனிக்கின்ற கொவ்வைச் செவ்வாய்
அழைக்கின்ற ராகம்
துடிக்கின்ற கன்னம் ரெண்டும்
சொல்லட்டும் பாடம்
மழை முகில் கூந்தல் கண்டேன்
மதி முகம் தோன்றக் கண்டேன்
மனதிலே மஞ்சம் கண்டேன்
உறவாட வா

ஒரு புறம் உன்னைக் கண்டால்
கோபுரக் கலசம்
மறு புறம் பார்க்கும் போது
மேனகைத் தோற்றம்
நடையினில் அன்னம் கண்டேன்
இடையினில் மின்னல் கண்டேன்
அசைவினில் தென்றல் கண்டேன்
உறவாட வா!

வைரமுத்து ஒரு நேரத்தில் பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர்களின் பெயரும் காசெட், சிடிகளில் வெளிவர உழைத்ததாகப் படித்திருக்கிறேன். ஆனால் அது என்னோவோ இன்னமும் கனவாகத்தான் இருக்கிறது.

எத்தனையோ அருமையான பாடல்கள் வானலைகளை விட்டு மறைந்து விட்டது. இணையம் ஒரு மிகப் பெரிய ஆறுதல். பலர் இந்த அரிய பாடல்களை பதிவேற்றம் செய்து வைத்திருக்கிறார்கள்.

எந்தப் பழைய, முத்தான பாடல் பேசப்படும் போதும் “இலங்கை வானொலி” வராமல் போகாது. எல்லோரும் மிகுந்த பாசத்துடன் அந்நாளைய இலங்கை வானொலியை நினைவு கூர்கிறார்கள். எப்போதாவது நாம் விரும்பும் பாடல் ஒலிபரப்பப்படும் போது ஓடிச் சென்று வானொலி அருகில் இருந்து கேட்பது தனிச் சுகம்.

பாலப்பழத்தின் மணம் போயிற்று
பழஞ்சோறின் ருசி போயிற்று
நிலா காய்ந்த அந்நெடுநிலத்தின்
நினைவும் போயிற்று
உலா போயிற்று, ஊர் போயிற்று
துலாத் தாழ்த்தி நீரள்ளியுண்ட
துறையும் போயிற்று

- இரவி அருணாச்சலம்

# இன்னொரு... ஆச்சி வீடு

**பகுதி 6**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே

கடந்த இதழ் தொடர்ச்சி...

எரிந்து இரண்டுவாரங்களாகிவிட்டது. இந்த இரண்டு வாரமும் வச்சிரவேலுவும் நல்லை நாதனும் தனித்தனியாகவும் கூட்டாகவும் விசாரணைகளைச் செய்திருந்தார்கள். வீட்டுடன் சேர்ந்து இருவர் எரிந்து விட்டனர் என்பதால், அதுவும் சுவடு ஒன்றுமே இல்லாது எரிந்து விட்டதினால், மிகவும் கரிசனையாகவே தொழிற்பட்டார்கள்.

நல்லைநாதனும் வச்சிரவேலுவும் அதிகாரிக-ளாக இருந்தாலும் நல்ல நண்பர்கள். பொதுவாகவே நண்பர்கள் போன்றே பழகுவார்கள். இதனால் பல வழக்குகளை மிக எளிதாக இவர்களால் தீர்க்க முடிந்தது. அன்றும் இருவரும் காவல் நிலையத்தின் ஓர் அறையில் இருந்தார்கள். தாங்கள் இருவரும் திரட்டிய தகவல்களை ஒன்று சேர்த்துப் பார்ப்பதற்காகவே இருவரும் அங்கு கூடியிருந்தார்கள்.

**◊ சி.வி. நாதன் ◊**

"நாதன்" நல்லைநாதனை இப்படியாகத்தான் வச்சிரவேலு அழைப்பார். "சம்பவங்களை தொகுத்துச் சொல்லுங்கள் பாப்போம். ஏதாவது விடுபட்டு விட்டதோ எனப் பாப்போம்" என்றவர், வசதியாக இருந்து கொள்ள, நல்லைநாதன் ஆச்சிவீடு எரிந்த விடயம் பற்றித் தாம் சேகரித்துக் கொண்ட தகவல்களை ஒழுங்காகக் கூறத்தொடங்கினார்.

"இன்பன், இனியன் இருவரும் நாயகம், திலகம் தம்பதிகளின் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள். ஐந்து வருடங்களின் முன்னர்தான் இருவரையும் டொக்டர் மகாலிங்கம் ஒப்பரேசன் மூலம் தனித் தனியாகப் பிரித்திருந்தார். நீலகண்ட சாத்திரி யாரின் கணிப்பின்படி சிறுவர்களில் ஒருவனுக்கு எட்டு வயதுக்குள் உயிராபத்து ஏற்படவேண்டும். நீலகண்டரின் கணிப்பு இதுவரையில் பொய்த்ததில்லை என ஊரவர்கள் கூறிக் கொள்ளுகின்றார்கள். அதனால் பிள்ளைகள் இருவரையும் கவன-மாகப் பராமரிப்பதற்காக நாகராசனை நியமித்து இருக்கின்றார்கள் தம்பதிகள். நாகராசன் திலகத்திற்கு தூரத்து உறவினன், ஓரளவுக்குப் படித்தும் இருக்கின்றான். விஞ்ஞானம்தான் அவனது பிரதான பாடம். தொடர்ந்து படித்திருக்கக்கூடியவன். வசதி யின்மையினால் படிப்பை நிறுத்திவிட்டான்". இடையில் நிறுத்திக் கொண்டவர், மீண்டும் தொடர்ந்தார்.

"சிறுவர்களின் எட்டாவது பிறந்தநாளின் முதல்நாள் சம்பவம் நடந்திருக்கின்றது. சம்பவம் நடக்கையில் நாயகம் வீட்டில் இல்லை. திலகம் கல்வீட்டில் அவர்களது அறையில் நித்திரையாக இருந்திருக்கின் றாள். இனியன் மாமாவுடன் ஊர் சுற்றிப் பார்ப்பதற்குச் சென்றுவிட்டான். இன்பன்



நாகராசனுடன் ஆச்சிவீட்டுக்குள் நிற்கையில், ஆச்சிவீடு தீப்பற்றி எரிந்திருக்கின்றது. இன்பனும் நாகராசனும் ஆச்சி வீட்டுக்குள்ளேயே அடையாளமே இல்லாமல் எரிந்து சாம்லாகிவிட்டார்கள்.

இங்கே அவதானிக்க வேண்டிய விடயமொன்று உள்ளது. ஆச்சிவீட்டுக்குள் ஆச்சி பாவித்த பெரிய மரப் பெட்டகம், அவர்களது பரம்பரைச் சொத்தாக இருந்திருக்கின்றது. மற்றும்படி, வீட்டினுள் பெறுமதியான பொருட்கள் ஏதுமில்லை. எல்லாம் பழைய சாமான்கள்தான். வீடும் திறந்தே இருப்பதால் சில சமயங்களில் ஆடு மாடுகளும் உள்ளே போய், அறைகளுக்குள் தங்கிவிடுகின்றன. வீட்டுக்குள் எந்தவிதமான சமையல் பொருட்களும் இல்லை. முன்னறையில் மாத்திரம் விறகுகள் சேகரித்து வைத்திருப்பார்கள். இரசாயனப் பொருட்கள் கூட இல்லாத அவ்வீடு தானாகவே எரிவதற்கு எந்தவொரு முகாந்தரமும் இல்லை. அப்படியிருக்க, ஒரு அரை மணித்தியாலத்துக்குள் முற்றாகவே எப்படி அந்த வீடு எரிந்து முடிந்து, வெறும் மண் சுவர்களை மாத்திரம் விட்டு வைத்தது?"

தமது தொகுப்பை ஒரு கேள்வியுடன் முடித்துக் கொண்டார், நல்லைநாதன்.

"சரி, இவற்றை வைத்துக் கொண்டு என்ன முடிவை எடுக்கலாம்?" வச்சிரவேலு."ஒன்றுமே புரியுதில்லை. கண்ணைக் கட்டி நடுக் காட்டில் விட்டு விட்டது போலை இருக்குது. ஒரு சின்னத் தடயம் கூட இல்லாமலா இப்படி.... ஒருவேளை எதையாவது தவற விட்டுவிட்டோமோ!"

மேவாயைத் தடவியபடியே இருக்கையில் சாய்ந்து அமர்ந்தார் நல்லைநாதன்.

வச்சிரவேலு தனது கையில் இருந்த குறிப்புப் புத்தகத்தினைப் புரட்டியபடியே "நாங்கள் இதுவரையில் விசாரணை செய்தவர்களின் பெயர்களைப் பார்த்தால்.....நாயகம், திலகம், வேலைக்காரிகள் நாகம்மா, சின்னவள், வேலு, நாகன், நாகராசனின் மனைவியாக வர இருப்பவள்,. இராமலிங்கம், அவனது சிநேகிதன் குமாரு, ..."

இடைமறித்தார் நல்லைநாதன். "ஒருவரை தவற விட்டுவிட்டோம் என்று நினைக்கிறேன். முக்கியமில்லாதது போல் இருப்பினும் அவரை விட்டிருக்கத் தேவையில்லை" எனக் கூற, நல்லைநாதன் எவரைக் குறிப்பிடுகின்றார் என்பதனை உடனேயே புரிந்து கொண்ட வச்சிரவேலுவும், "ஓம் நாதன் நீங்கள் சொல்வது சரிதான். அதையும் ஒருமுறை பாப்போம்" என்று கூறிவிட்டு தமது இருக்கையில் நின்றும் எழுந்தார்.

இரண்டு நிமிடங்களில் இருவரையும் சுமந்து கொண்டு அந்தக் காவல் வண்டி விரைந்தது.

- இன்னமும் வரும்


## IDOL BANQUET HALL



50 - 250 பேர் கொள்ளக் கூடிய Banquet Hall இல் திருமணவிழா, பூப்புனித, பிறந்தநாள் வைபவங்கள் அனைத்தையும் சிறப்பாக கொண்டாடுவதற்கு

அழையுங்கள்: **416.908.8344**




விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com** அல்லது **www.tamilexpress.net**

# வெள்ளைப் பிரம்பின் ஒலிக்கு காது கொடுங்கள்!

## சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் - ஒக்ரோபர் 15



உலகம் பூராகவும் ஒக்ரோபர் 15 வெள்ளைப்பிரம்பு தினமாக அனுஷ்டிக்கப்படு கின்றது. வெள்ளைப்பிரம்பு, தான் வழிநடாத்தும் கண்பார்வையற்றவரை அடையாளம் காண உதவுவதுடன் அவரைப் பாதுகாக்கவும் உதவுகின்றது. இது கண்பார்வையற்றவரின் வாழ்வுடன் ஒன்றிப் பிணைந்துள்ளது.

இதன் பாவனை முதலாம் உலகப்போருடன் (1914-1918) ஆரம்பமானது. இப்போரில் காயமுற்று, உயிர் வாழ்ந்தவர்களில் பலர் கண்பார்வை இழந்து இருந்தார்கள். இது ஐக்கிய அமெரிக்காவில் வாழ்ந்த லயன் கழகத்தைச் சேர்ந்த பிரபல வைத்திய கலாநிதியான றிச்சாட் கூவரை (Richard hoover) அமெரிக்கா வாழ் கண்பார்வை யற்றவர்களுக்கு வெள்ளைப் பிரம்பை அறிமுகப்படுத்தத் தூண்டியது.

இன்னொரு சாரார் ஒரு விபத்தில் கண்பார்வையிழந்த ஒரு பிரித்தானிய படப்பிடிப்பாளர் ஜேம்ஸ் பிக்ஸ் (James Biggs) தனது பத்திரிகை படப்பிடிப்புத் தொழிலை தொடருவதற்கு குறிப்பாக வீதியைக் கடப்பதற்கும், வாகன ஓட்டு நர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கும், தான் பாவித்த பிரம்பிற்கு வெள்ளை நிறவர்ணம் பூசிப் பாவித்ததாகவும் அதுவே இதன் அறிமுகம் என்றும் கூறுவார்கள். அத்துடன் வெள்ளை நிறம் சமாதானத்தின் சின்னமாதலால் வெள்ளை நிறத்தை அவர் தேர்ந்தெடுத்ததாகவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு மேற்கத்தைய நாடுகளில் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வெள்ளைப்பிரம்பு பாவனை அதிகரித்தது. மேலும் லயன்ஸ் கழகமும் அது போன்ற சமுதாய நலன் கருதும் கழகங்களும் வெள்ளைப்பிரம்பை கண்பார்வையற்றவர் களுக்கு வினியோகித்ததால் இது மேலும் பிரபல்யமாகியது.

வெள்ளைப்பிரம்பை பயன்படுத்துவோர் அதை ஒரு அரைவட்டமாக பல கோணங்களில் தட்டுவதால் அவருக்கு இது சரியான பாதையை அமைத்துக் கொடுக்கின்றது. அத்துடன் அப்பாதை கரடுமுரடானதா, மென்மையானதா, குன்று, குளி உள்ளதா என்பதையும் அறிய முடிகின்றது. மேலும் வெள்ளைப் பிரம்பை அருகிலுள்ள சுவர், மரம் போன்ற பொருட்களில் தட்டுவதால் அவர் தான் பயணிக்கும் பாதையைப் பற்றி ஓரளவு ஊகிக்கக் கூடியதாக இருக்கும். படிகளில் ஏறியிறங்கும் பொழுதும் வெள்ளைப் பிரம்பு இவரை வழிநடாத்துகிறது. இது இவர்களின் சுதந்திர நடமாட்டத்திற்கு பெரும் உறுதுணையாயிருக்கிறது.

தற்பொழுது வெள்ளைப் பிரம்பு மெல்லிய இலேசான அலுமினியத் தகட்டிலிருந்து செய்யப்படுகின்றது. இதை செய்து விற்பனை செய்வதற்கு எல்லா நாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் உள்ளார்கள். இதன் அங்கீகரிக்கப்பட்ட நீளம் 3 அடி 9 அங்குலமாகும். (13 சென்ரி மீற்றர்) ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு அங்கீகரிக்கப்பட்ட அளவுகள் இருக்கின்றன. ஒருவரின் உயரத்திற்கேற்ப இது செய்யப்படுகின்றது.

யாழ். பஜாருக்கு அண்மித்த பகுதியில் விழிப்புலனற்றோர் சங்கம் அமைந்துள்ளது. இவர்களில் அநேகமானவர்கள் சுயதொழில் களில் ஈடுபட்டுள்ளார்கள். குறிப்பாக கதிரை பின்னல். இதில் இவர்கள் வல்லுனர்கள். இவர்களில் சிலர் சங்கீதம் குறிப்பாக சினிமாப் பாடல்கள் பாடுவதில் வல்லுனர்கள். யாழ். நகரில் தனியான இசைக் குழுவை ஸ்தாபித்து வழி நடாத்துகிறார்கள். வாத்திய உபகரணங்களை தாமே கையாள்கிறார்கள். இவர்கள் யாழ். நகரிலும், கொழும்பிலும் இசைக் கச்சேரிகள் நடாத்திப் பரிசில்கள் பெற்றவர்கள்.



சுண்ணாகத்தில் றொட்டியாலடியில் 'வாழ்வகம்' என்று அழைக்கப்படும் விழிப்புலனற்ற மாணவ, மாணவிகளுக்கான விடுதி இருக்கின்றது. இங்குள்ள மாணவ, மாணவிகள் இராமநாதன் கல்லூரியில் Braille முறையில் கல்வி கற்கின்றார்கள். மற்றும் கல்வியல் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் விழிப்புலனற்ற பட்டதாரி திரு. இரவீந்திரன் இவ்விடுதியில் தங்கியிருந்து இவ் விடுதியை நடாத்துவதுடன் அங்கு தங்கியுள்ள மாணவ மாணவிகளுக்கு கல்வி புகட்டியும் வருகின்றார்.

விழிப்புலனற்றவர்களில் சிலர் Braille தட்டச்சுயந்திரத்தில் தட்டச்சு செய்யக் கூடியவர்கள். கணினியிலும் தற்பொழுது Braille முறை புகுத்தப்பட்டுள்ளது.

நுணசை மாதகலைச் சேர்ந்த அல்போன்ஸ் அற்புதராஜா முதலாவது தமிழ் பேசும் விழிப்புலனற்ற சட்டத்தரணி. இவர் LLB பட்டப்படிப்பிற்காக கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி குறிப்பிட்ட காலத்திலேயே தனது சட்டப்படிப்பை முடித்து 2008 இல் பிரதம நீதியரசர் முன் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்தவர். கொழும்பில் தனது சட்டத்தரணி தொழிலை மேற்கொண்டுள்ள இவர் வழக்குகள் சம்பந்தமாக மல்லாகம் நீதிமன்றத்திற்கும் வந்து சென்றுள்ளார். இவர் கொக்குவில் ஆடியபாதம் வீதியில் இயங்கும் 'Association for the rehabilitation of the disabled' என்ற தொண்டர் ஸ்தாபனத்தில் அங்கத்தவராக இருக்கின்றார். இந்த ஸ்தாபனமும் இவர் கல்விக்கு உறுதுணையாக இருந்தது.

சகல நடைமுறைகளிலும் காலப்போக்கில் முன்னேற்றம் ஏற்படுவது போல் விழிப்புலனற்றோர் நடமாட்டத்திலும் மேலைத்தேசங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சிலர் வழிகாட்டி நாய்களை (Guide Dogs) தம்மை வழிநடாத்தப் பயன்படுத்துகிறார்கள். கனேடிய லயன்ஸ் கழகம் இந் நாயகனை பயிற்றுவித்து இறுதிக் கட்டப் பயிற்சியின்போது பாவனையாளரையும் வழிகாட்டி நாயையும் ஒன்றாக வைத்து 26 நாட்கள் பயிற்றுவிக் கின்றார்கள். இது அந்த வழிகாட்டி நாயை அதன் பாவனையாளருடன் பிணைப்பதற்காகவும் பாவனையாளருக்கு நாய் பராமரிப்பு சம்பந்தமாக விளக்கம் அளிப்பதற்காகவும் ஆகும். இதன் பின் இருவரும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியமாட்டார்கள். வழிகாட்டி நாய் பாவனையாளரின் பாதுகாப்பில் கண்ணும் கருத்துமாக இருக்கும்.

அரச சேவையிலிருந்து 2003 இல் நான் இளைப்பாறிய பின் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒழுக்காற்று சபையின் அங்கத்தவராகவும் (Member Tribunal of Inquiry), Association for the rehabilitation of the disabled என்ற தொண்டர் ஸ்தாபனத்தின் நிர்வாக உத்தியோகத்தராக வும் கடமையாற்றினேன்.

**விழிப்புலனற்றோர் வாழ்வு சிறப்பாக அமைய இந்நன்னாளில் பிரார்த்திப்போமாக!**



**சி. மார்க்கண்டன்**
(இளைப்பாறிய பிரதம தபாலதிபர் யாழ்ப்பாணம்)


# யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


# ஹயாத்தும்மா

ஹயாத்தும்மா உனது மௌத்து
எனது ஆத்மாவைத் துயருறுத்திற்று

நீ நெய்தல் கனவுகள்
நெய்த அலைகளில் கரைந்து அழிமை-
கயில்
உன்னால் எய்த முடிந்தது
மரணம் மட்டுமாயிற்று

தாயே
மனந்தாங்காச் சோகப் பாடலை
காற்றினில் எழுதியே மறைந்தனையோ

உனதினிய மகவு மீதான
தீராத அன்பைக் கலந்து
உனதான எதிர்பார்ப்பின் பின்னான
ஏமாற்றத்தின் ஏக்கத்திற்றோய்ந்து
கடத்தப்பட்டுக் காணாமல் போன
எம்மவரின் சுயத்தை அவாவி

எமது
கபளிடப்பட்ட வாழ்வு மீது
மனந்தாங்கவொண்ணாச் சோகப்
பாடலை
உந்தன் கடைசி மூச்சில் எழுதிச்
சென்றனையோ

உன் சாவின் மண் சாம்பல் மேடாயிற்று
இப்போ
சாம்பலின் துகள்கள் ஒவ்வொன்றும்
எனதும் உனதுமான இயலாமையை
இயம்பி இயம்பி அழுதிற்று

ஹயாத்தும்மா உனது மௌத்து
எதனைத்தான் ஆயத்தமாக்கிற்று
எம்மில்

\- முல்லை முஸ்ரிபா

*31.03.2001 அன்று மூதூரில் கடத்திச் செல்லப்பட்ட தன் மகனின் இழப்புத் தாழாமல் 15.04.2003 அன்று நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்ட தாயின் ஞாபகங்களுக்கு...*

# வைரா கரு அவர்களின் புதிய அலுவலகம்

ஞாயிற்றுக்கிழமை October 03,2010 ஆம் திகதி வைரா கருணாவின் மேட்கேஜ், காப்புறுதி மற்றும் வருமானவரி அலுவலகம் Middlefield & Finch இல் அமைந்துள்ள GTA Square, 5215 Finch Ave வில் 2 ஆவது மாடியில் இலக்கம் 217 இல் அமைந்துள்ளது. இவ்வலுவலகம் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் மரியா மினாவினால் திறந்துவைக்கப்பட்டது. அத்துடன் தமிழ் சமுதாயத்தின் பிரபல்யமான பலரும் கடந்த 20 வருடங்களாக வைரா கருவின் சேவையைப் பெற்று பலன் பெற்றவர்களும் வந்து வாழ்த்தி சென்றார்கள்.







Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga -905.712.2666

கனடா திருச்செந்தூர் முருகன் ஆலயம்
2400 Finch Ave. West , North York, ON

புரட்டாதிச்சனி ஹோம யாகம்
"தீராத வீனை தீர்ப்பான் திருச்செந்தூர் முருகப்பெருமான்"
ஆலய தொடர்புகளுக்கு 416.744.9568
இறைபணியில் குறள்நெறி - கௌரி மாலன்

வாங்கிப்படியுங்கள் குறமகளின்
• கூதிர்காலக் குலாவல்கள்
• அகணிதன் அல்லது நதியின் பிழையன்று
என்ற இரு குறுநாவல்கள் அடங்கிய நூல்
கிடைக்குமிடம்: விளம்பரம் பத்திரிகை காரியாலயம்
தொலைபேசி இலக்கம்: 416.282.8059
GTA Square - 5215 Finch Ave. E., #201
Middlaefield & Finch

Est. 1993
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா
பெருமையுடன் வழங்கும்
"மாவிலி வசந்தம் 2010"
பல்சுவை கலை நிகழ்ச்சி
Time: Saturday Oct 30th,2010 @ 5.30pm
Place: Markham Theater Auditorium
101 Town Center Boulevard ON
{Warden& Hwy7}
அனைவரும் பல்சுவை கலை நிகழ்ச்சியில்
கலந்து மகிழ்ந்து,சிறந்த அதிஷ்ட பரிசு
பொருட்களையும் பெற்றுச் செல்லுங்கள்.
தொடர்புகளிற்க்கு:
திரு.க.ஜயாத்துரை:(416) 890-5273

# "எனக்கு எதைப் பற்றியும் கவலையில்லை"



## சந்திப்பு: இயக்குனர் ராம்கோபால் வர்மா

சென்ற இதழ் தொடர்ச்சி

கேள்வி: உங்கள் படங்களிலேயே 'ரங்கீலா'வையும் 'க்ஷணா க்ஷண'மும் பாடல்களுக்காகவும் இசைக்காவும் பேசப்பட்ட படங்கள். 'க்ஷணா க்ஷண'வில் இசையமைப்பாளர் கீரவாணியை அறிமுகம் செய்தீர்கள். ஏ.ஆர்.ரஹ்மான் 'ரோஜா'வில் அறிமுகமாகிவிட்டார், என்றாலும் இந்தியைப் பொறுத்தவரைக்கும் 'ரங்கீலா'தான் அவருக்கு முதல்படம். அதுபோல் இசையமைப்பாளர் மணிஷர்மாவையும் நீங்கள்தான் அறிமுகப்படுத்தியதாக சொல்கிறார். இந்த மூவருமே இன்று இந்திய சினிமாவில் மிகப்பெரிய இசையமைப்பாளர்கள். இவர்களை எப்படி இனம்கண்டு அறிமுகம் செய்தீர்கள்? உங்களுக்கு இசை தெரியுமா?

ராம்கோபால் வர்மா: "என் சினிமா வாழ்க்கையின் ஆரம்ப காலம். ஏதாவது வாய்ப்புக் கிடைக்காதா என்று ஹைதராபாத் அன்னபூர்னா ஸ்டுடியோவை நான் சுற்றி வந்துகொண்டிருந்த காலம். அப்போது அங்கே 'கலெக்டர் காரி அப்பாயி' படத்தின் இசையமைப்பு நடந்து கொண்டிருந்தது. இடைவேளைகளில் இசையமைப்பாளர் சக்கரவர்த்தியும் இயக்குனர் பி.கோபியும் சேர்ந்து சாப்பிடுவதற்காக வெளியே செல்லும்போது, நான் இசையமைப்பாளரின் உதவியாளரிடம் அரட்டையடிப்பது வழக்கம். அப்போது அவர் தானே இசையமைத்த சில மெட்டுக்களை எனக்குப் பாடிக்காட்டுவது உண்டு. அதில் பல மெட்டுக்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்ததால், ஒருநாள் நான் அவரிடம் 'சிவா' திரைக்கதையிலிருந்து ஒரு காட்சியையும் அதை நான் எப்படி படமெடுக்கத் திட்டமிட்டிருக்கிறேன் என்பதையும் விவரித்து, அதற்கு எந்த மாதிரிப் பின்னணி இசை இருந்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டேன். ('சிவா' தமிழில் 'உதயம்' என்ற பெயரில் வெளியானது) அந்தக் காட்சிக்கு எந்தப் பின்னணி இசையுமே இருக்கக் கூடாது என்று அவர் சொன்னார். அந்தப் பதில், அதுவும் குறிப்பாக ஒரு இசைக் கலைஞர் அப்படிச் சொன்னது என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. உடனே நான் அவரிடம், எனக்கு எப்போதாவது இயக்குனராகும் வாய்ப்புக் கிடைத்தால் உங்களைத்தான் இசையமைப்பாளராக ஒப்பந்தம் செய்வேன் என்று உறுதியளித்தேன்.

இறுதியில் எனக்கு வாய்ப்புக் கிடைத்தபோது, இளையராஜாவோடு பணியாற்றும் சந்தர்ப்பம் திடீரென அமைந்தது. அதனால் நான் மிகுந்த குற்ற உணர்வோடு அந்த உதவியாளரிடம், எனக்கு இளையராஜா கிடைத்துவிட்டதால் நான் உங்களைப் பயன்படுத்த முடியாது என்று சொன்னேன். அவருக்கு அது மிகப்பெரிய ஏமாற்றமாக இருந்தபோதிலும், என்னுடைய சூழ்நிலையைப் புரிந்துகொள்வதாகச் சொல்லி வாழ்த்துக்களையும் தெரிவித்தார். ஆனால், அவரோடு நான் கழித்த நாட்களும் வளர்த்த கூட்டுறவும் குற்ற உணர்வாக வந்து என்னைக் கொன்றது. எந்தக் கணம் 'சிவா' மிகப் பெரிய வெற்றி என்று ஆனதோ, அப்போதே நான் அவரிடம் திரும்பிச் சென்று எனது இரண்டாவது படத்துக்கு அவரை ஒப்பந்தம் செய்தேன். அந்த உதவியாளரின் பெயர் கீரவாணி, அந்தப் படம் 'க்ஷணா க்ஷணம்'.

கீரவாணியிடம் ஒரு கீபோர்டு கலைஞர் வேலை செய்தார். அவரிடம் நான் அவ்வப்போது, குறிப்பாகப் பின்னணி இசைக்கூறுகளை அவர் அமைத்துக் கொண்டிருக்கும்போது தனியாக உரையாடுவதுண்டு. அவர் முயற்சி செய்தால் ஒரு சிறந்த இசையமைப்பாளராக மாறமுடியும் என்று நான் நம்பினேன். ஆனால், அவரோ அதை மறுப்பது வழக்கம், தான் அடிப்படையில் ஒரு கம்போசர் அல்ல என்று அவர் சொல்வார். நெடுநாளுக்குப் பிறகு, இந்தியில் "துரோகி" (தெலுங்கு 'அந்தம்') படத்தின்போது பர்மன் அவர்களோடு ஒரு சிறு பிரச்சினை ஏற்பட்டது. அப்போது கீரவாணியும் பிஸியாக இருந்ததால், நான் அந்த கீபோர்டு கலைஞனைக் கட்டாயப்படுத்தி ஒரு பாடலை அந்தப் படத்துக்காகச் செய்ய வைத்தேன். அந்தப் பாடலும் அந்தப் படமும் வெற்றியடையவில்லை. ஆனால், பிறகு மெகா ஸ்டார் சிரஞ்சீவியோடு ஒரு படம் செய்யவிருந்தபோது, நான் "துரோகி" படப்பாடல் வெற்றியடையவில்லை என்றபோதிலும் அந்த இசையமைப்பாளர் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை இருப்பதாகச் சொன்னேன். சிரஞ்சீவி என்னிடம் 'உங்களுக்குச் சரியென்றால் எனக்கும் சரியே' என்றார். அந்த கீபோர்ட் கலைஞர் பரவசமடைந்தார். ரசிகர்களின் கொண்டாட்டத்தோடு மிகப் பெரிய அளவில் துவக்க விழா நடத்தப்பட்ட அந்தப் படம் பல்வேறு காரணங்களால் பாதியிலேயே நின்றுபோனது. கீபோர்டு கலைஞர் சோகத்தில் மூழ்கினார். ஆனால், எடுக்கப்படாத அந்தப் படத்துக்காக அவர் பதிவு செய்திருந்த ஒரு பாடலால் மிகவும் கவரப்பட்ட சிரஞ்சீவி, தனது அடுத்த படத்தை அவருக்கே கொடுத்தார். 'சூடாலனி உந்தி' என்ற அந்த வெற்றிப்படம் அந்த கீபோர்டு கலைஞரை தெலுங்கு திரையுலகின் முன்னணி இசையமைப்பாளர்களுள் ஒருவராக ஆக வழிகோலியது. அந்த கீபோர்ட் கலைஞரின் பெயர் மணி ஷர்மா.

எனது முதல் படமான 'சிவா' பின்னணி இசை சேர்ப்புக்குத் தயாரான போது, சென்னையில் இசைக் கலைஞர்கள் சங்கத்தினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். அதனால் இளையராஜாவும் நானும் மும்பைக்குச் சென்றோம். அங்கு இளையராஜாவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு இசைக் கலைஞர்களின் அணி படத்தைப் பார்த்தது. அதில் வயலின் குழுவிலிருந்த ஒரு குறிப்பிட்ட வயலின் கலைஞர் மட்டும் என்னை நோக்கி நடந்துவந்து, இந்தப் படம் ஒரு மிகப் பெரிய அலையை உருவாக்கும் என்று சொன்னார். உண்மையில் எனது திரையுலக வாழ்வில், வெளியிலிருந்து எனக்குக் கிடைத்த முதல் பாராட்டு அதுதான். அதற்குப் பிறகு பின்னணி இசை சேர்ப்பு நடந்த காலம் முழுவதும் நானும் அந்த வயலின் கலைஞரும் அவ்வப்போது உரையாடிக் கொண்டிருந்தோம். சில வருடங்களுக்குப் பிறகு, "துரோகி" படத்துக்காக நான் பர்மனை ஒப்பந்தம் செய்தபோது, ஒரு பாடல் ஒலிப்பதிவுக்காக மும்பைக்குச் சென்றிருந்தேன். அந்த நாட்களில் நான் ஹைதராபாத்தில் இருந்தபடியேதான் செயல்பட்டுக்கொண்டிருந்தேன். மும்பைக்குப் பறந்து போவதும் வருவதுமாக இருப்பேன். அங்கே அதே வயலின் கலைஞரை மீண்டும் சந்தித்தேன். தான் சொன்னபடியே "சிவா" மிகப் பெரிய வெற்றியடைந்தபோது அளவில்லாத மகிழ்ச்சி அடைந்ததாகச் சொன்னார். அவர், இஸ்மாயில் தர்பார். அப்போது, அவரது நெருங்கிய நண்பர் என்று பாடலாசிரியர் மெஹ்பூப்பை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். அவரை நான் "துரோகி" படத்தில் அறிமுகம் செய்தேன். "துரோகி"யும் அந்தப் பாடலும் தோல்வியடைந்தன, ஆனால், சேர்ந்து வேலைசெய்ததன் மூலம் அந்தப் பாடலாசிரியரோடு உருவான நட்பு தொடர்ந்தது. நான் மும்பைக்கு செல்லும்போதெல்லாம் நானும், இஸ்மாயில் தர்பாரும் மெஹ்பூப்பும் கலந்துரையாடுவது வழக்கம். அது நான் 'ரங்கீலா'வின் கதைக் கருவைப் பட்டைதீட்டிக் கொண்டிருந்த காலம். நான் அவர்கள் இருவரிடமும் அந்தக் கதையைப் பற்றிச் சொன்னபோது, அவர்கள் மிகவும் உற்சாக மடைந்தார்கள். மெஹ்பூப் எழுதிய ஒரு பாடலுக்கு இஸ்மாயில் தர்பார் மெட்டமைத்துக் காட்டினார். அவர்களுடைய ஆர்வத்தால் கவரப்பட்டு, 'ரங்கீலா'வின் இசையை நீங்கள் இருவரும்தான் உருவாக்கப்போகிறீர்கள் என்று நான் வாக்களித்தேன். அவர்கள் பெருமகிழ்ச்சியில் திளைத்தார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு, மணிரத்தினம் தனது 'ரோஜா' படத்தின் பாடல்களை சென்னையில் இருக்கும் அவருடைய வீட்டில் வைத்து எனக்குப் போட்டுக்காட்டினார். நான் அசந்துபோனேன். ரஹ்மானின் தனித்துவமான இசையும் இசைக்கருவிகளின் ஒலிக்கோர்ப்பில் இருந்த புதுமையும் என்னைக் கவர்ந்தன. மிகுந்த பேராசையோடு, என்ன விலை கொடுத்தாகிலும் இந்தப் புதிய ஒலியை என் படத்திற்குக் கொண்டுவந்து சேர்க்க முடிவெடுத்தேன். இஸ்மாயில் தர்பாருக்கு நான் கொடுத்த வாக்குறுதியை மீறி, ரஹ்மானை ஒப்பந்தம் செய்தேன். இது இஸ்மாயில் தர்பாருக்கு கடும் கோபத்தை உண்டாக்கியதும், மனமுடைந்த நிலைக்குத் தள்ளியதும் புரிந்துகொள்ளக்கூடியதே. மெஹ்பூப் என்னிடம் கெஞ்சினார், தனது நண்பனுக்கு இப்படிச் செய்வது சரியல்ல என்று பரிதவித்தார். நான் அவரிடம் இந்த முடிவு படத்தின் நலனுக்காக மட்டுமே எடுக்கப்பட்ட தொழில் ரீதியான தீர்மானமே என்றேன். ரங்கீலாவுக்கு மெஹ்பூப் எழுதிய 'தனுஹா.. தனுஹா..' பாடல் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. நான் அந்தப் பாடலை மணிரத்தினத்திற்குப் போட்டுக்காட்டினேன். அது அவரை மிகவும் கவர்ந்தது, காரணம் 'தில், தீவானா, சனம்' போன்ற வழக்கமான வார்த்தைகள் இல்லாமல் ஒரு இந்திப் பாடலைக் கேட்டு வெகுகாலமாகிவிட்டது என்று அவர் சொன்னார். மணிரத்தினம் தனது 'பம்பாய்' படத்துக்கு மெஹ்பூபை ஒப்பந்தம் செய்தார். 'பம்பாய்' மற்றும் 'ரங்கீலா' படங்களின் மாபெரும் வெற்றியினால் மெஹ்பூப்க்கு இந்தித் திரையுலகில் பெரிய பெயரும் நன்மதிப்பும் உருவாகியது. அவர் அதைப் பயன்படுத்தித் தனது நெருங்கிய நண்பரான இஸ்மாயிலுக்கு சஞ்சை லீலா பன்சாலியிடம் சிபாரிசு செய்தார். அந்தச் சமயத்தில் சஞ்சை லீலா பன்சாலியும் தனது 'ஹம் தில் தே சுக்கே சனம்' படத்துக்காக ஒரு புதிய இசையமைப்பாளரைத் தேடிக்கொண்டிருந்தார். இப்படித்தான் 'இஸ்மாயில் தர்பார்' என்னும் இசையமைப்பாளர் உருவானார். 'ஹம் தில் தே சுக்கே சனம்' பாடல்கள் மாபெரும் வெற்றியடைந்தன. அந்தச் சமயத்தில் வந்த என்னுடைய 'தோட்' உள்ளிட்ட ரஹ்மானின் ஆல்பங்கள் சில சரியா-கப் போகாத நிலையில், இஸ்மாயில் தர்பார் இந்தித் திரையுலகின் புதிய இசை மேதையாக சிம்மாசனம் ஏறினார். நான் வாழ்த்துச் சொல்வதற்காக இஸ்மாயில் தர்பாரை தொலைபேசியில் அழைத்தேன். ஆனால், அவர் எனது அழைப்புகள் எதையும் எடுக்கவே இல்லை. அதன்பிறகு இஸ்மாயில் ஒரு பேட்டியில், 'ராம்கோபால் வர்மா உட்பட முன்பு என்னைக் கண்டுகொள்ளாதவர்கள் பலரும் இப்போது நான் மிகப் பெரிய வெற்றியடைந்துவிட்டதால் தேடிவருகிறார்கள்' என்று சொன்னார். 'ரங்கீலா' படத்திலிருந்து அவரை விலக்கியதால் ஏற்பட்ட மனவருத்தத்திற்குப் பழிவாங்கவே அவர் அப்படிச் சொன்னார் என்பது வெளிப்படை.

ஒருவருக்கொருவர் வெற்றிக்குக் காரணமாக அமைந்த நெருங்கிய நண்பர்களான இஸ்மாயிலும் மெஹ்பூபும் 'தேவதாஸ்' படத்தின்போது தங்களுக்குள் ஏற்பட்ட வேறுபாட்டின் காரணமாகப் பிரிந்தார்கள். அதன்பிறகு இருவருமே தங்களுடைய துறைகளில் கீழிறங்க ஆரம்பித்தார்கள். இப்போது பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் அவ்வப்போது என்னைத் தொலைபேசியில் அழைத்து நடந்தவற்றைச் சரிசெய்து விரிசலைப் போக்க முயல்கிறார்கள். ஆனால், நான் இப்போது வேறு புதிய கலைஞர்களோடு இணைந்துவிட்டதினால், அந்த இருவருடைய அழைப்புகளை எடுப்பதே இல்லை. இப்போது பழைய உறவுகளைப் புதுப்பிப்பதற்கு எனக்கு நேரமும் இல்லை, மனமும் இல்லை.

கேள்வி: முன்பெல்லாம் படங்கள் வெள்ளி விழா, நூறு நாட்கள், ஐம்பது நாட்கள் என ஓடுவதுண்டு. ஆனால் இப்போது மிகப் பெரிய வெற்றிப்படங்களே 2 முதல் 3 வாரங்கள்தான் ஓடுகின்றன. பலபடங்கள் வெளியான வார இறுதி நாட்களில் மட்டுமே ஓடி முடிந்து விடுகின்றன. இதனால் சினிமா தொழிற்சாலையே அழிந்துவிடும் வாய்ப்பிருப்பதாக பத்திரிகைகளில் வருகின்றன. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

தொடர்ச்சி 37ம் பக்கம்

# "எனக்கு...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

ராம்கோபால் வர்மா: இந்திய சினிமா தொழிற்சாலை அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக நான் நினைக்கவில்லை. இப்போதிருக்கும் விநியோக முறையின் மாற்றத்தையே இது காட்டுகிறது. இப்போது, ஒரு படத்தைப் பற்றி மிகப் பெரிய பரபரப்பை சூழலில் உருவாக்கி, வெளியான முதல் மூன்று நாட்களுக்குள் மிக வேகமாக எவ்வளவு முடியுமோ அவ்வளவு லாபத்தை அள்ளிச் சேர்த்துவிடுகிறார்கள். இது நுகர்வுக் கலாசாரத்தின் விளைவாக உருவான வியாபார யுத்தி. தனது படத்திற்கு டிக்கெட் கிடைக்காமல் பெரும் கூட்டம் அலைபாய்வதைப் பார்த்துப் படைப்பாளி மனவெழுச்சியும் மகிழ்ச்சியும் அடைந்த காலம் முடிந்துவிட்டது. இப்போது யாராவது ஒருவர் ஒரு படத்தைப் பார்க்க விரும்பினால் அவருக்கு உடனே டிக்கெட் கிடைக்க வேண்டும் என்பதைக் கருத்தில்கொண்டே தற்கால விநியோக முறை இயங்குகிறது. எனவே, நிறைய பிரிண்ட் போட்டு நிறைய தியேட்டர்களில் வெளியிடுகிறார்கள். முன்பு 50 பிரிண்ட் வெளியாகும். ஒரு தியேட்டரில் ஒரு நாளைக்கு 1000 பேர் பார்ப்பதாக வைத்துக்கொண்டால் 100 நாள் ஓடும் படத்தை ஒரு லட்சம் பேர் அந்த தியேட்டரில் பார்த்திருப்பார்கள். 50 தியேட்டரில் ஐம்பது லட்சம் பேர். இப்போது, 1000, 2000 பிரிண்டுகள் போடுகிறார்கள். ஒரு பிரிண்டை ஒரு நாளில் 1000 பேர் பார்ப்பார்கள் என வைத்துக்கொண்டால், 10 நாள்களில் ஒரு கோடி பேர் பார்த்திருப்பார்கள். எனவே, கணக்கு ஒன்றுதான்.

நுகர்வோர் ஒருவர் எப்போதாவது கோக் அருந்த நினைத்தால் அப்போதே அவர் கைக்கெட்டும் தூரத்தில் அது இருக்க வேண்டும் என்பதே கோக் நிறுவனத்தின் விற்பனை யுத்தி.



நேர்காணல் - சிவதாணு

அவருடைய குளிர்சாதனப் பெட்டியிலோ, அல்லது வீட்டுக்கு அடுத்திருக்கும் கடையிலோ, அல்லது எங்கெல்லாம் அவரது பார்வை திரும்புமோ அங்கெல்லாம் அது இருக்க வேண்டும். கிட்டத்தட்ட இதை நோக்கியே திரையுலகின் விற்பனை மற்றும் விநியோக முறையும் இப்போது நகர்ந்துகொண்டிருக்கிறது. இந்த மாற்றத்திற்கான பிரதான காரணம், தற்போது திரைப்படம் ஒரு நுகர்வுப் பொருளாகக் கருதப்படுவதே ஆகும். என்னுடைய 'சத்யா' மிகப் பெரிய வெற்றிப்படம் என்று நிறையபேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், அதற்குப் பிறகு நான் எடுத்த 'ஜங்கிள்' படம் சத்யாவை விட மூன்று மடங்கு அதிகமாக சம்பாதித்தது. ஏனென்றால், 'ஜங்கிள்" அதிகமான தியேட்டர்களில் ஒரே சமயம் வெளியாகி, நாடு முழுவதுமே பெரிய தொடக்க வசூலை அள்ளியது. ஆனால், 'சத்யா' குறைந்த அளவிலேயே வெளியிடப்பட்டது, மும்பை, நிஜாம் மற்றும் டெல்லி நகரங்களில் மட்டுமே நன்றாக ஓடியது. நிஜாமிலேயே கூட சத்யா 1.25 கோடியும், ஜங்கிள் 1.75 கோடியும் சம்பாதித்தன.

மேலும், பலரும் நினைத்துக் கொண்டிருப்பதைப் போல எந்தப் படமும் எந்தப் பணத்தையும் 'இழந்து' விடுவது இல்லை. திரைப்படத் துறையில் 90 படங்கள் நஷ்டமடைவதாக நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆனால் அதன் அர்த்தம் என்ன? பணம் தொலைந்து போய்விடுவதில்லை, மாறாகக் கை மாறுகிறது. ஒருவர் தான் 20 கோடியை ஒரு படத்தில் வீணடித்துவிட்டதாகச் சொன்னால் அதற்கு என்ன அர்த்தம்? அந்த 20 கோடி காற்றில் கரைந்துவிடவில்லை, பற்பல தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும், படப்பிடிப்புக் கருவிகளை வாடகைக்கு விடுபவர்களுக்கும், நடிகர்களுக்கும் மற்றும் திரைப்படத்தைச் சார்ந்து வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் பல்வேறு குடும்பங்களுக்கும்தான் பிரிந்து சென்றிருக்கிறது. நிறைய சம்பாதிக்கும் விருப்பத்தோடு 20 கோடியை முதலீடு செய்தவரது பார்வையில் மட்டுமே அது நஷ்டம் அல்லது தோல்வி. ஆனால், அந்தப் படத்தில் சம்பாதித்த அனைவருக்குமே அது வெற்றிதான். ஆகவே, மிகப் பெரிய பொருட் செலவில் எடுக்கப்படுகிற எந்தப் படத்திலும், அதில் 300 பேர் சம்பந்தப்பட்டிருந்தால், தயாரிப்பாளர் நஷ்டமடையலாம் மற்றும் இயக்குனரும் கதாநாயகனும் தங்களது சந்தை மதிப்பை இழக்கலாம். ஆனால், அவர்களைத் தவிர்த்து, 300யில் 297 பேருக்கு அந்தப் படம் இலாபமே.

கேள்வி: ரத்த சரித்திரம் பற்றி...

ராம்கோபால் வர்மா: படம் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. ஐந்து - பத்து நாட்களில் வெளியீடு இருக்கும். தமிழ் தவிர ஹிந்தி மற்றும் தெலுங்கிலும் இப்படம் ரிலீசாகிறது. சூர்யா, விவேக் ஓபராய், ப்ரியாமணி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஆந்திரத்தை கலக்கிய தாதா பரிதாலா ரவி பற்றிய படம் இது. ரவி கேரக்டரில் விவேக் ஓபராய் நடிக்கிறார். இந்நிலையில் போன் மூலமாக கொலை மிரட்டல் வந்திருக்கிறது. "போனில் பேசியவன் பரிதாலா ரவியுடன் இருந்தவன்." "எங்களை பற்றி தவறாக படத்தை எடுத்திருந்தால் உன்னை கொன்று விடுவேன்" என மிரட்டல் விடுத்தான். அதற்காக நான் ஒரு போதும் பயப்படவில்லை. உன்னால் முடிந்ததை செய்துக்கொள் என்றேன். இந்தப் படத்தால் இது போல் பிரச்னைகள் வரும் என எனக்கு முன்பே தெரியும். எனக்கு எதைப் பற்றியும் கவலையில்லை.

---

214

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை..

ரூபன் எத்தனையோ ஆண்டுகளுகளுக்கு முன்
வாங்கிக்கொடுத்த சி.டி பிளேயரில் நவராத்திரி மாலை
கேட்டுக்கொண்டு உலகரும்.. முருகேசரும்.. தங்கள்
பள்ளிக்காலத்தில் சரஸ்வதிபூசை எப்பிடி நடந்தது என வயது
முதிர்ந்தாலும் என்றும் முதுமையாகாத இளமைக்காலக்கதை-
களை அசைபோட்டுக்கொண்டிருந்தனர்.








எத்தனையோ வருத்தங்கள் சத்திரசிகிச்சையை முடித்து
நண்பர்களிலும் உறவினர்களிலும் வந்து பார்த்தவர்கள் பாதி..
வராதவர்கள் மீதி வருத்தம் துன்பம் கஸ்டம் ஒருவனுக்கு
வரும்போதுதான் நம்மோடு யார் இருக்கிறார்கள் யார்
விட்டுப்போகிறார்கள் எனத்தெரியும்.



உலகருக்குத்தெரியும்.. அன்று..
எத்தனையோ பிரபலங்கள் இறுதிக்காலத்தில்
ஆதரவற்றவர்களாக.. அனாதைகளாக இறந்தவர் பலபேர்..

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

ரூபனும் ரூபியும் ஜேர்மனி இத்தாலி பிரான்ஸ் சுற்றுலா போய்விட்டனர். வீடு
வெறுமையாகக்கிடக்கிறது. உலகரே முருகேசரை தன்னோடு வந்து தங்கும்படி
கேட்டுக்கொண்டார்..

அன்னம்மாக்கா உலகண்ணை ஸ்கூலுக்கு ஒழுங்காப்போகாட்டாலும் நவராத்திரி ஒன்பது
நாளும் ஒழுங்காப்போறவராம் ஏனெண்டா..
முருகேசர் நிதானமாக மெதுவாகத்தொடங்கினார் அவல் சுண்டல்..
ஆரவாரம் வகுப்புகள் நடைபெறுவது குறைவு.
உலகண்ணை கோஸ்டிக்குக் கொண்டாட்டம் தான் என்றா செக்கண்ட்
புளோர் செல்லம்மா.
சரஸ்வதி பூசையென்றால் எங்கும் விழாக்கோலம் தான்



சந்தனமும் ஜவ்வாதும் சேர்ந்து மணம் கமழ....
என்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் அதனை அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும்
என்பதுபோல எங்கும் நவராத்திரி விழாச்சிறப்புத்தான்

அது தவிர சூரன்போர்.. மானம்பூ.. குழந்தைகளுக்கு ஏடு
தொடக்குதல். அது மட்டுமல்லாமல் விவசாயிகளும் விசயதசமியில்
விதைத்தல் உழுதல் போன்ற நாள் வேலைகளைச் செய்கினறனர்.





அதுசரி செல்லம்மா முந்தி உலகண்ணை
ஆய்த பூசைக்கு..படிக்கிற புத்தகங்கள்
விவசாய ஆயுதங்கள் கத்தி மண்வெட்டி ஏர் கலப்பை எல்லாம்
வைச்சுக் கும்பிட்டவராம். இப்ப ஆய்த பூசைக்கு லாப்ரொப்,
ஐபொட், ஐபோன், செல்போனெல்லாம் தான் பிள்ளையள்
வைச்சுக்கும்பிடவேணும். ஏனெண்டா இப்ப உள்ள பிள்ளைய
ளின்ரை பாடங்களெல்லாம் ஐபொட்டிலும் ஐபோனிலையும்தானே
கிடக்குது என்று சொல்லிச்சிரிச்சா ஆட்டிலறி அன்னம்மா.


ADROIT HOME INSPECTION
Qualified, Professional Inspector
Home Renovation
& Preventive
Maintenance Tips
Call : Siva
416-875-6474
www.adroithomeins.com



# தமிழில் அர்ச்சனை

மொழிகளுக்கு அப்பாற்பட்டவன் ஆண்டவன். எனினும் வடமொழியும் தென் மொழியும் ஆயினான் காண் என தேவாரம் குறிப்பிடுவதிலிருந்து மொழிகளுக்கும் முழுமுதலுக்கும் தொடர்புண்டு என்பதை அறியலாம். இறைவனை வடமொழியில் மட்டும்தான் வழிபட முடியும் என்ற தவறான கருத்து பரவியதன் விளைவாக இந்து சமய திருக்கோயில்களில் வடமொழியே வழிபாட்டு மொழியாக இருந்து வந்துள்ளது. வழிபாட்டு மொழி மனிதனுக்கேயன்றி இறைவனுக்கு அன்று. எனவே வழிபடுவோரது மொழியிலேயே வழிபாடு நிகழ்தல் பொருத்தமானதாகும். ஒரு குறிப்பிடப்பட்ட மொழியிலே மாத்திரம் இறைவனை வழிபடுதல் வேண்டும் என்னும் கருத்து வரவேற்கத்தக்கதல்ல.

ஒவ்வொருவரும் தனது தாய்மொழியில் வழிபடுதற்கு உரிமை வேண்டும். பக்தர்கள் விரும்பும் பட்சத்தில் தாய் மொழியாம் தமிழில் அர்ச்சனை செய்யும் வசதி தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் உண்டு. சிதம்பரம் நடராஜர் கோயில் இதற்கு விதி விலக்காகும். அங்கு தீட்சிதர்களின் ஆதிக்கம் உள்ளது. அர்ச்சகர்களை பயிற்றுவிக்கும் கல்லூரிகளும் அண்மையில் தமிழ் நாட்டில் நிறுவப்பட்டுள்ளன. கடவுள் சிலையை தொட்டு பணி செய்வதற்கு ஆசார சீலமே அவசியமாகும்.



தாய் மொழியில் தான் மனிதன் சிந்திக்க முடியும். சிந்தனைகளை தெளிவாக உணர்த்த முடியும். இறைவனிடம் குறைகளை முறையிட்டு நிறைவை வேண்டிப் பெறுதற்கு தாய் மொழி வழிபாடே சிறந்தது. எனவே தாய் மொழி மூலம் அர்ச்சனை செய்தால் தான் எதிரே இருக்கின்ற மக்கள் விரும்பி மகிழ்ந்து கேட்பார்கள்.

செவிப்புலன் வாயிலாக செய்திகள் சென்று சேரும். இதனால் இறை குணங்களைச் சிந்திப்பார். அவற்றோடு ஒன்றுவார்கள், உணர்வார்கள். அந்தக் குணங்கள் அவர்களுக்குச் சொந்தமாகும். எனவே தமிழில் வழிபாடு செய்வதால் ஏற்படும் பயன்கள் இவையாகும்.

தமிழில் அர்ச்சனை மந்திரங்கள் இல்லை. வடமொழி அர்ச்சனை மந்திரங்கள் மிகப்பழமையானவை. அவற்றை எப்படிக் கை விடுவது என்று சிலர் வினாவலாம். வட மொழி - சமஸ்கிருதம் தேவபாஷை என்றும் கூறுவர். ஆனால் தமிழ் மொழியில் நம்மைப் பாடுக என்று சுந்தரருக்கு இறைவன் கட்டளை யிட்டதாகப் பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ள பாடலையும் அகத்தியர் இறைவனை தமிழ் மந்திரங்களால் வழிபட்டார் என்று பொருள்படும் காஞ்சிப்புராணப் பாடலையும் தமிழ் மொழி அர்ச்சனைக்கு சான்றுகளாகக் காட்டலாம். பாரதிதாசன் தமிழ்மொழி அர்ச்சனையை பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார்.

**“சொற் கோவின் நற் போற்றித் திருஅகவல்**
**செந்தமிழில் இருக்கும் போது**
**கற் கோயில் உட்புறத்தில் கால்வைத்தது**
**எவ்வாறு சகத்ர நாமம்”**

நூற்றியெட்டுத் திருப்பெயர் என்று வழங்குவது தமிழ் மறையிலும் பழையனவா? தமிழ் மறை அவ்வாறு ஆற்றல் அற்றதா? நாவரசர் அருளிய போற்றித் திருத்தாண்டகங்களும் மணிவாசகரது போற்றித் திருஅகவலும் ஓதி அர்ச்சனை செய்தற்குரியன அல்லவா? இவற்றிலும் மேலான மந்திரங்கள் உண்டு என்று ஆதி சைவ குருமார் கூறமுடியுமா? மற்றும் மறை மலை அடிகளும் மு. வரதராசனாரும் மற்றும் கடவுளை ஏற்காத பகுத்தறிவு இயக்கத்தினரும் தமிழ் மொழி அர்ச்சனையை வலியுறுத்தியுள்ளனர்.

ஆதி காலத்தில் தமிழக திருக்கோயில் களில் தமிழ் மொழியிலேயே அர்ச்சனை செய்யப்பட்டு வந்தது. பின்னர் தான் வடமொழி அதன் இடத்தைப் பிடித்துக் கொண்டது. மீண்டும் 1961 இல் தமிழகத்தின் அன்றைய அறநிலைய அமைச்சராக இருந்த பக்தவத்சலம் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் தமிழ் மொழி அர்ச்சனையை ஆரம்பித்து வைத்தார். இன்று தமிழக திருக்கோயில் களில் தமிழ் மொழி அர்ச்சனை நடைபெறுவதை அறியலாம். பிற மொழிகள் மீது கொண்ட வெறுப்பினா லன்றி ஒருவருடைய தாய் மொழிலேயே அர்ச்சனை செய்யப்பட வேண்டுமென்பது ஏற்புடையது. இது ஆதி சைவரின் ஆதிக்கத்தையும் தகர்த்து விடக்கூடியது. ஆதி சைவருக்கு இழுக்கும் உரிமை சீலமுடைய அனைவருக்கும் உரித்தாக வேண்டும். திருக்கோயில்களில் இறைவனை தீண்டி வழிபடும் உரிமை சீலம் மிக்கவர்க்கு இருக்க வேண்டியது அவசியமாகும்.

**கண்கட்டிச் சித்திரம் பார்ப்பதால் பயனுண்டோ!**



**நா. க. சிவராமலிங்கம்**


## Served Over 15 Years In Toronto Now in Richmond Hill



**NTE AUTO INC.**
**New Trade Engineering**

**MS7 Quality Used Car Sales**

**346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575 416-399-6640**

**சகல விதமான வாகனங்கள் திருத்தும் நிலையம்**
**தற்போதைய விசேட கழிவு சேவைகள் சில....**

**எங்களுடன் தொடர்பு கொண்டு Towing செய்து வருபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.**

| | |
|---|---|
| Front Brake Service From | $109. 95 |
| Rear Brake Service From | $109.95 |
| Transmission Service From | $ 99.95 |
| Lube & Oil Service From | $ 29.95 |
| Tire Change & Balancing From | $ 14.95 |
| Engine Tune up from | $159.95 |
| Air Conditioning Service From | $ 49.95 |
| Computer Scanning from | $ 39.95 |

We do BMW Service & Maintenance




Many more special, please contact for more information.




## Always made with a freshly cracked Canada Grade A egg.

The one and only Egg McMuffin®. Try it with a premium roast coffee for the perfect start to your day.

**NOW SERVING BREAKFAST UNTIL 11:00am EVERY DAY at the following locations:**

Kingston Rd. & Lawrence Ave.
Markham Rd. and Progress Ave.
Markham Rd. and Finch Ave.
Malvern Town Centre
Port Union and Kingston Rd.
Walmart - Milner Ave.
Walmart - Steeles Ave.

©2010 McDonald's

i'm lovin' it



# எனக்கும் இறைநியதி ஒன்று இருக்கின்றது

நான் பிறவி எடுத்து உயிர் வாழ்வதற்கும் எனது ஜீவியத்திற்கும் உள்ளார்ந்த தெய்வீகக் காரணம் ஒன்று இருக்கின்றது என்பதை விளங்கிக் கொண்டதும் கூடிய புரிந்துணர்வு எனக்கு ஏற்படும்.



உனது சிருஷ்டி நன்மை பயப்பது! நல்லவனாக வாழ்வதற்குத்தான் கடவுள் உன்னைச் சிருஷ்டித்தார். நீ இப்பொழுதும் நல்லவனாகத் தான் வாழ்கின்றாய். உடன்பிறந்த தீய இயல்புகள் ஒன்றுமே உனக்குள் இல்லை. ஏதோ ஒரு காரணத்திற்காகவே நீ படைக்கப்பட்டிருக் கிறாய். உன்னைச் சிருஷ்டித்த இறைவன் நீ அடைய வேண்டிய குறிக்கோளை திட்டவட்டமாக உன்னால் மட்டுமே நிறைவேற்ற முடியும். அந்தக் குறிக்கோளை அடைவதற்காகவே நீ பிறந்திருக்கிறாய். வேறொருவருக்கும் இல்லாத திறமைகள், ஆசீர்வாதங்களை வாழ்விற்கு நீ கொண்டுவருகிறாய். உனது குறிக்கோளை முற்றுமுழுதாய் விளங்கிக் கொள்வதற்கான ஆதாரமாகவே உனது ஒவ்வொரு அனுபவமும் அமைகின்றது. உனது குறிக்கோளை நீ பூரணமாக புரிந்து பயணிக்க வேண்டிய பாதையை எளிதாக்கு வதற்காகவே உன் வாழ்வில் குறுக்கிடும் ஒவ்வொருவரையும் நீ சந்திக்கிறாய்.

ஆனால் உலகின் மாயைப் பாதிப்பினால் உனது உள்ளார்ந்த சுயத்தையும், உண்மைக் குறிக்கோளையும் மறந்து வழி தடுமாறித் தத்தளிக்கின்றாய். உண்மையில் நீ தகுதி வாய்ந்தவன். ஆனபடியால் உனது குறிக்கோளை அடைய எப்படி வாழவேண்டும் என்பதை நீ தேர்ந்தெடுத்த தும் உனக்கு உதவி வரும் வெற்றிப் பாதையில் மீண்டும் பயணித்திட ஒத்தாசையும் வழிகாட்டலும் நிச்சயம் உனக்கும் கிடைக்கும். எந்த நேரத்திலும், தயங்காது உனது இலக்கை அடைவதற்கு அத்தியாவசியமான தேர்வுகளை நீ செய்யலாம். உனது இதயத்தையும் மனதையும் சரிசமனாக்கி சீர்செய்வது தான் உனது திறமைகளை வெளிப்படுத்தி சுலபமாக இலக்கை அடைவதன் திறவுகோல்.

உனக்காக எதைத் தேர்ந்தெடுக்கிறாயோ அதை இறைவன் உனக்குத் தந்து ஆதரிப்பார். உனது வாழ்வின் குறிக்கோள் என்ன? உனது அனுபவங்கள் எவ்வாறு உனது குறிக்கோளை அனுசரித்து உன்னை வழிநடத்துகின்றன என்று உன்னைப் படைத்த இறைவனிடம் கேள். எங்கும் நிறைந்திருக்கும் ஆண்டவன் உனக்கு உதவிட எப்போதும் காத்துக் கொண்டிருக்கிறார். அவரைப் பிரார்த்தித்து உனக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள். வாழ்வின் நியதியாக இறைவன் செயல்முறை விரியும். விரும்பியதை நீ பிரார்த்தித்ததும் யாசித்ததும் உனக்கு வரும் பதிலைக் கேட்டு அதை முற்றுமுழுதாய் நம்பு.

இன்றுவரை உனது ஜீவியம் ஏனோதானோவென்று தாறுமாறாக நடைபெற்றிருக்கலாம். இன்றுமுதல் உனது யாத்திரைக்கு ஆண்டவன் தந்திருக்கும் குறிக்கோளையும், அதை அடைய, நீ பெறவேண்டிய அனுபவங்களையும் முழு மனதுடன் விரும்பிக் கடைப்பிடிக்க ஆரம்பித்துவிடு.

**இறை வழிநடத்தலுடன் எனது குறிக்கோளை அடைந்திட நான் செய்ய வேண்டிய அனைத்தையும் இன்று சரி பார்த்துக்கொள்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 180

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புருடி


NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணனி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES

மோட்கேஜ் அல்லது Refinance செய்ய அல்லது எல்லா கடன்களையும் ஒன்றாக்கி ஒரு payment ஆக்கவேண்டுமா ???

"WHEN BANK SAY NO ! WE SAY YES"
- 1st,2nd & 3rd Mortgage
- Self Employed
- Purchases & Renewals
- Refinance & Debt Consolidation
- New Immigrant
- Bad Credit & Past Bankruptcy
PLEASE CALL
A. ANTON B.sc. Eng
PRINCIPAL MORTGAGE BROKER / DEVELOPER
CDN Financial & Mortgages Inc (FSCO: 11305)
880 Ellesmere Rd #203, Toronto ON
Tel: 416 575 5055
உங்களது புதிய இல்லத்தை அல்லது வியாபார நிறுவனத்தை புதிதாக வடிவமைக்க என்னை அழையுங்கள் !
- DESIGN
- CITY PERMITS
- PROJECT MANAGEMENT
- CONSTRUCTION LOANS
- SPECIALISED IN COMMERCIAL PLAZAS

AVM MAX 2000
Bus & Tour Company
5215 Finch Ave. East, Unit 250
(GTA Square Mall)
Toronto, ON M1S 0C2
For More Information Please Contact Us at:
(416) 609-2542
Fax: (416) 609-2551
E-mail: info@avmmax2000.ca
Website: www.avmmax2000.ca
- Tours/Charters
- Coach Buses (28-56 Passengers)
- School Buses (24-48 Passengers)
- Canada and U.S.A. Tours
- School Trips
- Sporting Events
- Niagara Falls Tours
- Area Attractions
- Churches/Temples
- Airport Shuttles
- Winery Tours
- Casinos and Bar Runs
- Shopping/Outlet Malls
- Etc...

